

## ஆசிரியர் உரை

# துக்க கரமான பரிசோதனை

# The Miserable Experiment

Louis Rushmore

சர்வவல்ல தேவன் தேவதூதர்களை உண்டாக்கினார். ஆதியாகமம் 2:1, ஏசாயா 45:12, நெகேமியா 9:6; அந்த தேவதூதர்கள் தங்கள் சிருஷ்டிகளுக்கு எதிராகக் கலகம் செய்தார்கள் [II பேதுரு 2:4; யூதா 6; வெளிப்படுத்தின விசேஷம் 12:9].அதன் விளைவாகக் இந்த தேவதூதர்களை சிருஷ்டித்ததே ஒரு துக்ககரமான பரிசோதனையாகத் தெரியும்.

தேவன் மனித இனத்தை சிருஷ்டித்தார் [ ஆதியாகமம் 1:26-27], தேவன் தேவன் இப்பூமியில் முதல் தம்பதியை உண்டாக்கி [ஆதியாகமம் 3:6] , அதன் பின்பு, மனித இனத்தில் மீதியானவர்களை சிருஷ்டித்தார். ஆனால், மனித இனம் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வீகத் தீர்மானங்களை மீறிப் பாவம் செய்தது [ ரோமர் 3:10,23]. இத்தகைய சூழலில் மரிக்கும் தன்மை கொண்ட மனிதர்கள், பரிசுத்த தேவனுடைய சமூகத்தில் இருப்பதற்கு தகுதியற்றவர்களாக மாறிவிட்டார்கள் [ஆதியாகமம் 3:23,24]; [ஏசாயா 59:13]; II தெசலோனிக்கேயர் 1:9]. இப்போது தேவனைப் பொறுத்தவரை மனிதனை சிருஷ்டித்ததும் ஒரு துக்ககரமான பரிசோதனையாக மாறிவிட்டது.

அதைத்தொடர்ந்து, கீழ்ப்படியாத மனித இனத்தைத் தண்டிக்கும் விதமாக தாம் படைத்த இவ்வுலகத்தை மாற்றி அமைத்தார் [ஆதியாகமம் 3:15-19;7:11,12:20-23;11:1-9]. தேவன் தாம் படைத்த எல்லாற்றையும் நல்லது என்று கண்டார் [ஆதியாகமம் 1:4,10,12, 18,21,25]. இப்பிரபஞ்சமும் அதிலுள்ள ஒவ்வொரு பகுதியும் நாள்தோறும் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. நாள்தோறும்

நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. ஒன்றுமில்லாமையிலிருந்து தேவனால் இவ்வுலகில் உண்டாக்கப்பட்ட எல்லாமே துக்ககரமான பரிசோதனையின் மாதிரியாகவே தோற்றம் அளிக்கின்றன [எபிரெயர் 11:3].

தேவன் தேவதூதர்களுக்கும், மனித இனத்துக்கும் தெரிந்தெடுக்கும் உரிமையைத் தானமாக கொடுத்த போது, தீர்மானம் எடுக்கும் திறமையையும் அவர்களுக்கு கொடுத்தார் [யோசுவா 24:15; I இராஜாக்கள் 18:21]. துரதிஷ்டவசமாக, சில தூதர்கள் தேவனை எதிர்ப்பதைத் தெரிந்துகொண்டார்கள். அதேபோல் எது சரி, எது தவறு என்று பகுத்தறியும் திறன் பெற்ற ஒவ்வொரு மனிதனும் அல்லது மனுஷியும் தன் வாழ்க்கையின் ஏதோ ஒரு கட்டத்தில் தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருப்பதை தெரிந்து கொண்டிருக் கிறார்கள். இப்பிரபஞ்சம் முடிவுக்கு வந்துகொண்டிருப்பது மட்டுமல்ல, மனிதர்கள், நீர், நிலம், காற்று போன்றவைகளை மாசுபடுத்துவதினாலும், பூமியின் வளங்களை அதிகமாகப் பயன்படுத்தி அதை ஈடு செய்ய மறுபயன்பாட்டு முறையை சரியாகப் பின்பற்றாதக் காரணத்தினாலும் அதன் முடிவை விரைவுபடுத்துகிறார்கள். தூதர்கள் மற்றும் மனிதர்களை உண்டாக்கியதில் ஏற்பட்ட தோல்வி, மேலும் நம் பூமி கோளின் சீரழிவு போன்றவைகளை கருத்தில் கொண்டால் இது எவ்வளவு மிகப்பெரிய துக்ககரமான பரிசோதனை என்று பாருங்கள்.

துக்ககரமான எனும் வார்த்தை **பரிதாபகரமான நிலை** என்றும் பொருள்படும். பரிசோதனை என்பது அறியாத ஒன்றைக் கண்டு பிடிப்பதற்காக பாதுகாக்கப்பட்ட சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்படும் ஒரு செயல் முறையாகும். அதேபோல், ஏதோ ஒரு கொள்கை அல்லது கோட்பாட்டை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்படும் ஒரு செயல் முறையாகும். மனிதக் கண்ணோட்டத்தில் விழுந்து போன தேவ தூதர்கள், விழுந்து போன மனிதஇனம், அழிந்து கொண்டிருக்கும் உலகம் போன்றவைகளெல்லாம் தேவன் அறியாத ஏதோ ஒன்றை கண்டுபிடிப்பதற்காகச் செய்த சோதனையின் விளைவு என்று தோன்றலாம். ஆனால், தேவனுடைய கண்ணோட்டத்தில் அப்படி எதுவுமேயில்லை.

தேவன் தேவதூதர்களையும், மனிதர்களையும், ஒட்டுமொத்த உலகத்தையும் சிருஷ்டித்த போது அதை சோதனை முயற்சியாக செய்யவில்லை. மேலும் , தேவன் சிருஷ்டிப்பின் மூலமாக அறியாத

ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கோ அல்லது ஏதோ ஒரு கோட்பாட்டை உறுதிபடுத்துவதற்கோ முயற்சிக்கவில்லை. வருங்காலத்தில் என்ன நடக்கும் என்பதை முன்கூட்டியே தேவன் அறிந்திருக்கிறபடியால் தம்முடைய சிருஷ்டிப்பிலிருந்து என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதை தேவன் அறிந்திருந்தார் (ஏசாயா 42:9;46:10). எனவேதான், தேவன் சிருஷ்டிப்பில் முழுமையாக ஈடுபடுவதை அவர் தெரிந்து கொண்டார். மேலும், தேவன் மனித இனம் தம்முடைய பரிசுத்த சமூகத்தில் மீண்டும் வருவதற்கு மீட்பின் திட்டத்தைத் தீட்டினார் (தீத்து 1:23;I பேதுரு 1:18-20).

அநேகமாக, துக்ககரமான சோதனையின் உச்சகட்டம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனித இனமே மனித அவதாரத்தில் வந்த தேவ குமாரனைக் கொலை செய்ததுதான். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த கோரக்குருசில் தொங்கின போது கூட ஜனங்களுடைய நன்றியில்லாமை மத்தியிலும் தம்மை கட்டுப்படுத்திக் கொண்டார். அவர் தம் பிதாவிடம் பன்னிரெண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை அனுப்பச் சொல்லி இவ்வுலகத்தை அழித்து, தம்மைத்தாமே விடுதலை ஆக்கிக் கொண்டிருக்க முடியும் (மத்தேயு 26:53). தேவனுடைய அன்பும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பும் நிர்பந்தமான பாவமுள்ள மனித இனத்துக்கு இரட்சிப்பை சாத்தியமாக்கியது ( ரோமர் 5:8-10).

அருமையான வாசகரே! நீங்கள் ஒரு போதும் துக்ககரமான பரிசோதனையின் அங்கம் என்று முடிவுக்கு வந்துவிட வேண்டாம். மனித மீட்பு என்பது துக்ககரமான பரிசோதனையாக இருந்தாலும் கூட தேவனுடைய முயற்சிகள் மற்றும் நமக்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தியாகம் போன்றவற்றை நாம் நம் அஜாக்கிரதையினாலே அற்பமாக எண்ணினால் அல்லது அவமதிப்பு செய்தால் அது தனிப்பட்ட ரீதியில் நமக்கு ஒரு துக்ககரமான பரிசோதனையாகவே இருக்கும். **அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பல விதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம் (எபிரெயர் 2:4).**



**நிர்வாக ஆசிரியர் உரை**

## நீ பயப்படாதே...

*Fear Not*

***E.Z.S. Rajanayagam***

**இ**ன்று உலகெங்கும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் ஒற்றை வார்த்தை **கொரோனா** அல்லது **கோவிட்–19** என்பது. மனிதர்களை அலற வைக்கும் இந்த வார்த்தையோடு ஒட்டிக் கொண்டு வந்து சம்பந்தப்பட்டவர்களை அச்சுறுத்தும் இன்னொரு வார்த்தை **Quarantine** அல்லது **தனிமைப்படுத்துதல்.** இக்கொடிய தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ள உலக சுகாதார அமைப்பாலும், பன்னாட்டு அரசாங்கங்களாலும் கண்டு பிடிக்கப்பட்ட அருமருந்து இது ஒன்றுதான். இதைத்தாண்டி இவர்களால் ஓர் அங்கு கலம் கூட நகர முடியவில்லை. சர்வ வல்லவருக்கு முன்பு தான் ஒன்று மில்லை என்பதை மனிதன் இப்பொழுதாவது புரிந்து கொண்டால் நல்லது!

தனிமைப்படுத்திக் கொள்வதை உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவ சமுதாயம் பெரிதாகத் தயக்கமில்லாமல் ஏற்றுக் கொண்டு, கிறிஸ்து வின் உபதேசப்படியான ஆராதனை அல்லது தொழுகையைப் புறக்கணித்து, ஆன்மீகக் காரியங்களிலிருந்து தங்களை அந்நியப் படுத்திக் கொண்டபோது, எத்திக்கிலும் வாழும் கிறிஸ்துவின் சபையார் இவ்வார்த்தையைத் தங்களோடு ஐக்கியப்படுத்தி, தங்கள் பக்திக் காரியங்களோடு எவ்வித சமரசமும் செய்யாமல் சின்னஞ்சிறு மந்தையாக ஆங்காங்கே கூடி ஆராதித்து வருவது புதிய ஏற்பாட்டில் தங்களுக்கிருக்கும் பற்றைப் பறைசாற்றுவதாக உள்ளது.

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின் வாழும் நம்மை ஆன்மீக ரீதியில் கட்டுப்படுத்தும் புதிய ஏற்பாட்டில் நான்கு வகையான ஆராதனைகள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. **ஆவியோடும், உண்மையோடும் கூடிய ஆராதனை** (யோவான்:4:24); **புத்தியுள்ள ஆராதனை** (ரோமர் 12:1); **வீணான** ஆராதனை (மத். 15:9); **சுய இஷ்டமான ஆராதனை** (கொலோ 2:23); **இப்பொழுது இந்த வரிசையில் தனிமைப்படுத்தப் பட்ட ஆராதனையும் சேர்ந்து கொள்கிறது. இதில் இருக்கும் ஒரே கவலை, சாத்தான் விசுவாசிகளை வஞ்சித்து இதைப் பழக்கமாகவும், வழக்கமாகவும் மாற்றிவிடக் கூடாது என்பதே.**

இப்பொழுது, சத்தியத்தின்படி தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை மேலும் உறுதி செய்து கொள்வதற்கேதுவான வேதாகமக் காரணிகளைக் கவனிப்போம்.

**I சகோதரர் மீதான அன்பு மற்றும் அக்கறை காரணம்**

தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை நாம் ஏற்றுக்கொள்வதற்கான முதல் காரணம், சகோதர அன்பும், அவர்கள் மீதான அக்கறையும் இதன் மூலம் வெளிப்படுகிறது என்பது.

கொரோனா நோய்த் தொற்று பரவி விடும் என்று பயந்து வீடுகளிலேயே முடங்கி, சக கிறிஸ்தவர்களோடு ஆராதனையின் மூலம் சவகாசம் வைப்பதையே தவிர்க்கும் கிறிஸ்தவர்கள் சகோதர அன்பு பற்றி எப்படிப் பேசலாம் என்று ஒருவேளை கேட்கப்படலாம். கேள்வியிலே நியாயம் இல்லாமலில்லை. ஆனால், கிறிஸ்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனைக் காரியங்களில் தங்களை ஈடு படுத்துவது பயத்தினால் அல்ல. மாறாக, பயபக்தியினால். உண்மை யான தேவ மனிதர்கள் எல்லாக் கட்டத்திலும் தேவனுக்குத் தான் பயந்து நடப்பார்கள். தங்களது பக்தி வைராக்கியத்தை வெளிப்படுத்துவதில் அவர்கள் ஒருபோதும் புறச்சூழலுக்கு முக்கியத்துவம் கொடுப்ப தில்லை.

அதுமாத்திரமல்ல, பக்திகாரியங்களில் பயம் என்பது ஒருவனை நரகத்திலே கொண்டு போய்ச் சேர்க்கும் என்பது தேவமனிதர்கள் அறிந்த ஓர் உண்மை [வெளி 21:8]. ஆக, தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனைக்கு பயம் காரணமல்ல. **கொரோனா ஒரு தொற்றுநோய்** என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருமல், தும்மல், தொடுதல் போன்ற காரணங்களால் எளிதில் பரவக் கூடியது. இந்நோய் யாரை வேண்டுமானாலும் தாக்கலாம். இந்நோயின் விநோதம், ஒருவனுக்கு **இந்நோய் இருக்கிறது** என்பதே ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குத் தெரியாது என்பது. அப்படியிருக்கும் போது எனக்கு இந்நோய் இருந்து நான் பிறரோடு ஆராதனையில் கூடி வரும்போது, என் மூலம் அடுத்தவர் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. மலைப் பிரசங்கத்தில் இயேசு ஆண்டவர் இப்படியாகக் கூறியுள்ளார். **ஆதலால், மனுஷர் உங்க ளுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ; அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப் பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம் என்று** [மத் 7:12]

இன்னும் அப்போஸ்தலன் யோவான் எழுதும்போது, என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல **கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்** [I யோவா 3:17] என்று

கூறியுள்ளார். ஆக, அருமையானவர்களே! தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனையின் மூலமாக யாருக்கும் பாதிப்பை உண்டாக்காத கிறிஸ்தவ அன்பு கிரியையினாலே உண்மையான அளவில் வெளிப் படுத்தப்படுகிறது. புரிகிறதா?

**II பழைய ஏற்பாட்டு முன் உதாரணம் காரணம்**

தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதற்கான இரண்டாவது காரணம், இதற்கான முன் உதாரணம் நமக்குப் பழைய ஏற்பாட்டில் உள்ளது என்பது.

அப்போஸ்தலன் பவுலடியார் ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது (ரோமர் 15:4) என்று கூறியுள்ளார். முன்பு என்பது பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டவைகளைக் குறிக்கிறது. அப்படியானால், பழைய ஏற்பாட்டில் தனிமைப்படுத்தப் பட்ட ஆராதனைக்கு ஆதாரமாக என்ன இருக்கிறது என்று கவனிப்போம்.

இந்நாள் வரைக்கும் முற்றும் குணப்படுத்துவதற்கு சவாலாக இருக்கும் நோய்களிலே ஒன்று தொழுநோய். இந்தத் தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவன் எப்படி நடத்தப்பட வேண்டுமென்று லேவி. 13-ம் அதிகாரத்தில் நாம் பார்க்க முடியும். ''அவன் சரீரத்தின் மேல் வெள்ளைப் படர்ந்திருந்தாலும், அவ்விடம் அவனுடைய மற்றத் தோலைப் பார்க்கிலும் அதிக பள்ளமாயிராமலும், அதின் மயிர் வெள்ளையாக மாறாமலும் இருந்தால், ஆசாரியன் அவனை ஏழு நாள் அடைத்து வைத்து, ஏழாம் நாளில் அவனைப் பார்க்கக்கடவன். தோலில் ரோகம் அதிகப்படாமல், அவன் பார்வைக்கு ரோகம் நின்றிருந்தால், ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழாம் நாளில் பார்க்கக் கடவன். தோலில் ரோகம் அதிகப்படாமல், சுருங்கியிருந்தால், ஆசாரியன் அவனை சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன். அது அசறு, அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து சுத்தமாயிருப்பானாக (லேவி. 13:4-6).

குஷ்டரோகம் பற்றி விபரமாகப் பார்ப்பது இங்கு நமது நோக்கமல்ல. மாறாக, ஒரு நோய், தொற்றை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கு மானால், என்ன வழிமுறை கடைப்பிடிக்க வேண்டுமென்ற ஒரு விதியை நாம் இந்த அதிகாரத்தில் பார்க்க முடிகிறது. நோய்த்தொற்று என்று வரும்போது தனிமைப்படுத்தப்படுவது அவசியம் என்று பார்க்கிறோம். **தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை** என்பது வேதாகமம் நமக்குக் காட்டும் வழிமுறையை ஒட்டிய ஒன்றாகவே உள்ளது. ஆகவே, நிலைமை சீராகும் வரை இந்த ஆராதனை முறையைப் பின்பற்றுவதில் எவ்விதத் தவறும் இல்லை.

III. **வேதாகம போதனை காரணம்**

தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதற்கான மூன்றாவது காரணம், வேதாகம போதனைக்கு இது இசைவான ஒன்று என்பது.

எபிரெயர் ஆசிரியர் சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் **விட்டுவிடாமல்,** ஒரு வொருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும் [எபி 10:25] என்று கூறியுள்ளார்.

நன்றாக கவனியுங்கள், **சபை கூடி வருதலை விட்டுவிடக் கூடாது** என்றுள்ளது. தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை செய்வதின் மூலம் நாம் சபையாகக் கூடி வருவதை **விட்டு விடவில்லை.** மாறாக, நாம் ஒட்டு மொத்த சபையாகக் கூடி வரக்கூடாது என்று அரசாங்கத்தால் **தடை செய்யப்பட்டிருக்கிறோம்.** விட்டுவிடுதல் வேறு, தடைசெய்யப்படுவது வேறு. சபை கூடி வருதலை தாங்களாகவே முன்வந்து விட்டுவிடுகிறவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்திற்குத் தங்களைக் கீழ்ப்படுத்த விரும்பாதவர்கள். தடுக்கப்படுகிறவர்கள் அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் தங்கள் விசுவாச நிலைக்கு எதிராகச் செயல்படும்படி அதிகாரமுள்ளவர்களால் நிர்பந்திக்கப் படுகிறார்கள். ஆக, இரண்டும் ஒன்றல்ல. ஒருவேளை, விசுவாசிகள் பிடிவாதமாக எதிர்த்து நின்று கூடி வருவதன் மூலம் ஒரு சமூகப் பரவல் ஏற்பட்டுவிடுமானால், கிறிஸ்துவின் சபையாருக்கு சமுதாயத்தின் மத்தியில் அவப்பெயர் ஏற்படுவதோடு, சட்டத்திற்கு முன்பாகவும் குற்றவாளிகளாகக் காணப்படுவார்கள். கிறிஸ்துவின் நாமத்திற்கும், அவருடைய சபைக்கும், நம்முடைய நம்பிக்கைக்கும் களங்கத்தை ஏற்பத்தும் எந்த ஒரு செயலையும் ஒரு கிறிஸ்தவன் எந்த ரீதியிலும், எந்தக் காலத்திலும் செய்யவே கூடாது. ஆகவே, அசாதாரணமான சூழ்நிலைகளில், தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை என்பது வேதாகம போதனைக்கு முற்றிலும் இசைவான ஒன்றாகவே உள்ளது.

பத்மு தீவில் நாடு கடத்தப்பட்ட யோவான் [வெளி 1:9] தேவனை எப்படி ஆராதித்திருப்பார்? சகோதர சிநேகமும், கிறிஸ்தவ ஐக்கியமும் அவர் போதித்த, அவர் விரும்பும் ஒன்றுதான். இன்னும் சபையாக விசுவாசிகளோடு கூடி ஆராதிப்பது அவருக்கு வழக்கமான ஒன்றாகவே இருந்திருக்கும். ஆயினும், அவர் அங்கே தனித்துக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் என்ன செய்திருப்பார்? தனிமையாகத்தான் தேவனைத் தொழுதிருக்க முடியும். சபையாகக் கூடி வருவது பற்றிய உபதேசம் அவர் அறியாததல்ல. ஆனால், வேறு வழியில்லையே. அந்த வாய்ப்பு அவருக்கு மறுக்கப்பட்டதே. சபை யாரோடு கூடி வராமல் போனது நிச்சயமாக அவருடைய தவறல்ல.

ஆகையால், அருமையானவர்களே! கொரோனா காலத்தில் நாம் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், சிறுசிறு மந்தையாகக் கூடி தேவனை ஆராதிப்பது வேதாகம போதனைக்கு எதிரான ஒன்றல்ல. காலம் அனுமதிக்கும் வரை நாம் இதைத் தொடரலாம்.

### IV **மேலான அதிகாரத்திற்கு கீழ்ப்படிவது காரணம்**

தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதற்கான இன்னுமொரு காரணம், ஒரு கிறிஸ்தவன் மேலான சட்டத்திற்குக் கீழ்ப்படிவது அவசியம் என்பது.

கொரோனா காலத்தில் வழிப்பாட்டுத் தலங்கள் தடை செய்யப் பட்டிருப்பதற்கான காரணம் இந்த அரசாங்கம் மதங்களுக்கு எதிரான அரசாங்கம் என்பதால் அல்ல. ஒரு காலத்தில் **கடவுளை மற, மனிதனை நினை** என்ற சித்தாந்தம். உலகின் பல பகுதிகளில் சத்தமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அது ஒருபோன்ற சித்தாந்தத்தின் வெளிப்பாடாக இந்தத் தடை உலக அரசாங்கங்களிடமிருந்தோ அல்லது இந்திய அரசாங்கத்திடமிருந்தோ வரவில்லை. குறிப்பாக, கிறிஸ்தவ தொழுகைக்கு எதிரான சட்டமாகவும் இது இல்லை. ஒட்டு மொத்த தேச மக்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் சரீர நலன் கருதி போடப்பட்ட ஓர் ஆணை. நாம் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து (யூதா 22) ஒரு சட்டத்தின் நோக்கத்தை சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுகிறவர் களாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலன் பவுல், மேலான அதிகாரம் பற்றிய ஆவியான வரின் அறிவுரையை ரோமர் 13-ம் அதிகாரத்தில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால் தேவனாலேயே அன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டா யிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன்; தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்கு தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். (ரோமர் 12:1,2)

ஆகையால், அருமையானவர்களே! இந்தக் கோவிட் - 19 கால கட்டத்தில், கிறிஸ்தவர்கள் தேவனுக்குப் பயந்து தனிமைப்படுத்தப் பட்ட ஆராதனையில் பங்குபெறுவது எல்லா வகையிலும் பரலோக தேவனுக்கு ஏற்புடைய செயலே. ஏனைய அநேகரைப் போல் சபை கூடி வருவதின் மாண்பை அறியாமல், வெறுமனே நம்மைத் தனிமைப் படுத்தி வாழாமல், வேத வசனங்களின் உபதேசத்தோடு அந்தத் தனிமைப்படுத்துதலின் காலம் கழிந்து கொண்டிருப்பதற்காகத் தேவனுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஆமென்!

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| துக்க கரமான பரிசோதனை ... | Louis Rushmore | ... 1 |
| நீ பயப்படாதே ... | E.Z.S. Rajanayagam | ... 4 |
| அடிமைப்பட்ட ஒரு குடும்பம் | Jerry Bates | ... 11 |
| மெய்யான சமாதானம் | Byron Nichols | ... 15 |
| சபையை ஒரு போதும் குறைத்து ... | J.C. Choate | ... 19 |
| இயேசு அழுகிறார் | E.Z.Selvanayagam | ... 24 |
| தேற்றரவாளன் | B. Arjunan | ... 28 |
| சமாதானமாயிருங்கள் | P.C. Philemon Rajah | ... 33 |
| தேவன் அநீதியுள்ளவரல்லவே! | Benny Martin | ... 37 |
| யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம் | Raymond A. Leonard | ... 41 |

**தேவன் – God**

| | | |
|---|---|---|
| உங்களால் கிறிஸ்துவை காண முடியும் | Glenn Colley | ... 42 |
| கிறிஸ்துவுக்குள் முழுமை | David Deffenbaugh | ... 44 |
| வேதாகமம் | Charles Cash | ... 46 |

**தேவனுடைய வார்த்தை – The Word of God**

| | | |
|---|---|---|
| இரண்டுக்கும் இடையில் என்ன? | Edward Anderson | ... 49 |

**இரட்சிப்பு – Salvation**

| | | |
|---|---|---|
| வெள்ளாடுகளோடு போக வேண்டாம் | Perry N. Hall | ... 52 |
| வயல் நிலங்களில் உங்கள் கண்களை ... | Dayton Keesee | ... 54 |
| நான் எழுதுவதற்கு ஒரே ஒரு கட்டுரை ... | Bop Prichard | ... 57 |

**சாட்சியங்கள் – Evidences**

| | | |
|---|---|---|
| அவருடைய வார்த்தையில் விஞ்ஞானப் ... | David Everson | ... 59 |

**சபை – The Church**

| | | |
|---|---|---|
| சபை உண்மையாகவே அந்த அளவு ... | Patrick Morrison | ... 62 |
| உபத்திரவப்பட்ட சபை | Gary C. Hampton | ... 64 |

வாழ்வதற்கான உபதேசம் – Doctrine to Live by

| | | |
|---|---|---|
| புதிது ... | **Royce Frederick** | ...65 |

செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action

| | | |
|---|---|---|
| இருபுறத்திலும் இருத்தல் | **Olden Cook** | ...69 |
| எல்லா கிறிஸ்தவர்களுமே கர்த்தருடைய ... | **Dale Grisson** | ... 70 |
| மௌனம் சாத்தியமில்லாதது | **John Gildsom** | ... 71 |
| உலகமெங்கும் | **Paul Holland** | ... 73 |
| தவறானதிலிருந்து சரியானதைக் ... | **Rod Kyle** | ... 77 |

ஆராதனை – Worship

| | | |
|---|---|---|
| ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ... | **John Thiesen** | ... 80 |
| கொடுத்தல் சம்மந்தமான நான்கு ... | **Wade Webster** | ... 83 |
| பரிசுத்த கைகளை உயர்த்தி | **Kevin Moore** | ... 85 |

அனுதின கிறிஸ்துவ ஜீவியம் – Daliy Christian Living

| | | |
|---|---|---|
| கன்மலை அஸ்திபாரத்தின் மீது ... | **Wayne Barrier** | ... 88 |
| நமது சவால் | **Greg Tidwell** | ... 91 |
| சாத்தான்- நீங்கள் அவனை அடையாள ... | **Betty Burton Choate** | ... 93 |

கிறிஸ்தவ இல்லம் – The Christian Home

| | | |
|---|---|---|
| வீட்டுப் பயிற்சியின் முக்கியத்துவம் | **Ferman Carpenter** | ... 97 |
| என்ன ஒரு சுதந்தரம்! | **Dwight Fuqna** | ... 100 |

வசனப்பகுதி பாடங்கள் – Textual Studies

| | | |
|---|---|---|
| எபேசியர் : கிறிஸ்துவும், அவருடைய ... | **Jim Lows** | ... 102 |
| மாற்கு நற்செய்தி நூல் | **David Shannon** | ... 105 |

வேதாக கேள்விகள் – Bible Questions

| | | |
|---|---|---|
| ஓய்வு நாளை கிறிஸ்தவர்கள் அனு ... | **Maxie B.Boren** | ... 107 |



# அடிமைப்பட்ட ஒரு குடும்பம்
## A Family of Addicts
*Jerry Bates*

வேதாகமத்தில் குறைவாக அறியப்பட்டிருக்கிற கதாப் பாத்திரங்கள் பல உண்டு. ஆனாலும், அவைகள் மிகச்சிறந்த உதாரணங்களாகத் திகழ்கின்றன. அப்படி ஓர் உதாரணம்தான் ஸ்தேவான். இந்த ஸ்தேவானைப் பற்றி இரண்டே இரண்டு வசனப்பகுதிகளில்தான் காண முடியும். [I கொரிந்தியர் 1:16; 15–17]. **ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்த துண்டு**; சகோதரரே, **ஸ்தேவானுடைய வீட்டார்** அகாயநாட்டிலே முதற்பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும், அறிந்திருக்கிறீர்களே. இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் ஸ்தேவானுடைய வீட்டார் ஊழியஞ் செய்யும்படிக்குத் தங்களை ஒப்பு வித்திருந்தார்கள் என்பதை கவனிக்கவும். ஸ்தேவான் தேவனுக்கும் அவருடைய ஊழியத்திற்கும் உற்சாகமாக தன்னை அர்ப்பணித் திருந்தார். ஸ்தேவான் தன்னை அடிமையாக ஒப்புக் கொடுத்திருந்தார் என்று கூட சொல்ல முடியும். அவர் மட்டுமல்ல, ஒட்டு மொத்த வீட்டாரும் தங்களை தேவனுக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுத் திருந்தார்கள்.

பொதுவாக நாம் ஏதோ ஒன்றுக்கு அடிமைப்படுவது மோசமானது என்று நினைக்கிறோம். இன்றைய நாட்களில் பெரும்பாலானோர் பல தீமையான மோசமான காரியங்களுக்குத் தங்களை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக,போதைப் பொருள் குடிப் பழக்கம் மற்றும் புகை போன்றவைகளுக்கு தங்களை அடிமைப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர், மத சம்மந்தமான காரியங்களில் அதிகமாக ஈடுபடுவது நல்லதல்ல என்று நினைக் கிறார்கள். ''**மத வெறியர்**'' என்பது ஒரு மோசமானப் பொருளைக் கொடுக்கிறது. இருந்த போதிலும், நாம் தேவனுக்கும் அவருடைய ஊழியத்திற்கும் நம்மை நாம் உண்மையாக ஒப்புக் கொடுக்கும்போது, அடிமைப்படுவது நல்லதே.

ஸ்தேவான் கர்த்தருடைய வேலையில் தன்னை ஈடுபடுத்தாமலிருக்க சாக்கு போக்குகளைத் தேடவில்லை. அதேபோல் மற்றவர்கள் தன்னுடைய வேலையைச் செய்ய வேண்டுமென்றும் அவர் எதிர்பார்க்கவில்லை. அதே சமயம் கர்த்தருடைய வேலை செய்யப்படாமல் கிடப்பதைப் பார்த்துக்கொண்டு அவரால் இருக்க முடியவில்லை. சில சமயத்தில் சிலர் நகைச்சுவையாக இப்படிச் சொல்வார்கள். **வேலை என்னை அவ்வளவாக தொந்தரவு செய்வதில்லை. அதை நான் நாள் முழுவதும் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பேன்.** மத சம்மந்தமான காரியங்களில் இந்த நகைச்சுவை மிகப் பொருத்தமாயிருக்கிறது.

பெரும்பாலான சபை அங்கத்தினர்கள் சபையில் நடைபெறும் வேலையை நாள் முழுவதும் அமர்ந்து வேடிக்கை பார்க்க விரும்புவதுபோல் தெரிகிறது. ஆனால், சபைக்காக வேலை செய்வதற்கு அவர்கள் ஒருபோதும் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. பழைய பிரசங்கியார் காமெடி ஒன்று உண்டு. அது 10% சபை அங்கத்தினர்கள் 90% சபை பணியை செய்கிறார்களென்பது. இந்த நகைச்சுவை சத்திய காரியங்களிலிருந்து தூரமாக இல்லை என்பது போல் தோன்றுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுலால் தனிப்பட்ட முறையில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்களில் ஸ்தேவானும் ஒருவர் (1:16). ஸ்தேவானுடைய வீட்டார் அகாயாவில் பவுலின் பிரசயாசத்தின் மூத்த பலனானவர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தக் குடும்பம் கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது என்பதை நன்கு புரிந்தவர்கள் (யாக்கோபு 2:20). அதேபோல், அவர்கள் எதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார்கள். பலர் தேவனுக்காக பல காரியங்களைச் செய்ய உத்தேசிக்கிறார்கள் ஆனால், வேறு காரியங்கள் நடுவே வந்து தடையாக மாறிவிடுகிறது. இருந்தபோதிலும், ஒருவர் ஏதோ ஒன்றுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளாமல், அதற்கு அடிமையாகிவிட்டால் அவருக்குத் தடையாக நடுவில் எதுவும் வராது. போதைக்கு அடிமையான ஒருவர் போதைப்பொருளை பெற என்ன வேண்டுமானாலும் செய்வான். இந்த ஸ்தேவான் பிரச்சனை நிறைந்த கொரிந்து பட்டணத்து சபையில் அங்கத்தினராகயிருந்தார். அந்த கொரிந்து சபை பவுலினிடத்தில் எந்த அக்கறையையும் காட்டவில்லை. ஆனால், சபை செய்திருக்க வேண்டிய வேலையை இந்த ஸ்தேவானும் வேறு இருவரும் செய்திருக்கிறார்கள் (I கொரிந்தியர் 16:17). பவுலுக்கும், அவருடைய

ஊழியத்திற்கும் உதவி செய்யும் ஆசைதான் எல்லா ஆசைகளை விடவும் மேலான ஆசையாக இவர்களுக்கு இருந்திருக்கிறது. நம்முடைய முதன்மைப் பட்டியலில் சபை எந்த இடத்தில் இருக்கிறது?

ஒருவர் ஒன்றுக்கு அடிமையாகி விட்டால் அது அவரை ஏதாவது செய்யத்தூண்டும். ஒன்றிலே அது ஒருவரை உந்தும் அல்லது கட்டுப்படுத்தும். பல நேரங்களில் போதைக்கு அடிமையானவர்கள் அப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற விரும்புவதாக சொல்வார்கள். ஆனாலும், அந்த போதை வஸ்து அவர்களை கட்டுப்படுத்தும். வேறுவிதமாகச் சொன்னால் அவர்களை அந்த அடிமைத்தனம் கட்டுப்படுத்தும். கிறிஸ்துவின் அன்பும் கூட நம்மை அவ்விதமாக நெருக்கி ஏவ வேண்டும். கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. **ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள் என்று** [ II கொரிந்தியர் 5:14]. மேலும், பவுல் தான் **கிரேக்கருக்கும் மற்ற அந்நியர்களுக்கும் ஞானிகளுக்கும் மூடருக்கும் தான் கடனாளியாகயிருப்பதாகச் சொல்கிறார்** [ரோமர் 1:14]. நாம் ஆவியால் கட்டுப்படுத்தப்பட வேண்டும். **துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து [எபேசியர் 5:18].** தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் கட்டுப்பாட்டுக்குள் நம்மை வைக்கும்போது இவ்வுலகத்திற்கு பைத்தியமாகத்தோன்றும் காரியங்களை செய்ய நாம் நெருக்கி ஏவப்படுவோம். நாம் கர்த்தருக்காக வேலை செய்வதில் பரபரப்பாக இருப்போம்.

தேவனுக்கும் அவருடைய சபைக்கும் சேவை செய்ய ஒப்புக்கொடுத்தவர்கள் அதிகமாக தேவைப்படுகிறார்கள். போதைக்கு அடிமையான ஒருவர் தன் ஆசையை தீர்த்துக்கொள்ள வேறொருவருகாக காத்திருப்பதில்லை. அதைத் தேடி, நாடி அவன் போகிறான். எனவே, தேவ சேவைக்கென்று தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒருவர் தேவனுக்காக ஏதோ ஒன்றை செய்ய மற்றவருடைய அழைப்புக்காக காத்திருக்கமாட்டார்கள். தேவன் தன்னார்வலராக இருந்தார். தேவன் தாமாகவே முன்வந்து தம்முடைய குமாரனை அந்தக் கோரக் குருசில் மரிக்கும்படி கொடுத்தார். தேவனுக்குச் செய்தியை சுமந்து செல்ல ஆள்தேவைப்பட்டபோது ஏசாயா **இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்றார்.** தாவீது கோலியாத்துக்கு எதிராக போர்செய்ய தாமாகவே முன்வந்தார்.

நெகேமியா தாமாகவே முன்வந்து எருசலேமுக்குப் போய் நகரின் மதில்களைக் கட்டினார். இவர்களும் இன்னும் பலரும் தேவனுடைய பணி தங்கள்மேல் விழுந்த கடமை என்று எண்ணி தாமாகவே முன் வந்து தேவனுடைய காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண் டார்கள். அவர்களெல்லாம் தேவனுடைய பணியை தங்களுக்கு கிடைத்த சிலாக்கியமாகக் கருதினார்கள். தேவப் பணியைத் தவிர்க்க ஒருபோதும் விரும்பியதேயில்லை. உண்மையாகவே, அநேக கிறிஸ்தவர்கள் கேட்டுக்கொள்ளப்படும் வரை எந்த வேலையையும் செய்யமாட்டார்கள். அப்படியே வேலை செய்தாலும் கூட உங்களுக்காக ஏதோ வேலையை செய்வது போல் செய்வார்கள். நாம் எந்த ஒரு மனிதனுக்காகவும் அல்ல, மாறாக தேவனுக்காக வேலை செய்ய வேண்டும்.



சபையின் பணி எல்லோருக்கும் சென்றடைய வேண்டும். இரட்சிக்கப்படாதவர்கள் போதிக்கப்பட வேண்டும். வியாதியஸ்தர் துக்கத்தில் இருப்பவர்கள், வயதானவர்கள் போன்றோருக்கு எப்போதுமே உதவியும் உற்சாகமும் தேவைப்படுகிறது. நாம் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு திட்டத்திற்காக காத்திருக்காமல், நம் கடமையை நாம் செய்ய வேண்டும். நம் பிரயாசங்களுக்கு தேவன் பலனளிப்பார் என்று நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். ஏனென்றால், **உங்கள் கிரியையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே** (எபிரெயர் 6:10). முதலாம் உலகப்போர் கதாநாயகனான Alvin york என்னும் ராணுவ வீரரிடம் ''நீங்கள் இப்படிப்பட்ட வீர சாகசங்களையெல்லாம் நிகழ்த்தினீர்கள் என்று கேட்கப்பட்டபோது அவர் சொன்ன பதில், ''என் கடமையை உணர்ந்தேன் செய்தேன் என்று மிக சாதாரணமாக சொன்னார். உங்கள் பிராந்திய சபையில் உள்ள வேலை சம்மந்தமாக நீங்கள் இதை மாதிரியாகச் சொல்ல முடியுமா? ✝



# மெய்யான சமாதானம்

## Real Peace

*Byron Nichols*

சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஆசை ஓர் உலக ளாவிய ஏக்கமாகவே இருக்கிறது. ஏனென்றால், உலகெங்கிலும் உள்ள மக்கள் சமாதானத்திற்காக ஜெபிக்கிறார்கள் ஏங்குகிறார்கள். சமாதானத்தைப் பற்றி சொல்ல வேதாகமத்தில் நிறைய இருக்கிறது. எனவே, வேத வாக்கியங்கள் சமாதானம் எனும் முக்கியமான காரியத்தைக் குறித்து என்ன சொல்கின்றன என்பதை ஆழ்ந்து சிந்திப்போம்.

- **சமாதானத்திற்காக பாடுபடவேண்டும். அதைத் தேட வேண்டு மென்று வேதாகமம் சொல்கிறது.**

**சங்கீதம் 34:14 தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தைத் தேடி அதைத் தொடர்ந்துகொள் என்று சொல்கிறது.** இதே காரியம் புதிய ஏற்பாட்டு சபையிலும் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும் அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம் என்று பவுல் வலியுறுத்துகிறார். பவுல் சமாதானத்தின் மதிப்பை அடையாளங்கண்ட படியால் தான் அதை அடைய நாம் எந்த அளவுக்கு பிரயாசப்பட வேண்டுமென்பதை காட்டுகிறார். மேலும், ரோமர் 12:18–ல் அவர் என்ன எழுதியிருக்கிறார் என்பதை கவனியுங்கள். கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். இந்த வசனத்தில் பவுல் என்ன சொல்கிறார்? சமாதானம் என்பது மிகவும் முக்கியமானதும், மதிப்புள்ளதுமாயிருக்கிறது. எனவே. ஒவ்வொரு கிறிஸ்தவரும் சமாதானம் நிலவ பாடுபட வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையில் சமாதானம் இல்லையென்றால் அநேகமாக ஒருவருடைய பங்கில் போதுமான முயற்சி அதை அடைய எடுக்கப்படவில்லை என்று தான் அர்த்தம்.

பவுல் II கொரிந்தியர் நிருபத்தை முடிக்கும் போது சமாதானத்தை வலியுறுத்துகிறார். **கடைசியாக சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள், ஏக சிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள் அப்பொழுது, அன்புக்கும் சமாதானத்துக்கும் காரனராகிய தேவன் உங்களோடே இருப்பார்.** ஒன்றின் மதிப்பை தீர்மானிப்பதற்கான ஒரு வழி அதைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியப்படும் முயற்சி அளவைப் பொறுத்து அமையும். இதை நாம் மனதில் கொண்டால் வேத வாக்கியங்கள் சமாதானத்திற்கு எந்த அளவு மதிப்பளிக்கின்றன என்பதை நாம் காண முடியும்.

**சமாதானம் முக்கியமானது தான் ஆனால் அதன் ஆதாரம் எது? நாம் அதை எப்படி பெற்றுக் கொள்கிறோம்?**

லூக்கா இரண்டாம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அங்கே பரம சேனையின் திரள் தேவனைத் துதித்தார்கள் என்பது உண்மையாகவே சுவாரஸ்யமானது. உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள் [வசனம் 14]. கிறிஸ்துவின் வருகை சமாதானத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்பது குறிப்பிடத் தக்கது. லூக்கா இயேசு கிறிஸ்து நம் சமாதானக்காரராகி என்று வெளிப்படையாக உறுதியாகச் சொல்கிறார். இயேசு கிறிஸ்து மூலமாக சமாதானம் சுவிசேஷமாக பிரசங்கிக்கப்படுகிறது என்று அறிவிக்கிறார். எனவே, கிறிஸ்து இல்லாமல் உண்மையான சமாதானமில்லை. எபேசியர் 2:14 ல் பவுல் இயேசு தம்முடைய இரத்தத்தை சிந்தியதன் மூலமாக சமாதானத்தை சாத்தியமாக்கினார். அப்படிச் செய்தன் மூலமாக யூதர்களுக்கும், புறஜாதியினர்களுக்கு மிடையே காணப்பட்ட பிரிவினையை அழித்து, எல்லோரையும் ஒன்றாக்கினார். மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் கொலேசெயர் நிருபத்தில் இது சம்பந்தமாக சொல்லும் காரியங்களை கவனிப்போம் **சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவர்கள் யாவையும், அவர் மூலமாய்க் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும், அவருக்கு பிரியமாயிற்று [கொலோ1:19,20].** எனவே, நாம் ஒட்டுமொத்த உலகின் பாவத்திற்காக தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் தியாகத்தினாலே அதாவது, தம்மைத்தாமே பலியாக ஒப்புக் கொடுத்ததினாலே சமாதானம் உண்டாகிறது என்று நாம் கண்டு கொள்கிறோம்.

**இப்போது நாம் இறுதியான சமாதானத்திற்கு வருகின்றோம்: உள்ளான சமாதானம் – மெய்யான சமாதானம்**

இன்றைய நாட்களில் உலகத்தில் சமாதானம் ஒரு பொக்கிஷமாக பார்க்கப்படுகிறது. தேவனிடத்தில் அழமான விசுவாசம் கொள்வதன் மூலமாகவும், அவரோடு நெருக்கமான உறவு வைத்துக் கொள்வதன் மூலமாகவும் உள்ளார்ந்த சமாதானத்தை பெற்றுக்கொள்ள முடியும். நம்முடைய உள்ளார்ந்த சமாதானத்தை உலகின் எந்த ஒரு வெளிப்புற சமாதானமோ அல்லது உபத்திரவமோ கட்டுப்படுத்த முடியாது. ஒரு தேவனுடைய பிள்ளையை சுற்றிலுமுள்ள துன்பங்களோ உபத்திர வங்களோ சீர்குலைப்பதுமில்லை. அப்பிள்ளை தேவனோடு கொண்டிருக்கும் உறவில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்திவதுமில்லை. நம் உள்ளார்ந்த சமாதானத்தை இவ்வுலகில் உள்ள யாரும், எதுவும் பறித்துக் கொள்ள முடியாது. இயேசு கிறிஸ்துவுக்கு சேவை செய்யத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள் ரோமர் 8:6ன் வார்த்தைகளால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். இன்றைய நாட்களில் கர்த்தருக்குச் சேவை செய்ய முயற்சிப்பவர்களுக்கு பவுலின் ஆலோசனைகள் இவ்விதமாக இருக்கிறது தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள் (கொலோ 3:15).

துரதிஷ்டவசமாக நம்மை அறியாமலேயே நிரந்திரமில்லாத தற்காலிகமான பொய்ச் சமாதானத்தை நாம் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பு உண்டு. பல சந்தர்ப்பங்களில் நாம் உண்மையான சமா தானத்தை பெற்றுக்கொண்டதாக வஞ்சிக்கப்படுகிறோம். பலர் கர்த்தருடைய சபையில் அங்கம் வகிக்காமலேயே தாங்கள் கர்த்தருக்கு சேவை செய்வதாகவும் ஆனால், பூரண சமாதானத்தை பெற்றி ருப்பதாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். இயேசு கிறிஸ்து தாம் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்த சபையில் அங்கம் வகிக்காமலேயே சமாதானமாக இருப்பதாக சிலர் சொல்கிறார்கள் (மத்தேயு 16:18), அது சாத்தியமே இல்லை. புதிய ஏற்பாடு முழுவதுமாக நாம் வாசிக்கும் போது கர்த்தருக்கென்று உண்மையாக சேவை செய்ய முயற்சித்தவர்கள் தாங்கள் கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்த சபையில் அங்கம் வகிக்காததை உணர்ந்த போது கிறிஸ்துவை தேவனுடைய குமார னென்று விசுவாசித்து (யோவான் 8:24), பாவங்களிலிருந்து மனந் திரும்பி (அப்போஸ்தலர் 2:38) கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு (மத்தேயு 10:32), பாவமன்னிப்புக்காக முழுக்கு ஞானஸ்நானம் பெற்று (அப்போஸ்தலர் 2:38; I பேதுரு 3:21) மரண பரியந்தம் அவருக்கு உண்மையாக சேவை செய்தார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10).



தயவு செய்து உங்கள் ஆத்துமாவோடும் நித்திய சமாதானத்தைப் பெறும் வாய்ப்போடும் விளையாட வேண்டாம். முதல் நூற்றாண்டில் ஜனங்கள் எப்படி கர்த்தருக்கு கீழ்ப்படிந்தார்களோ அப்படியே கீழ்ப்படியுங்கள். கீழ்படிவதற்கான கட்டளைகளும், நன்மைகளும் இன்றும் ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது.

✝

---

## நம் சத்துருக்கள்

- *நம் சொந்த சரீரம் (கலாத்தியர் 5:15, 16)*
- *உலகம் (யோவான் 2:15, 16)*
- *பிசாசு (மத்தேயு 13:39;2 பேதுரு 5:8)*
- *சுவிசேஷத்தை மறுக்கிறவர்கள் (பிலிப்பியர் 3:18)*
- *நீதியை எதிர்க்கிறவர்கள்(அப். 13:10)*



1932—2008

# சபையை ஒரு போதும் குறைத்து மதிப்பிட வேண்டாம்

## Don`t Ever Belittle The Church

### *J.C. Choate*

"எல்லா சபைகளும் ஒன்று தான்" என்று யாராவது சொல்ல கேள்விப்பட்டிருக்கிறீர்களா அல்லது இரட்சிக்கப்பட எந்த சபையிலும் அங்கத்தினராக இருக்க வேண்டிய அவசியமில்லை என்று யாராவது சொல்ல கேட்டிருக்கிறீர்களா? இன்னும், பாவிகளின் ஜெபத்தை திரும்பத்திரும்ப சொல்லுங்கள், எல்லாம் சரியாகிவிடும் என்று கூட கேள்விப்பட்டிருப்பீர்கள் அப்படித்தானே? மத உலகில் போதனையிலும், அதை நடைமுறைப்படுத்துவதிலும், காணப்படும் குழப்பங்கள் மற்றும் பிரிவினைகள் காரணமாக ஒழுங்குபடுத்தப்பட்ட சபையை ஜனங்கள் குறைத்து மதிப்பிட்டு பரிகாசம் செய்வதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

சபை நிராகரிக்கப்படுதல் பற்றி மூழ்கிப்போவதற்கு முன்பாக என்னோடு ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்: சபை கிறிஸ்துவின் மணவாட்டி என்றழைக்கப்படுவது உங்களுக்குத் தெரியுமா? திருமணம் என்பது உலகமுழுவதும் எல்லோராலும் புரிந்து கொள்ளக்கூடிய பொதுவான விஷயமாக இருக்கிறது. ஒரு மனிதன் ஒரு விசேஷித்தப் பெண்ணைத் தன் மனைவியாகத் தெரிந்து கொள்கிறான், அவளை திருமணம் செய்கிறான். அவன் தன் பெயரை மனைவிக்குக் கொடுக்கிறான். மனைவியைப் பாதுகாப்பதற்கும் அவளை போஷிப்பதற்கும் உறுதி எடுத்து அவளை நேசித்து, தேவைப்பட்டால் அவளைக் காப்பாற்றுவதற்காக, சாகவும் துணிவார். அவசியத்தின் காரணமாக கொஞ்ச காலம் பிரிய நேர்ந்தாலும் கூட, அவனுடைய பிரதான எண்ணம் மனைவியோடு மறுபடியும் இணைவதாகத்தான் இருக்கிறது.

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை கிறிஸ்துவின் சபை என்றழைக்கப்படுகிறது. ஐக்கியத்தின் பிள்ளைகள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகிறார்கள். இப்பூமிக்குரிய திருமணத்தில் எந்த ஒரு கணவனும் தன் மனைவி பிற ஆண்களுடைய பெயரைத் தரிக்க அனுமதிக்க மாட்டார். சபையாகிய மணவாட்டி தன் மணவாளனாகிய கிறிஸ்துவின் பெயரைத் தான் தரிக்க வேண்டும். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை ( அப்போஸ்தலர் 4:12). முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர் களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று (அப்போஸ்தலர் 11:26).

மணவாட்டியும் தன் மணவாளனிடத்தில் அன்புகூர்ந்து கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைகொள்ளுங்கள் ( யோவான் 14:15). இக்கருத்து கலாத்தியர் 1:8 ல் இன்னும் அதிகமாக தெளிவாக்கப்பட்டுள்ளது. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன். மனிதர்களால் தொடங்கப்பட்ட சபைகளை ஆளுகை செய்யும்படி மனிதர்களால் உண்டாக்கப்பட்ட உபதேசங் களும், கொள்கைகளும் தேவ வாக்கியங்களை நேரடியாகவே மீறுகின்றன.

மனித திருமணத்திற்கும், கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள திருமணத்திற்குமான ஒப்புமை எபேசியர் 5:22,33 வசனங்களிலே மிக அழகாக விவரிக்கப்பட்டுள்ளது. இந்த வசனப்பகுதியில் சபையானது கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூரும் படியாகவும், கீழ்ப்படியும்படியாகவும் வலியுறுத்தப்படுகிறது. மேலும், இந்த வசனப்பகுதியில் கிறிஸ்து சபையாகிய மணவாட்டியினிடத்தில் அன்பு கூர்ந்தார், அக்கறைப்பட்டார் அளவுக்கதிகமான அந்த அன்பின் காரணமாக அவர் மணவாட்டியாகிய சபைக்காகத் தம் இன்னு யிரையே ஈந்தார் போன்றவைகளெல்லாம் மிகச்சிறந்த உதாரணங் களாக எல்லோராலும் பார்க்கப்படுகிறது. கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

அப்படியே, கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தாம் அதை திருவசனத்தைக் கொண்டு (வேதவாக்கியங்களின் படி) தண்ணீர் முழுக்கினால் (ஞானஸ்நானம்) சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழை யற்றதுமான மகிமையுள்ள சபையாக (ஒருமையில் ஒரே சபையாக ஆயிரக்கணக்கான பிரிவினைகளல்ல) அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் (தம்முடைய மணவாட்டியை சேர்த்துக் கொள் வதற்காக அவர மறுபடியும் வருகிறார்) தம்மைத் தாமே அதற்காக ஒப்புகொடுத்தார்.

கணவன் மனைவி இடையேயான உறவிலிருந்து சபையாகிய மணவாட்டிக்கும், கிறிஸ்துவாகிய மணவாளனுக்கும் இடையே எத்தகைய விசேஷித்த உறவு காணப்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். மணவாளனாகிய கிறிஸ்து சபைக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்திருக்கும் போது யாராவது சபையை குறைத்து மதிப்பிட்டால், அல்லது பரிகாசம் செய்தால் அது மனைவியாகிய கிறிஸ்துவை அதிகமாகக் காயப்படுத்தும். கிறிஸ்துவின் இரத்தம் சபையை ஒரு பரிசுத்தமான அமைப்பாக்கி, கனத்திற்குரிய மகிமையான ஆவிக்குரிய சரீரமாக்குகிறது. அதற்கு கிறிஸ்து தாமே ஆவிக்குரிய தலையாயிருக்கிறார்.

இருந்தபோதிலும், மத உலகில் பலர் சபையை முக்கியத்துவ மற்ற, மனிதனால் உண்டாக்கப்பட்ட ஓர் அமைப்பாக மட்டும் ஆக்கு வதற்காக மும்முரமாக முயற்சித்து வருகிறார்கள். அவர்கள் நம்மிடம் பரலோகம் போவதற்கு ஒரு சபையில் நாம் அங்கத்தினராக கூட இருக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்கிறார்கள். சிலர் உலகில் காணப்படும் மார்க்கப்பிரிவினை சபைகளை நியாயப்படுத்த எல்லா சபைகளையும் ஒன்றிணைத்து ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தால் வேதாகமத்தில் நாம் வாசிக்கும் சபையைக் காணமுடியும் என்று விளக்கம் கொடுக்கிறார்கள். சிலர் யோவான் 15- ம் அதிகாரத்திற்குப் போய் கிறிஸ்து திராட்சை செடியாயிருக்கிறபடியால் கொடிகள் வெவ்வேறு சபைகளைத் குறிக்கும் என்று சொல் கிறார்கள்.

இன்று உலகில் பல சபைகள் அதன் ஸ்தாபகர்களின் பெயர் களையே தரிக்கின்றன. சில சபைகள் எந்த நாளிலே தேவனை ஆராதிக்கிறார்களோ அந்த நாளையே பெயர்களாக கொண்டிருக் கின்றன அல்லது எந்த நடைமுறை தங்களுக்கு வினோதமாகத் தோன்றுகிறதோ அதையே பெயர்களாகத் தரித்துக் கொள்கின்றன.

இந்த சபைகளில் ஒருவர் அங்கதினர்ராக இருக்க வேண்டுமென்றால் அதற்கு பல நிபந்தனைகள் உண்டு, அவர் வித்தியசமான விதங்களில் தேவனை ஆராதிக்கிறார்கள். மேலும், அவர்கள் தேவனை ஆராதிப்பதை விட பொழுது போக்கு அம்சங்களுக்கு அதிகமாக செவி சாய்க்கிறார்கள். அவர்களால் கற்பனை செய்து பார்க்க முடியாத காரியங்களெல்லாம் கற்பிக்கப்பட்டு, நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன. இதில் ஆச்சரியம் என்னவென்றால், இவைகளெல்லாம் இயேசுவின் நாமத்தில் செய்யப்படுகின்றன. இந்த கோமாளித் தனமான காரியங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அங்கீகாரம் வேறு அவர்களுக்கு வேண்டுமாம். இவர்களுடைய பெரும்பாலான உபதேசங்களுக்கும், நடை முறைகளுக்கும் வேதாகமத்தில் எந்த ஆதாரமும் இல்லை.

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிற கிறிஸ்தவ உலகம் மிக மோசமானமுறையில் பிரிந்து, குழப்பத்தில் மூழ்கி, கர்த்தரையும் அவருடைய வழிகளையும் பரிகாசம் செய்து அவரு டைய போதனையின் முக்கியத்துவத்தை குறைத்து, அவர் சபைக்காக செய்த தியாகத்தை குறைத்து மதித்துவிடுகிறார்கள். மனிதன் தனக்கேற்றபடி காரியங்களை மாற்றுவதினாலும், தலைகீழாகப் புரட்டிப்போடுவதினாலும் ஒழுங்குபடுத்தப்பட்ட உண்மையான சபை நகைச்சுவையாகிவிடுகிறது. கிறிஸ்துவ மார்க்கத்தில் காணப்படும் பிரிவினைகள், குழப்பங்கள் மற்றும் முரண்பாடுகள் காரணமாக உலகிலுள்ள பெரும்பாலான மக்கள் மதசம்பந்தமான காரியங்களை நிராகரித்து தேவனிலும் அவருடைய வார்த்தையிலும் நம்பிக்கை யில்லாதவர்களாக மாறிவிடுகிறார்கள். மத சம்மந்தமாக, தவறி ழைப்பவர்கள் குறிப்பாக தேவனுடைய வார்த்தையோடு கூட்டு கிறவர்கள், தேவனுடைய வார்த்தையிலிருந்து எடுத்துப் போடுகிறவர் கள் நித்தியநித்தியமாக இழந்து போவார்கள்.

**இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்த புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனத்திலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால்,ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்ட வைகளிலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார் (வெளிப். 22:18,19).**

தேவனுடைய செய்தியை மாற்றத் துணிகிறவர்கள் எண்ணற்றவர்கள் இழந்து போவதற்கு காரணமாகிவிடுகிறார்கள். ஏனென்றால், அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் அவர்களுடைய கள்ளப் போதனைகளாலே வஞ்சிக்கப்பட்டுவிடுகிறார்கள். இதைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே எச்சரித்திருக்கிறார்.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்ககளை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன் [ மத்தேயு 7:21-23]

கர்த்தரிலும், அவருடைய சபையிலும் அவர் போதிக்கும் ஏதாவது ஒன்றில் தவறு கண்டுபிடிப்பவர்கள் இறுதி நாளில் துக்கப்படுவார்கள். இதில் சந்தேகமில்லை.

✞

---

## *கிறிஸ்து நிராகரிக்கப்படும் விதம்*

- அவருடைய தெய்வீகத்தன்மையில் (லூக்கா 1:35)
- அவருடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில் (மத்தேயு 28:18)
- அவருடைய நாமத்திற்குக் கீழ்ப்படிவதில் (பிலிப்பியர் 2:911)
- அவருடைய சபையை அங்கீகரிப்பதில் (அப்போஸ்தலர் 20:28)

# இயேசு அழுகிறார்
## Jesus Cries
### *E.Z.Selvanayagam*

**த**ற்காலத்தில் அரசியல், சமுதாய, சமயங்களில் கொள்கை பலத்துக்கு மக்கள் கூட்டமே அளவுகோல் என்றொரு புதிய நடைமுறை அமுலாகிவிட்டது. வேடிக்கை காட்டியும், ஆடியும், பாடியும், ஆர்ப்பாட்டங்கள் செய்தும், எப்படியோ மக்கள் கூட்டத்தைத் திரட்டிக் காட்ட வேண்டும். அதற்கு எந்த யுக்தியை வேண்டுமானாலும் கையாளலாம். பிறகு அதற்குத் தங்களுக்குத் தேவையான முத்திரைகள் குத்தி, எங்கள் கட்சியின் செல்வாக்கைப் பாரீர்! எங்கள் இன மக்களின் எழுச்சி காணீர், எங்கள் சமயநெறிகளைப் பின்பற்றுகிற பக்த கோடிகளின் எண்ணிக்கை காணீர்! என்ற நாளேடுகளில் முழுபக்க விளம்பரங்கள், நாற்சந்திகள்தோறும் பெரும் செலவில் பல வண்ணங்களில் விளம்பர போர்டுகள், கட் அவுட் ஊர் முழுவதும் தோரணங்கள் வீதிகள் தோறும் ஒலி பெருக்கிகளின் ஓலங்கள் மூலம் தங்கள் பின்னால் ஒரு மாபெரும் மக்கள் சக்தி இருப்பதாகக் கூறி அரசாங்கத்தை மிரட்டுகின்றனர். அப்பாவி மக்களை நம்ப வைத்து குறிப்பிட்ட சிலர் தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

சமீப காலத்தில் இந்த வியாதி கிறிஸ்தவ மார்க்கத்தையும் தொற்றிக் கொண்டிருக்கிறது. அண்மையில் நடைபெற்ற ஓர் உலகப் பிரசங்கியர் கலந்து கொண்ட ஒரு கூட்டத்துக்குப் போயிருந்தேன். அங்கே நான் கண்டதையும், கேட்டதையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அந்தக்கூட்டம் நகரின் பிரபலமான சபைப் பிரிவுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து நடத்தினதாகத் தெரிகிறது. அந்தக்கூட்டத்தைப் பற்றி பிரபல தமிழ், ஆங்கில நாளேடுகளில் முழு பக்க விளம்பரங்கள் வாரக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. நகர் முழுவதும் மற்றும் சுமார் 30 கி.மீ வட்டத்தில் உள்ள பட்டி தொட்டிகளில் பலவண்ணச் சுவரொட்டிகள் நகரின் நுழைவாயிலில் அரசியல் தலைவர்களுக்கு வைக்கிறபடுகிற அளவுக்கு கட் அவுட், அது போக லட்சக்கணக்கில் கைப்பிரதிகள், வீதிகள் தோறும் ஆட்டோவில் அறிவிப்புகள்.

பல இலட்சம் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டதாகச் சொல்லப் படுகிற இந்தக் கூட்டத்திற்கு வண்ண விளக்குகள், ஆயிரக்கணக்கில் செலவிட்டு ஆளுயர மேடை, வீடியோ கவரேஜ் என்று ஏதேதோ புதுமைகள் மைதானத்தைச் சுற்றிலும் ஏராளமான கடைகள் அவைகளில் பிரபலங்கள் எழுதியதாகச் சொல்லப்படுகிற நூல்கள்,

அவர் பாடிய கேசட்டுகள், அன்னாருடைய உருவம் பொறித்த பேட்ஜ்கள், ஸ்டிக்கர்கள், பைபிள்கள் கூட இருந்ததாக ஞாபகம். வியாதி தீர்க்கும் எண்ணெய் வியாபாரம், விற்கிறவர்கள், வாங்குபவர்களுடைய பேரங்கள், போதாதற்கு சுண்டல், பாப்கார்ன், குழந்தைகளுக்கு பலூன் வகைகள் என்று ஏறக்குறைய ஒருதேர்த்திருவிழாவைப் போன்ற சந்தடி.

இதையெல்லாம் பாரத்த ஒரு கிராம சபை விசுவாசிக்கு ஓரே ஆனந்தம். எவ்வளவு திரளான கூட்டம், எத்தனைப் பேர் சத்தியத்தைக் கேட்க திரண்டு வந்திருக்கிறார்கள். கடைசிகாலத்தில் எலலா மக்களும் கிறிஸ்துவை அண்டிக் கொள்வார்கள் என்பது எவ்வளவு உண்மை என்று புளகாங்கிதம் அடைந்து நின்றார். ஆனால், அங்கே வந்திருந்த பக்த கோடிகள் சத்தியத்தை கேட்கிறதற்காக அங்கே வரவில்லை. தங்கள் கட்சித் தலைவர், அரசு அதிகாரிகள் அமைச்சர் பெருமக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக்கும் பொழுது நாம் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் போனால் மரியாதையாக இருக்காதே. மேலும், என்னதான் செய்கிறார்கள், பேசுகிறார்கள், ஆள் எப்படியிருப்பார்? எந்த மாதிரி உடை அணிந்திருப்பார் என்றும் அவர்கள் விளம்பரப்படுத்தின மாதிரி வியாதிகள் நீங்குதா? பேய்கள் ஓடுகிறதா? என்றுவேடிக்கை பார்க்கிறதற்கும் தான் வந்திருக்கிறார்கள் என்ற உண்மை அவருக்குத் தெரியாது. பாவம்!

சற்றே நகர்ந்து அங்கே நின்று கொண்டிருந்தத சில பெரியவர்களிடம் கூட்டத்தின் சிறப்பைப் பற்றி விசாரித்தேன். இப்படிப்பட்ட கூட்டங்களைப் போட்டு நம்முடைய ஒற்றுமையையும், வலிமையையும் புறஜாதிமக்களுக்குக் காட்ட வேண்டும். ஏனெனில் சமீப காலத்தில் கிறிஸ்தவ மார்க்கம் சுக்கு நூறாக உடைந்து சிதறி , புற மதஸ்தர்கள் மத்தியில் ஒரு கேலிப் பொருளாகிவிட்டது என்றும், ஆகவே நமக்குள் இருக்கும் வேற்றுமை உணர்வுகளை மறக்க முடியாவிட்டாலும், ஒரு சில நாளைக்காவது மறைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு முன்னால் நாங்கள் நாங்கள் ஒற்றுமையாகத்தான் இருக்கிறோம் என்று சுட்டிக்காட்டிக்கொள்ள இது பயன்படும் என்று ஒரு குட்டி பிரசங்கமே செய்தார்.

சுவிசேஷப் பிரகடனம் செய்யப்படுவதின் தலையாய நோக்கம்; மக்கள் மத்தியில் மண்டிக்கிடக்கும் பாவங்களையும், அதனால் விளையும் கேடுகளையும் அதற்குப் பரிகாரமாக தேவன் செய்திருக்கிற ஏற்பாட்டையும்அதை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டி, மனந்திரும்ப வேண்டும்; இல்லாவிட்டால் மடிந்துப் போவீர்கள் என்று எச்சரிக்க வேண்டும். அதை யோவான் ஸ்நானகனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர்களும், சுவிசேஷப்

பிரகடனத்தின் மையப் பொருளாக வைத்து தங்கள் பிரசங்கங்களைச் செய்தார்கள் [மத் 3:1–10; மாற்கு 1:4,5] [மத் 11:20, லூக் 13:1–3, அப் 2:38; அப்3:19,20].

ஆனால், அந்த பிரபலப் பேச்சாளர் மனந்திரும்புவதைப் பற்றி வாயே திறக்கவில்லை. பாவத்தின் நச்சுத் தன்மையைப் பற்றி எச்சரிக்கவேயில்லை. அவருடைய இருபது நிமிஷத்துக்கும் குறைவான பிரசங்கத்தில் அவர் கூறியதின் சுருக்கம்: இயேசு நல்லவர், வல்லவர் அவரை விசுவாசித்தால் உன் வியாதிகள் நிங்கும்; உன் வாழ்க்கை சுபிட்சமடையும் எண்ணங்கள் நிறைவேறும். உன் கஷ்டங்கள் தீரும். குடிசை கோபுரமாகும் என்பது தான். பல இலட்ச ரூபாய் செலவு செய்து கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தின் மீதி நேரமெல்லாம், கேசட் விற்பனை, பற்றாக் குறைத்தொகையை ஈடு செய்ய வசூல் வேட்டை, எங்கேயோ நடந்ததாகச் சொல்லப்பட் சில நோய்கள் குணமான சாட்சியங்கள், வட்ட, மாவட்டச் செயலாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் அறிக்கைகள், இளம் பங்காளர் திட்ட சாதனைகள் இத்தியாதிக் காரியங்களே.

அருமை நண்பர்களே! பேயோட்டுவதற்கும், தாயத்து எண்ணெய் விற்பனை செய்யவும் மோடி மஸ்தான்களும், சாலையோர சாமியார்களும் இருக்கிறார்கள். நோய்களை குணமாக்க மருத்துவ விஞ்ஞானம் அரும்பெரும் சாதனைப் படைத்துக் கொண்டிருக்கிறது. நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்கு சமூகநலத்துறை இருக்கிறது. குடிசைகளை கோபுரங்களாக்க குடிசை மாற்று வாரியம் செயல் படுகிறது. பொறியியற் கல்லூரிகளை நிறுவ கொங்கு வேளாளர்களும், குலாளர்களும் இருக்கிறார்கள். ஆனால், பாவத்தின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்க இயேசு கிறிஸ்துவை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்? ஆகவே, சுவிசேஷக்காரர்களே, அவர் செய்த அந்த மாபெரும் தியாகத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்வோம். மனிதனை ஆட்டிப்படைத்து அழிவுக்கு அழைத்துச் செல்வது பாவமே. அந்த பாவத்தின் நச்சுத்தன்மையை உணர முடியாமல் மக்களின் கருத்தை பிசாசு குருடாக்கி விட்டான் [II கொரி 4:4] அந்த குருட்டுத்தன்மை நீக்கப்பட்டு பாவத்தினால் வரும் கேடுகளை தெளிவாகப் பார்க்கும்படி அவர்களுக்குப் பிரகாசமான மனக்கண்களைத் தர வேண்டும் என்று மன்றாடி ஜெபியுங்கள் [எபே 1:19] அதற்கேற்ற சத்தியங்களைப் போதியுங்கள்.

சமூக சேவையா, இறைப்பணியா என்ற சவாலுக்கு அப்போஸ்தலர்கள் எடுத்த நிலை என்ன? ஆதித்திருச்சபையிலே ஒரு பிரச்சனை. கிரேக்க விதவைகள் சரியான படி பராமரிக்கப்படவில்லை

என்று ஒரு புகார் அப்போஸ்தருடைய கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதற்கு அவர்கள் அளித்த பதிலை அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் வாசியுங்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, நாங்கள் தேவ வசனத்தை போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல.

ஆதலால், சகோதரரே பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற் சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ , ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள் (அப். 6:2-4).

சகோதர்களே, அப்போஸ்தலருடைய ஆத்தும பாரத்தை சுவிசேஷம் பிரகடனப்படுத்த வேண்டிய அவசியத்தை , அவசரத்தைக் கவனியுங்கள். அறுப்புமிகுதி, வேலை யாட்களோ கொஞ்சம் என்று வேதனைப்பட்டு மனுதுருகிறாரே நமது ஆண்டவர் (மத் 9 :23-37). இன்றைக்கு அதைவிட நிலைமை மோசமாஹூகிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இந்தியாவின் கோடான கோடி மக்களில் ஐந்து சத மக்களே கிறிஸ்துவை அறிந்தவர்கள். உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஒரு முறைக் கூட கேள்விப்படாத கோடிக்கணக்கான மக்கள் இருக்கின்றனரே. அவர் களைப் பற்றி நம்முடைய பாரம் என்ன? **பணத்தை வாங்குவதற்கும் வஸ்திரங்களையும், ஒலிவத் தோப்புகளையும், திராட்சை தோட்டங்களையும் ஆடு மாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குவதற்கும் இது காலமா?** என்று எலியா தீர்க்கதரிசி அவனுடைய பொருளாசை பிடித்த வேலைக் காரன் யோசியைக் கடிந்து கொண்டாரே அது ஏன் என்று எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? பொருளாசை கர்த்தருடைய மகிமையை விழுங்கி விடும் என்பதனாலல்லவா? கேயாசிக்கு இருந்த சூழ்நிலை அதிக சாதகமானது தேவனுடைய வசனம் நம்முடைய மொழியில் கடந்த காலத்தவறுகளையும் அதன் விளைவுகளையும் எழுதி வைத்திருக்கிறது. (ரோமர் 15-4) அப்படியிருக்க நானும் நீயும் வரம் பெற்றவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு அதைவிட கடுமையான குற்றத்தைச் செய்வோமானால் வரும் கோபத்துக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம்?

தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்து ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும், இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான் (லூக்:22 :47) என்பதன் கருத்தை சிந்தித்துப் பாருங்கள்.

# தேற்றரவாளன்
## The Helper
### *Bro. Arjunan*

**ஆ**ண்டவர் தம்முடைய பிள்ளைகளை திக்கற்றவர்களாக விடாமல் அவர்களுக்கு ஒரு தேற்றரவாளனை அனுப்புவதாக சொன்னார். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் என்றார் [யோவா.16:7] தேற்றரவாளன் கர்த்தருடைய பிள்ளைகளை தேற்றுகிறார். இயேசு சீஷர்களை விட்டு பிதாவினிடத்தில் செல்லும் வேளை வந்தது அந்த வேளையில் சீஷர்கள் கலக்கமடைந்தார்கள். தேவனுடைய சித்தம் முழுவதும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக ஒரு தேற்றரவாளனை அனுப்புவதாக சொன்னார். தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். [2 தீமோ.1:7]. அதைத்தான் அப்போஸ்தலர்களைப் பார்த்து சொன்னார். ஆனாலும், அவர்களோடு இருந்த தேற்றரவாளன் அவர்கள் உபத்திரவப்படும்போது தேற்றினார். அதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் எனக் குறிப்பிடுகிறார்.

தேவனுடைய மக்களுக்கு இந்த சரீரத்தைக் குறித்து பயமில்லை. ஏனெனில், அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். இந்த சரீரத்தை அவர்கள் கொன்று போட்டாலும் தேவன் மகிமையுள்ள சரீரமாக அவருடைய வருகையிலே மாற்றுவார். ஆகையால், சரீரத்தை கொல்லுகிறவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்றார். அந்தப்படியாக ஸ்தேவான் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கும் போது; தேவனை அறிந்த ஜனங்களாலே கல்லால் அடிக்கப்பட்டு கொல்லப் பட்டான். அவன் அப்பொழுது கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று தொழுது கொண்டான். அவன் அவர்களுக்குப் பயப்படவில்லை. ஏனெனில், அவன் பயத்தின் ஆவியைப் பெறாமல் அன்பும் பலமும் தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்றதினால் அவர்கள் தன்னைக் கல்லால் அடிப்பதற்கு பயப்படாமல் கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்துக் கொண்டிருந்தான். அன்பானவர்களே, கர்த்தர்

அவருடைய பிள்ளைகளை தேற்றும்படியாக தேற்றரவாளனை அனுப்பினார். அவர் சகலசத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்தினார் எனக் காண்கிறோம். பவுல் சொல்லும் போது; என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு என்கிறார் (பிலி.4:13). முதல் நூற்றாண்டு காலத்தில் அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய வார்த்தையால் பெலப்பட்டார்கள். பயமின்றி கர்த்தருடைய வார்த்தை யால் பெலப்பட்டார்கள். பயமின்றி கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்தார்கள். பேதுரு யோவான் போன்றோர் எல்லாம் தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது. தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள். மேலும், அவருடைய நாமத்திற்காக அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினாலே சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தை விட்டு போனார்கள் என்றெல்லாம் பார்க்கிறோம். ஆம், அன்பானவர்களே தேற்றரவாளன் அவர்களை அவ்வப்போது தேற்றி கர்த்தருடைய நாமம் மகிமைப்பட அவர்களை பெலப்படுத்தினார்.

நியாயாதிபதிகளின் காலத்தில் வாழ்ந்த சிம்சோன் என்ற மனிதனை நீங்கள் அறிவீர்கள். அவனை பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்து இரண்டு புதுகயிறுகளாலே அவனைக் கட்டி கன்மலையிலிருந்து கொண்டுபோனார்கள். அவன் லேகி வரைக்கும் வந்துசேர்ந்த போது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார்கள்: அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்துபோயிற்று (நியா.15,14). இங்கே சிம்சோன் கர்த்தருடைய ஆவியானவரின் பெலத்தைப் பெற்றுக்கொண்டான்.

அதைப்போல தேவன் நமக்கு அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்ன வசனத்தை படித்தோம். ஆம், தேற்றரவாளன் அன்புள்ளவர் அந்த அன்பை நமக்குக் கற்றுக்கொடுக்கிறார். அவர் அப்போஸ்தலர்களைக் கொண்டு சொல்லும் போது ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள் என்கிறார் (1பேதுரு. 1:22). ஊக்கமான அன்பு செலுத்தும்படியாக ஆவியானவர் நம்மை உற்சாகப்படுத்தியிருக்கிறார். அன்பு திரளான பாவங்களை

மூடும். ஆகையால், சகோதர சிநேகத்தில் நிலைத்திருந்து ஆவிக்குரியவர்களாகிய நாம் சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாக சுத்த இருதயத்தோடே ஒருவரி லொருவர் அன்புகூர வேண்டும். இந்த விதமான அன்பு நம்மை கர்த்தருக்குள் நிலைக்கவும் அவருக்கேற்ற கனிகளைக் கொடுக்கவும் நம்மைத் தகுதிப்படுத்தும். பிரிவினைகளைத் தகர்த்துப்போடும். கர்த்தருடைய சபை வளர்ச்சியடைவதற்கு இவைகள் உதவியா யிருக்கும். கண்ட சகோதரனிடத்தில் நாம் அன்பு கூராவிட்டால் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவோம் என வேதம் போதிக்கிறது. நாம் தேற்றவாளனை உடையவர்களாக இருப்போ மானால் அந்த சத்திய ஆவியானவர் அவருடைய பணி வளர்ச்சி யடைவதற்கான காரியங்களை நம்மிலே செய்வார். மேலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்: அன்பு திரளான பாவங்களை மூடும் என எழுதிகிறார் [1 பேதுரு 4:8]. அவர் முதலாவது என்னில் அன்பாயிருக் கட்டும் பின்பு நான் அவரில் அன்பாயிருப்பேன் என்று நாம் வாக்குவாதம் பண்ணமுடியாது. நாம் அன்பிலே நிலைத்திருக்கும் படியாக ஆவியானவரால் உற்சாகப்படுத்தப்படுகிறோம். நமக்கு எல்லாவிதத்திலும் உதவியாக கொடுக்கப்பட்ட ஆவியானவரை எந்த விஷயத்திலும் துக்கப்படுத்தாமல் நடந்து கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, தேவன் நமக்கு தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக் கிறார் என வாசித்தோம். கர்த்தருடைய பிள்ளைகள் எப்பொழுதும் தெளிவானவர்களாகவே இருக்கிறார்கள். அநேகர் தாங்கள் செய்வது இன்னதென்றும் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருக்கிறார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல்: ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்கிறார். [I கொரிந்தியர். 9:26,27]. ஒரு நபரைச் சந்தித்து நீ எதற்காக கிறிஸ்தவனாகிறாய் என்று கேட்கும் போது; அவன் கிறிஸ்தவனாக மாறியதற்கு ஒரு சிறப்பான பதிலைச் சொல்ல வேண்டும். அதைவிட்டு எல்லோரும் ஞானஸ்நானம் எடுத்தார்கள் என்று நானும் சென்று ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டேன். என்னை இவர்கள் சபையில் சேர்த்துக் கொண்டார்கள். நான் சபைக்குப் போகிறேன் என்று ஒருவன் சொன்னால் இது சரியாகிவிடுமா? எனக்காக என்னுடைய பாவத்திற்காக ஒருவர் பலியாகி இருக்கிறார். நான் மரிக்க வேண்டிய இடத்தில் எனக்காக ஒருவர் மரித்திருக்கிறார். அவரை விட்டால் வேறு ஒருவர் இல்லை என்பதை நன்கு அறிந்து கொண்டேன். மேலும், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று இயேசு சொல்லுகிறார்.

அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமா யிருக்கிறார். மேலும், பலி ஆடாக ஒப்புக் கொடுத்திருக் கிறார். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உலகத்தில் இல்லை என்ற இச்செய்தியை அறிந்து கொண்டேன்: அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவரைவிட்டால் வேறு வழியில்லை என்பதை நன்கு அறிந்து கொண்டேன்; என்று சொல்வாரேயானால் அது ஒரு சிறப்பான பதிலாக இருக்கும். அன்பானவர்களே, நீங்கள் எப்படி ஒரு கிறிஸ்தவராக மாறினீர்கள்? சத்தியத்தை நேசித்து அதற்குக் கீழ்ப்படிந்து நீங்கள் ஒரு கிறிஸ்த வரனாக இருப்பீகளானால் அது சரியாக இருக்கும். இல்லையேல் உங்களுடைய ஒப்புக்கொடுத்தலை ஆய்வு செய்யுங்கள்.

ஏனெனில், எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் (I பேது.4 :7). நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதற்கு ஆவியானவர் உதவியாயிருக்கிறார் அவர் நம்முடைய தேற்றாவாளன். எனவே, அப்போஸ்தலர்களைக் கொண்டு எழுதம் போது தெளிந்த புத்திள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள் என்று எழுதுகிறார். இன்றைக்கு அநேகர் ஜெபத்தை அலட்சிப் படுத்துகின்றனர். ஜெபம் என்பது தேவனோடு பேசுவதாகும். அதற்கு நம்மை ஆயத்தப்படுத்தி ஜெபிக்க வேண்டும். தேவன் நமக்கு அருமையான வாக்குத்தத்தங்களை தந்திருக்கிறார். நாம் நமக்குள் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அப்பொழுது நாம் அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். பவுல் தீமோத்தேயு என்ற உத்தம குமாரனுக்கு எழுதும் போது; உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள் என்று எழுதுகிறார் (I தீமோ.1:14). நமக்கு உதவியாக கொடுக்கப்பட்ட தேற்றரவாளான் அதாவது பரிசுத்த ஆவியானவர். உங்களைப் தேற்றும்படியாகவும், உங்களுக்கு பலத்தைக் கொடுக்கும்படியாகவும் அன்பும், தெளிந்த புத்தியையும் கொடுக்கும்படியாகவும் வந்த தேற்றரவாளனோடு சேர்ந்து கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்.

**அப்போஸ்தலருக்கு ஆவியானவர் கொடுக்கப்படும்போது, நீங்கள் பெலனடைவீர்கள் என்று சொல்லப்பட்டதா ?**

ஆம், பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும, சமாரியாவிலும். பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார் (அப்.1:8). ஆண்டவர் கட்டளையிட்ட படியாக

அப்போஸ்தலர்கள் பெந்தேகொஸ்தே என்னும் நாளில் மேல் வீட்டில் தங்கியிருந்தனர். அப்பொழுது அவருடைய வாக்குத் தத்தத்தின்படியான அக்கினிமயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. இப்படியாக அவர்கள் பெலனடைந்து உலகமெங்கும் சாட்சிகளாகக் கொண்டு செல்லப் பட்டு கர்த்தருடைய ராஜ்ஜியத்தின் பணியில் பயன்படுத்தப்பட்டனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வரங்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை. தேவன் தம்முடைய ராஜ்யத்தில் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்துகிறார் என்பதை நாம் முதலாவது புரிந்த கொள்ள வேண்டும். எல்லாரும் அப்போஸ்தலர் களா? எல்லோர்களும் மேய்ப்பர்களா? அவரவருக்கு தேவனால் அளிக்கப்படும் வரம் உண்டு. எல்லாமே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக கொடுக்கப்பட்டது. அதை ஒவ்வொருவரும் புரிந்து கொண்டு தேவனுடைய பண்ணையில் செயல்பட வேண்டும். இன்று தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். என்பதை அறிந்த நாம் ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுத்து, ஆவியானவருடைய உதவியோடு தேவனை ஆராதிக்கவும் அவரை மகிமைப்படுத்தவும் முற்பட வேண்டும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்!.

✞

---

## எதைத் தெரிந்து கொள்ளுகிறீர்கள்?

- *தேவனையா அல்லது அந்நிய தேவர்களையா? (யோவான் 24:1415)*
- *கிறிஸ்துவையா அல்லது பேலியாளையா?(கொரிந்தியர் 6:15)*
- *ஜீவனையா அல்லது மரணதங்தையா? (உபாகமம் 30:1519)*
- *கிறிஸ்துவின் சபையா அல்லது மார்க்கப்பிரிவினையா? (மத்தேயு 16:18)*
- *தேவனுடைய வார்த்தையையா அல்லது மனித பாரம்பரியத்தையா? (மத்தேயு 16:8)*
- *பரலோகத்தையா அல்லது நரகத்தையா? (வெளி 21:14,8)*

# சமாதானமாயிருங்கள்
## Live Peaceably

Bro. P.C. **பிலமோன் ராஜா**

**ச**ஞ்சலங்கள் நிறைந்த உலகில், சமாதானமாக (நிம்மதியாக) இருக்க வேண்டும் என்கின்ற விருப்பம், நம் அனைவரிடமும் உண்டு. நாம் யாருடன், எப்படி சமாதானமாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி பைபிள் என்ன போதிக்கின்றது என்பதை தியானம் செய்வோம்.

### 1. சர்வ வல்லவரோடு சமாதானம்

நாம் சமாதானமாக இருக்க வேண்டிய முதல் நபர், நம்மை படைத்த கடவுள் தான். நாம் அவருடன் சமாதானமான் இருக்க வேண்டியது, அதாவது, அவருக்கும் நமக்குமான உறவு சீராக இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

கடவுளுக்கும் நமக்குமான உறவில் சமாதான குலைச்சலை உண்டாக்குவது. நாம் செய்கின்ற பாவங்களே! ஏசமயா 59:1–2 இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவு மில்லை; கேட்கக்கூடாபடிக்கு அவருடைய செவி மந்தமாகவு மில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனு க்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகின்றது; உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குஉங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

செய்த பாவங்களிலிருந்து மனந்திரும்பாமை என்பது சமாதான மின்மையை தொடர்வதாயிக்கின்றது. ஏசாயா 1:15–19 நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்; நன்மைசெய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள் ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள். வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றி ருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும். நீங்கள் மனம் பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். நீதியும் பரிசுத்தமுமான கடவுளால் , பாவத்தோடு உள்ள மனிதரோடு உறவுகொண்டாட முடியாது(சங் 7:11). ஆயினும் தேவன், நாம்

அவருடன் சமாதானமாக இருக்கவே விரும்புகிறார். நமக்கும் கடவுளிற்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த, அவருடைய குமாரனும், நம்முடைய ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து தன்னைத் தானே பலியாக்கினார் (எபே 2:13-19)

நாம் அந்தரங்கமான பாவங்களை வெறுத்து, பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்த வாழும் போது, தேவனோடு சமாதானமாயிருக்க முடியும். I கொரி7:1 இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு. பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.

இந்த உலகத்தினை சத்துருவானவன், பாவத்தினால் நிறைத்து வைத்துள்ளான். பாவம் செய்வதை, மனிதர்களுக்கு இயல்பான ஒன்றாக மாற்ற முயல்கின்றான். ஆயினும், மனிதனுடைய இயல்பு, பாவத்திற்கு எதிரானதாகும். ஏனெனில், அவன் தேவ சாயலில் படைக்கப்பட்டபடியினால் (ஆதி 1:26:27). ஆகையால், மனிதன் பாவம் செய்யும் போது, தன் இயல்பிற்கு எதிராக செயல்பட்டு, தனக்குக் கொடுக்கப்பட்ட தேவ மகிமையை இழக்கிறான் (ரோமர் 3:23). மனிதன் தான் செய்த பாவத்திலிருந்து மனந்திரும்பி, திருமுழுக்கு பெற்றுக்கொள்ளுதினால், இழந்த மகிமையை மீட்க தேவன் வழியை உண்டுபண்ணி வைத்துள்ளார் (எபே 4:22-24). மேலும், அந்த நிலையிலேயே மனிதன் நிலைத்திருக்கும் போது மகிமையிலே நிலைத்திருக்கவும், தேவனோடு சமாதானமாகவும் இருக்க முடியும்(எபே 4:25-32).

2. **சக மனிதர்களோடு சமாதானம்**

அடுத்ததாக, நாம் சக மனிதர்களோடு சமாதானமாக இருக்க வேண்டும். ஒன்று சபையோடு அதாவது தேவனுடைய பிள்ளைகளோடு இரட்சிக்கப்படாதவர்களோடு சமாதானயிருப்பது என்று அதை நாம் இரண்டாகப் பிரித்து பார்க்கலாம்.

பைபிள், இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் சமாதானத்தோடு இருக்க வேண்டும் என போதிக்கின்றது. 1 கொரி 1: 10 சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும். பிரிவினைகளிலாமல் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருத்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

ஆயினும், இரட்சிக்கப்பட்ட சகோதரனோ, சகோதரியோ பாவத்தில் நிலைக்கொண்டிருக்கும் பட்சத்தில், அவர்களை மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்தும்படி அவர்களைவிட்டு விலகியிருக்க சொல்கின்றது. 1 கொரி 5:11 **நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது**

**இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்ட வனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது.**

மேலும், கிறிஸ்துவின் தூய புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் நிலை கொண்டிராமல், மாற்று போதகம், அதாவது கள்ள உபதேசம் செய்பவர்களையும் விட்டு விலகச் சொல்கின்றது.

II யோவான் 9–11 **கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் – அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்.**

நாம் சமாதானத்தை விதைக்கிறவர்களாக, அதாவது உண்டாக்கு கிறவர்களாகவே இருக்க தேவனுடைய வார்த்தை நம்மை உற்சாகப் படுத்துகின்றது. யாக் 3:14–18 **உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக் கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு, பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதான மும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக் கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர் களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது**

கிறிஸ்துவின் இரத்தத்தாலே மீட்கப்பட்ட ஒரு கிறிஸ்தவர், சமுதாயத்தோடு அதாவது இரட்சிக்கப்படாதவர்களோடு சமாதானமாயிருப்பதும் முக்கியமே! **ரோமர் 12:18 கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். நாம் அனைவரோடும் சமாதானமாக இருக்க வேண்டும்.**

### 3. சுயத்துடன் சமாதானம்

அடுத்ததாக, எனக்கு நானே சமாதானமாக இருக்க வேண்டும். சுய சமாதானம் மிக முக்கியம். நாமே நமக்குள் சமாதானமாக இருக்க வேண்டும். ஏனெனில், நாம் சமாதானமா இருந்தால் தான் மற்றவர் களிடம் சமாதானத்தை உண்டாக்க (விதைக்க) முடியும் நான் சமாதான

மற்று இருக்கும்பட்சத்தில் எரிச்சலை விதைக்கிறவனாக இருப்பேன். சுய சமாதானம் பெற நான் இரண்டு காரியங்களை செய்ய வேண்டும்.

முதலாவது, குற்ற உணர்வுகளை விட்டு வெளியே வர வேண்டும். நம்மில் பெரும்பாலானவர்களுக்கு இருக்கின்ற பிரச்சனை குற்றத்தை விட்டு வெளியே வந்தாலும், குற்ற குற்றத்தை விட்டு வெளியே வராமலிருப்போம். நாம் மனந்திரும்பி உண்மையாக தேவனிடம் திரும்பின பட்சத்தில், அவர் நமது பாவங்களை முற்றிலும் மன்னித்துவிட்டார் என்று விசுவாசியுங்கள். சத்துருவானவன் நாம் செய்த பாவங்களை நினைவுபடுத்தி, நம்மை சோர்வடையச் செய்வான். நாம் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளை தரவிடாமல் தடுப்பதே அவனது பிரதான நோக்கம். ஆகையால், தேவன் மன்னித்து விட்டார் என்பதை முழுமையாக அவருடைய வசனத்தின்படி விசுவாசிப்போம் தேவனுடைய பார்வையில் மன்னிப்பு என்பது, delete என்பதாக உள்ளது. அதாவது நாம் மனதார மன்னிப்பு கேட்டு, முழுமையாக மனந்திரும்பும் பட்சத்தில், அவர் அந்த பாவங்களை அழித்து விட்டார் என்பதாக பொருள்.

அடுத்ததாக, பாரமான யாவற்றையும் பரமனிடம் ஒப்படையுங்கள். பிலி, 4:6–7 நீங்கள் ஒன்றுக்கு கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபதினாலும் வேண்டுலினாலும் தேவனுக்குத்தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.

நம்மால் அவைகளை தூக்கி சுமக்க முடியாது என்று தேவன் அறிந்திருந்தபடியினாலே, அவைகளை அவர் மேல் வைத்துவிடச் சொல்கின்றார் (சங் 55:22). ஆகையால் நாம் பாரமான எல்லாவற்றையும் அவரிடம் ஒப்படைத்து விடுவோம். அவர் நமக்காக எடுக்கின்ற முடிவு மிகவும் சிறந்ததாக இருக்கும் என்பதை நினைவில் கொள்வோம். எரே 29:11 நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே.

இறுதியாக, அன்பானவர்களே,தேவன் நம்மை சமாதானமாயிருக்கும் படிக்கே அழைத்திருக்கிறார் (1கொரி), நமது ஆண்டவர் அவருடைய சமாதானத்தையே நமக்கு தந்திருக்கிறார் (யோவா 14:27). பரிசுத்த ஆவியானவர் நமக்கு தேற்றரவாளனாக இருக்கிறார் (யோவா 14:26). அதனை நன்கு உணர்ந்தவர்களாய், நம்மிலும், நம்மை சுற்றிலும், நம்மை படைத்தவரோடும் சமாதானமாக இருப் போம். இந்த தெய்வீக முயற்சியிலும், பயிற்சியிலும் வெற்றிபெற எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் பெற, சமாதானத்தின் பிதா தாமே உதவி செய்வாராக!

# தேவன் அநீதியுள்ளவரல்லவே!

## God Is Not Unjust

### *Bro. Benny Martin*

பல வேளைகளில் தேவனுடைய பண்புகளைப் பார்த்து நாம் பரவசமடைகிறோம், அமர் அன்பானவர், இரக்கமுள்ளவர், தயவுள்ளவர், நீடிய பொறுமையுள்ளவர் என பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கும். அவைகளுள் பலரை வெகுவாக கவர்ந்த பண்பு அவர் நீதியுள்ளவர் என்பதாகும் அநீதி நிறைந்த இவ்வுலகில் பாதிபேர் அநீதிக்கு துணைப் போகிறதையும், மீதிபேர் சுயநலவாதிகளாகவும் இருப்பதையும் நாம் காணமுடியும். நீதியரசர்கள் என்று மக்களால் மதிக்கப்படுகிறவர்கள் கூட மதிகெட்டுத் தீர்ப்பு வழங்குவதை, தீர்க்கமாய் நாம் காணமுடியும். அப்படிப் பட்ட நேரங்களில் நீதி நீர்த்துப்போய் விட்டதோ? அநீதிதான் நீளுமோ? எனும் பயம் பலரை பற்றிக் கொள்கிறது. ஆனால், தேவனுடைய பிள்ளைகளுக்கு உள்ளபடியே அதைப்பற்றி கவலை எள்ளளவும் இருக்க வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் நம் தேவன் அநீதியுள்ள வரல்லவே, இப்பாழாய்போன பாரில் இது நமக்கு ஆறுதலையும், தேறுதலையும் நிச்சயமாகத் தருகிறது.

தேவன் அநீதியுள்ளவரல்லவே என்னும் சொற்றொடர் சொற்ப எழுத்துக்களைக் கொண்டிருந்தாலும் ஆழமான அர்த்தங்களை தன்னகத்தேக் கொண்டுள்ளது. இச்சொற்றொடர் எபிரெயர் 6:10 ல் இடம் பெற்றுள்ளது. எபிரெயர் 6:10ல் தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர் உற்சாக மூட்டும் வார்த்தைகளை பதிவு செய்திருக்கிறார் **ஏனென்றால் உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.** அருமையானவர்களே! இந்த நிருபம் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்கள் உற்சாகமிழந்து சோர்வாகக் காணப்பட்டார்கள். முன்பு இதே அதிகாரத்தில் இந்நிருப்பத்தின் ஆசிரியர் விழுந்து போவதின் ஆபத்தை குறித்து தத்ரூபமாக எழுதியிருக்கிறார். பின்பு ஒன்பதாம் வசனத்தில் அவர்கள் உண்மையாக தொடர்ந்து வாழ்வார்கள் என்று தன்னுடைய நம்பிக்கையை வெளிப்படுத்தி. இந்த உற்சாக மூட்டும் வார்த்தைகளை அவர் எழுதினார். இவ்வார்தைகள் நம்மையும் உண்மை யாக உற்சாக மூட்ட வேண்டும். ஏனென்றால், அவைகள் தேவனுடைய உண்மைத்தன்மையை நமக்கு நினைப்பூட்டுகின்றன. இவ்வார்த்தை களை நாம் சுருக்கமாக சிந்தித்துப் பார்ப்போம்.

**தேவன் அநீதியுள்ளவரல்ல என்று நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும்**

இன்றைய நாட்களில் அநீதி இவ்வுலகில் முன்னெப்போது மில்லாததை விட பெருகியிருக்கிறது. அநியாயமும் அக்கிரமமும் எங்கும் தங்குதடையின்றி அரங்கேறிவருகிறது. இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் உலகத்தின் மக்கள் கடவுள் எப்படி இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார்? என்று புலம்புகிறார்கள். ஆனால், தேவன் எல்லோரையும் ஒருநாள் பிடிப்பார், எல்லோரையும் மிகச்சரியாக நியாயம் விசாரிப்பார், நீதி செய்வார் என்பதை அறியா திருக்கிறார்கள். தேவன் தம்முடைய மனதை மாற்றுவதில்லை, அல்லது தம்முடைய வாக்குதத்தங்களை ரத்து செய்வதுமில்லை தேவன் மனிதனிடமிருந்து மாறுபட்டவராய் எப்போதுமே தம்முடைய வாக்குத்தத் தத்தை நிறைவேற்றுகிறார். மனிதன் தன் மனதை மூன்று காரணங் களுக்காக மாற்றுகிறான். நம்மால் வருங்காலத்தை முன்னறிவிக்க முடியாத காரணத்தால் சில சமயங்களில் நாம் புதிய சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய தாயிருக்கிறது. ஆனால், தேவன் எதற்காகவும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை சில வேளையில் நம்முடைய திட்டங்கள் நம்மைவிட வலிமை வாய்ந்த ஏதோ ஒன்றால் அல்லது யரோ ஒருவரால் தடை செய்யப்படுகிறது. ஆனால், தேவனை விட வலிமை வாய்ந்த சக்தி இவ்வுலகில் எதுவுமில்லை. எனவே, இது தேவனுக்குப் பொருந்தாது. மூன்றாவது மனிதன் தன்னுடைய பொருளை சையினால் அதிக லாபத்திற்கு ஆசைப்பட்டு தன் மனதை மாற்றுகிறான் இதுவும் தேவனுக்குப் பொருந்தாது, அதனால் தான் மோசே எண்ணாகமம் 23:19ல் தேவனைப் பற்றி இவ்விதமாகச் சொல்லுகிறார் பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல அவர் சொல்லியும் செல்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றா திருப்பாரா? மேலும், சங்கீதக்காரன் இவ்விதமாக எழுதினார். **என் உடன் படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதையும் மாற்றா மலும் இருப்பேன் (சங்கீதம் 89:34). தேவன் நாம் அவரை முழுமையாக நம்பமுடியும் என்பதை நாம் அறிய விரும்புகிறார்** (எபிரெயர் 6 : 13–18).

**மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே**

இவ்வாக்கியம் காரியங்களை அலட்சியப்படுத்துவது என்னும் பொருளைக் கொண்டுள்ளது. மனிதனுக்கு மறதி என்பது இயல்பாகவே இருக்கிறபடியால் அவனுக்கு சில காரியங்களை நினைவூட்டுவது அவ்வப்போது அவசியமாகிறது. மனிதன் மறப்பது மட்டுமல்ல தான் செய்ய வேண்டியது என அறிந்த காரியங்களையும் செய்யாமல் அலட்சியமாயிருக்கிறான். இக்கருத்தை நாம் எபிரெயர் புஸ்தகத்திலும் காணமுடியும். இந்த கிறிஸ்தவர்கள் தங்கள் இரட்சிப்பைக் குறித்து

கவலையில்லாமல் இருந்தமைக்காக எச்சரிக்கப்பட்டார்கள் (எபிரெயர் 2:3) அவர்களுடைய அலட்சியப் போக்கினால் அவர்கள் வளர வேண்டிய அளவுக்கு வளரவில்லை(5:12). அவர்கள் அந்நியரை உபசரிப்பதில் அலட்சியம் காட்டக்கூடாது என்றும் உற்சாகபடுத்தப்பட்டனர் (13:2) இருந்தபோதிலும், தேவன் ஒருபோதும் ஒன்றையும் மறப்பதில்லை. தேவன் அன்பின் சிறிய செயல்பாடுகளை கூட கணக்கில் வைத்துக் கொள்கிறார் எதையுமே அவர் மறப்பதில்லை. உதாரணமாக, அவருடைய நாமத்தில் ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் கூட அதையும் தேவன் கணக்கில் வைத்துக்கொள்கிறார் (மத்தேயு 10:42). அது மாத்திரமல்ல, தேவன் எப்போதுமே தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றுவதில் அலட்சியம் செய்வதே இல்லை. இந்த உண்மை ஏசாயாவால் அவர் தேவனை ஒரு தாயோடு ஒப்பிடும்போது வலியுறுத்தப்படுகிறது. ஸ்திரீ யானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை(ஏசாயா 49:15).

அதேநேரத்தில் தேவன் சில காரியங்களை மறக்கவும் செய்கிறார். உதாரணமாக தேவன் நம் கடந்த கால பாவங்களை மறந்துவிடுகிறார். நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப் போடுகிறேன் உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன் (ஏசாயா 43:2). எபிரெயர் 2:12 ல் இதன் ஆசிரியர் எரேமியா 31:34-யை மேற்கோள் காட்டுகிறார். அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே, தேவன் பாவங்களை மன்னிக்கும் போது அந்த பாவங்கள் காணாமல் போய் விடுகின்றன. இது பெரும்பாலும் மனித பழக்க வழக்கங்களிலிருந்து பெரும்பாலும் மாறுபடுகிறது. ஷேக்ஸ்பியர் ஒருமுறை அவ்விதமாக எழுதினார். மனிதர் செய்யும் தீமை அவர்களுக்குப் பிறகும் வாழ்கிறது. ஆனால், நன்மை மனிதர்களுடைய எலும்புகளோடு பெரும்பாலும் பின்னிப் பிணையப்பட்டிருக்கிறது தேவன் நம்முடைய நற்கிரியைகளை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்கிறார். ஆனால், நம் பாவங்களை மறந்துவிடுகிறார். என்ன ஓர் ஆசிர்வாதம் இது!

**நம் அன்பின் பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே**

இது கைமாறு கருதாமல் அன்பின் நிமித்தமாக செய்யப்படும் கிரியைகளாகும். இது கிறிஸ்துவுக்காக காட்டப்படும் அன்பாயிருந் தாலும் கூட கிரியைகள் தேவையிலிருக்கும் சக கிறிஸ்தவர்களுக்கு செய்யப்படுகிறது. ஒருவர் சகப் பரிசுத்தவானை விசாரிக்கிறவராக யிருந்தால் அவர் கிறிஸ்துவை விசாரிக்கிறவராயிருக்கிறார் (மத்தேயு 25:40). இங்கே கிறிஸ்தவர்கள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படு கிறார்கள். ஒருவர் பரிசுத்தவானாக மாறுவதற்கு சாக வேண்டியதில்லை இன்னும் சொல்லப் போனால் பரிசுத்தவான் என்னும் பதம் அதிதபக்தியுடைய ஆவிக்குரிய நபரையும் குறிக்காது. எல்லா கிறிஸ்தவர் களும் பரிசுத்த வான்களையிருக்கிறார்கள், அதாவது தேவனுடைய சேவைக்காக பரிசுத்தமாக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்

பட்டிருக்கிறார்கள். இந்த கிறிஸ்தவர்கள் கடந்த காலங்களில் அன்பின் பிரயாசங்களை வெளிபடுத்திக்கொண்டிருந்தார்கள், அவர்களுக்கு உற்சாக மூட்டும் வார்த்தைகள் அவசியமாயிருந்தது, அவர்களுடைய பிரயாசம் விருதாவாகவில்லை என்பதை நினைப்பூட்டும் வார்த்தைகள் அவசியமாயிருந்தது.

சக கிறிஸ்தவர்களிடத்தில் அவர்கள் காட்டிய அன்பை தேவன் எப்போதுமே நினைவில் வைத்துக் கொள்வார். தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும் படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது (II நாளாகமம் 16:9). கொர்நேலியு தான் இரட்சிக்கப் படாத நிலையிலும் தேவனைப் பிரியப்படுத்த அவர் கொண்டிருந்த ஆசையை தேவன் கவனித்தார், அப்படியிருக்கும்போது அவருடைய பிள்ளைகள் எடுக்கும் முயற்சியை அவர் எந்த அளவு கவனிப்பார்? இவ்வார்த்தைகள் நம்மையும் கூட உற்சாகப்படுத்த வேண்டும். நாம் கர்த்தருக்காகப்படுகிற பிரயாசங்களுக்கு பலன் இன்னும் கிடைக்க வில்லையே என்று நாம் சில வேளைகளில் சோர்வடைவது உண்டு. நம் பிரயாசங்களை யாராவது கவனிக்கிறார்களா என்று பல வேளைகளில் நாம் நினைப்பதுண்டு. மனிதன் நினைக்காமல் இருக்கலாம். ஆனால், தேவன் எல்லாவற்றையும் கண்டு, நம்மை விசாரிக்கிறார் என்று நாம் நிச்சய படுத்திக்கொள்ளலாம்.

✞

---

✵ தானியேல் ஜெபித்தார் ... தேவன் சிங்கங்களின் வாயைக்கட்டினார்

✵ யோசுவா ஜெபித்தார் ... சூரியன் அப்படியே நின்றது

✵ எஸ்தர் ஜெபித்தார் ... பாழாக்கும் தீமையிலிருந்து யூதர்களை தேவன் விடுவித்தார்.

✵ எலியா ஜெபித்தார் ... மூன்றரை வருடங்களுக்கு மழை பெய்யவில்லை

✵ மோசே ஜெபித்தார் ... சிவந்த சமுத்திரத்தைத் தேவன் இரண்டாகப் பிரித்தார்

# யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம்

## Engaged in Battle

### *Raymond A. Leonard*

நாம் கர்த்தருடைய சேவைக்கான போராட்டத்தில்
களைப்பின்றி களத்தில் இணைந்து போராடுகிறோம்
தீவிரித்திருக்கும் தீய சக்திகளை ஆவியின் பட்டயமாகிய
தேவனுடைய வார்த்தையைக் கொண்டு போராடுவோம்.

தேவன் நம்மை  அவருக்குச் சேவை செய்யவும்
அவருடைய கொடியை தூக்கிபிடிக்கவும் அழைத்திருக்கிறார்
நாம் நற்செய்தியை நானிலத்திற்கும் பரப்பும் போது
பாவிகள் தங்கள் பாவத்தில் மரிக்க வேண்டியதில்லையே.



சேவை எனும் சால்வையை  நாம் தரித்த போது
அவருக்கென்று நம்மை அருமையாக அர்ப்பணித்துக் கொண்டோம்
இடர்பாடுகளைக்கண்டு இடறலடையாமல்  இறைப்பணியில்
நம்மை முழுமையாக இணைத்துக் கொள்வோம்.

நாம் தேவனுடைய  வார்த்தையை விளம்பும் போது
நம்மிடம் எந்த அதிகாரமும், ஆதாரமும் இல்லை
இருந்த போதிலும் தேவனுடைய வார்த்தையில் ஜீவனும்
வல்லமையும் இருக்கிறபடியால் இரட்சிப்பை உண்டாக்குகிறது.

நாம் போராட்டத்தில் தோல்வியைக்கண்டு துவண்டுவிடாமல்
விடாமுயற்சியுடன் விழுந்துபோகாமல் விழித்திருக்க வேண்டும்
நம் போராட்டம் நித்திய ஆத்துமாக்களுக்கான ஒன்றாக இருப்பதால்
பொறுப்புகளை தட்டிக்கழிக்காமல் தொடர்ந்து போராடுவோம்.


## தேவன்

## உங்களால் கிறிஸ்துவை காண முடியும்

## You Can See Christ

Glenn Colley

**கா**ணாத கிறிஸ்துவைப் பின்பற்றுவது கடினம் என்று சொல்கிற யாவருக்கும் I பேதுரு 1:8 ஒரு தீர்வாக அமையும். **"அவரை நீங்கள் காணமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷ முள்ளவர்களாய்க் களிகூர்ந்து"** என்றுள்ளது. இயேசு கிறிஸ்து புதிய ஏற்பாட்டைக் கொண்டு நம்மை ஆளுகிறார் நம்மை வழி நடத்துகிறார். அந்த புதிய ஏற்பாட்டை நாம் பின்பற்றும்படி விட்டுச் சென்றிருக்கிறார் (எபிரெயர் 9:1-17).



இருப்பினும் ஒரு விதத்தில் இன்றும் கூட நாம் கிறிஸ்துவைக் காண முடியும் என்பது கவனிக்கப்பட வேண்டும். அப்போஸ்தலர் 9:4 ல் தமஸ்கூவுக்கு செல்லும் பாதையில் சவுலை சந்தித்த இயேசு கிறிஸ்து சவுலே சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று கேட்டார். சவுலால் எப்படிக் கிறிஸ்துவை துன்பப் படுத்தியிருக்க முடியும்? கிறிஸ்து மரித்து, மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். இதை அப்போஸ்தலர் 1-ஆம் அதிகாரத்திலேயே வாசிக்கிறோம். இருந்த போதிலும் இயேசு கிறிஸ்து சவுலைப் பார்த்து என்னை ஏன் துன்பப்படுகிறாய் என்று கேட்டார்? இதற்கான விடையை நாம் அப்போஸ்தலர் 8:3 ல் வாசிக்கமுடியும். சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய் காவலில் போடுவித்து சபையை பாழாக்கிக் கொண்டிருந்தான். இங்கே உண்மை என்னவென்றால், சவுலோ அல்லது வேறு யாரோ கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறவர்களை துன்பப்படுத்தினாலோ அல்லது காயப்படுத்தினாலோ அது கிறிஸ்துவைக் காயப்படுத்துகிறது.

நாம் கிறிஸ்தவர்களிடத்தில் அக்கறை காட்டி அவர்களிடத்தில் அன்பு கூரும் போது நாம் இயேசுவைக் காண முடியும். நியாயந்தீர்ப்பு

காட்சியில் இக்கருத்து மிகத்தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும். “அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன் எனக்கு போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள் என்பார். அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்கு போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத்தாக முள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைப் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக் கொண்டோம். எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதி யுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தமாக மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார் [மத்தேயு 25:34-40].

இங்கே இந்த வசனத்தின் போதனை மிகத்தெளிவாக இருக்கிறது, இதில் புரியாத புதிர் ஒன்றுமே இல்லை. நாம் கிறிஸ்துவின் முகத்தைக் காண நம் அருகிலிருக்கும் சகோதர, சகோதரிகளின் முகங்களை மாத்திரம் பார்த்தாலே போதுமானது. நாம் அவர்களிடத்தில் காட்டும் அன்பும், தயவும் கிறிஸ்துவாலே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நாம் அவர்களுடைய முகங்களைக் காணும் போது நம் இயேசுவின் இனிமையான முகத்தைக் காணும் ஓர் உணர்வு உள்ளூர ஏற்படுகிறது.

சபையானது கிறிஸ்துவின் சரீரம் என்றழைக்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை [எபேசியர் 1:22,23]. நாம் கிறிஸ்துவுக்கு நண்பர்கள் மாத்திரமல்ல, நாம் அவருடைய சரீரமாயிருக்கிறோம். இன்றும் நாம் அவரைக் காண முடியும்.

**நாம் கிறிஸ்துவின் முகத்தைக்காண நம் அருகிலிருக்கும் சகோதர சகோதரிகளின் முகங்களை மாத்திரம் பார்ததாலே போது மானது. நாம் அவர்களிடத்தில் காட்டும் அன்பும், தயவும் கிறிஸ்து வாலே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நாம் அவர்களுடைய முகங்களைக் காணும்போது அதாவது, தேவையில் இருக்கும் நம் சகோதர சகோதரிகளின் முகங்களைக் காணும் போது, நம் இயேசு வின் இனிமையான முகத்தைக் காணும் ஓர் உணர்வு உள்ளூர ஏற்படுகிறது.**

## தேவன்

## கிறிஸ்துவுக்குள் முழுமை

## Complete in Christ

David Deffenbaugh

வெட்டி மாற்றி அமைப்பதால் உருவாகக்கூடிய ஒரு புதிய விளையாட்டில் விளையாடிய ஒருவரால், அதில் ஒரு துண்டு காணாமல் போய்விட்டாலும் அதன் முழுமையை நன்றாக உணர முடியும். 500 துண்டுகள் அல்லது காய்களைக் கொண்ட புதிய விளையாட்டில் 499 துண்டுகள் இருந்தாலும் கூட அந்த ஒரு துண்டு காணாமற் போய்விட்டதென்றால் அவ்விளையாட்டில் முழுமையான உருவத்தை உருவாக்க முடியாது. ஆம், இந்தப் புதிர் விளையாட்டில் ஒரு துண்டு அல்லது ஒரு காய் காணாமல் போய்விட்டாலும் கூட அழகான உருவத்தை உருவாக்கி ரசிக்க முடியாது. அரைகுறைத் தன்மை எவ்வளவு அசிங்கமானது என்பதையும் அப்போது தான் நாம் உணர முடியும்.

ஜனங்களுக்கு எப்போதுமே முழுமை அவசியப்படுகிறது. நம் பூமிக்குரிய சரீரங்கள் சங்கீதக்காரனாகிய தாவீதின் கூற்றுப்படி நம்பமுடியாத வகையில் பிரமிக்கத்தக்க அதிசயமாக உண்டாக்கப் பட்டிருந்தாலும் கூட (சங்கீதம் 139:14), அதைத்தாண்டி நம் சரீரத்திற்கு ஏதோ ஒன்று அவசியப்படுகிறது. மனிதன் எப்போதுமே தனக்கு வெளியே தன்னைவிடப் பெரிய முக்கியமான ஒன்றைத் தேடியிருக்கிறான். மனிதனுடைய தேடல் முழுமைக்காக எப்போதுமே இருந்து வருகிறது. தத்துவ ஞானத்திற்கும், கல்விக்கும் பேர் போன அத்தனே பட்டணத்திலும் கூட அவர்கள் அறியப்படாத தேவர்களை ஆராதிக்க முயற்சிப்பதில் முழுமைக்கான அவர்களுடைய தேடல் வெளிப்பட்டதை பவுலால் உணர முடிந்திருக்கிறது ( அப்போஸ்தலர் 17). மனிதன் தன் முழுமையை இயேசு கிறிஸ்துவுக்குள் மாத்திரமே காண முடியும். ஏனென்றால், தேவத்துவத்தில் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. **மேலும், சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள் ( கொலோ 2:9,10).**

தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால் அவரால் மாத்திரமே நம்மை பரிபூரணமாக்க முடியும். மிக அழகாக, அற்புதமாக இயேசு கிறிஸ்துவைப் பற்றி (கொலோசெயர் 1:15-19) வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற காரியங்களை வாசித்துப் பாருங்கள். இவ்வசனப்பகுதி நாம் இயேசு கிறிஸ்துவை யாரோடும் ஒப்பிட முடியாது என்பதை நமக்குக்

காட்டுகிறது. நிச்சயமாகவே, கிறிஸ்துவுக்குள் இருக்கும் பரிபூரணத்தை பலவீனமான மனித முயற்சிகளால் தரமுடியாது. இவ்வுலகின் தத்துவ ஞானங்களோ, பாரம்பரியங்களோ தேவ தூதர்களின ஆராதனையோ, தரிசனங்களோ, சுயமாய் உண்டாக்கப் பட்ட மதங்களே!

இவை எதுவும் கிறிஸ்துவுக்குள் இருக்கும் பரிபூரணத்தை நமக்குத் தரமுடியாது [கொலோ 2:20-23]. மாறாக, பரிபூரணம் என்பது கிறிஸ்து நமக்குத் தரும் இரட்சிப்பில் இருக்கிறது. அந்த இரட்சிப்பைப் பற்றிய விவரிப்புகள் கொலோசெயர் 1:15-19 வசனங்களில் கிறிஸ்துவைப் பற்றிய மகிமையான காரியங்களுக்கு ஆதரவாகவும், ஆதாரமாகவும் இருக்கின்றன. ஒருவருடைய தொடர்ச்சியான ஆவிக்குரிய வளர்ச்சியிலும் நாம் பரிபூரணத்தைக் காண முடியும்.

**கிறிஸ்துவுக்கான பவுலின் ஜெபம் அவர்கள் தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும் சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து கர்த்தருக்குப் பிரியமுண்டாக ஆவிக்குரிய ரீதியில் பாத்திரராக நடந்து கொள்ள வேண்டும் என்பதாக இருந்தது [கொலோ 1:9,10].**

பரிபூரணம் அல்லது முழுமை எவ்வித கேள்வியுமின்றி முக்கியமானதாயிருக்கிறது. ஆனால், அது உண்மையாவே கிறிஸ்துவுக்குள் தான் காணப்படுகிறது. ✝

---

நான் அவரை அறிந்து

அவர் அருகில் நின்று மீட்கப்படுவேன்

ஆணிகளால் கடாவப்பட்ட

அவருடைய கைகளால் அவரை

அறிந்து கொள்வேன்...



## தேவனுடைய வார்த்தை
# வேதாகமம்
## The Bible

Charles Cash



**வே**த வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாகவும் அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது (II தீமோத்தேயு 3:16,17).

வாடிகன் நாட்டில் 325 பவுண்டு எடையுள்ள எபிரெய வேதாகமம் இன்றும் உள்ளது. இதன் விலை இது தங்கத்திலிருந்தால் என்ன விலை இருக்குமோ அதைவிட விலை கூடுதலாகும். இந்த வேதாகமம் எபிரெய வேதாகமத்தில் சரியான பிரதிகளையுடைய வேதாகமாக இருந்திருந்தால் இதன் மதிப்பு இன்னும் கூடுதலாக இருந்திருக்கும். ஒருவேளை, உலகிலுள்ள எந்த மொழி வேதாகமததிலும் இந்த வேதாகமம் சரியான பிரதிகளை உடையதாக இருந்தால் இதன் மதிப்பை கணக்கிடவே முடியாது.

உலகின் முதன் முதலில் ஜெர்மனியிலுள்ள மெய்ன்ஸில் அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்த Johann Gutenberg சுமார் 1456– ல் வேதாகமத்தை அச்சடித்தார். இந்த வேதாகமம் Johann Gutenbery வேதாகமம் என்றழைக்கப்படுகிறது. இப்படி அச்சிடப்பட்ட வேதாகமங்களில் இப்போது வெறும் இருபது வேதாகமங்களே உள்ளன. இந்த வேதாகமங்களில் ஒன்று 1978 ல் இருபது லட்சம் டாலருக்கு விலைபோனது. இந்த Gutenberg வேதாகமத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை எத்தனை வேதாக மங்கள் அச்சிடப்பட்டன, விநேயோகிக்கப்பட்டன என்பதைப் பற்றிய துல்லியமான பதிவுகள் இல்லை. இருந்த போதிலும், 1800 – களின் ஆரம்பத்திலிருந்து துல்லியமான பதிவுகள் உள்ளன.

இங்கிலாந்திலுள்ள வேதாகம சங்கம் 1816க்கும் 1975க்கும் இடையில் அச்சிடப்பட்ட வேதாகமங்களின் எண்ணிக்கை 1992 ல் தோராயமாக 600 கோடியாக உயர்ந்தது. உலக முழுவதும் வருடத்திற்கு 100 மில்லியன் வேதாகமங்கள் விற்பனையாகின்றன. இது இவ்வுலகிலுள்ள எந்த ஒரு புத்தகத்தை விடவும் அதிகமானது. எந்தவித சந்தேகமுமின்றி வேதாகமமே உலகில் அதிகமாக விற்பனையாகும் புத்தகமாகும். இன்றைய தேதிவரை, சுமார் 800 கோடி வேதபுத்தகங்கள் உலக முழுவதும் விநியோகிக்கப்பட்டிருக் கின்றன. இதுமட்டுமல்லாமல் கோடிக்கணக்கான மக்கள் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக கணினி, அலைபேசி போன்றவற்றில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும் வேதாகமத்தை பயன்படுத்துகிறார்கள்.

முழுமையான வேதாகமம் 450 க்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாடு மட்டுமே கிட்டத்தட்ட 14000 மொழிகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. எழுநூறு கோடி மக்களுக்கும் கூடுதலாக வாழும் இவ்வுலகில் கிட்டதட்ட ஒரு நபருக்கு ஒரு வேதாகமம் வீதம் இருக்கின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக, வேதாகமம் பல நாடுகளில் சமமற்ற முறையில் விநியோகிக்கப்படுகிறது. குறிப்பாக ஆசியா மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகளில் இவ்விதமாக நடக்கிறது. அமெரிக்க தேசத்திலுள்ள மக்களிடம் இருப்பதைவிட மேற்கத்திய நாடுகளிலுள்ள மக்களிடம் வேதாகமம் அதிகமாக இருக்கின்றது. Harper San Francisco புத்தக பட்டியலிடும் நிறுவனத்தின்படி அமெரிக்க மக்கள் வருடந்தோறும் 425 – டாலர் பணத்தை வேதாகமத்திற்காக செலவழிப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சராசரி அமெரிக்க குடும்பமும் நான்கு வேதாகமங்களை வைத்திருப்பதாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய தேசம் உருவாக்கப்பட்ட ஆரம்ப நாட்களை நாம் பார்க்கும் போது, அதிலும் குறிப்பாக அரசியல் அமைப்பு சட்டம் மற்றும் உரிமை மசோதாக்கள் போன்றவைகளின் தோற்றத்தை நாம் கவனிக்கும் போது அமெரிக்க தேசம் அதன் தொடக்கத்திலிருந்தே தேவன் மற்றும் வேதாகமத்தின் மீதான விசுவாசத்தில்தான் கட்டப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால், இதே அமெரிக்க தேசத்தில் அந்த அஸ்திபாரத்தை திட்டமிட்டு அரிக்கச் செய்யும் அவலச் செயலும் அரங்கேறி வருவது உண்மையாகவே துக்கத்தை ஏற்படுத்துகிறது.

வேதாகமம் மதிப்பில்லா ஒன்றாகிவிடுகிறது, அதாவது எந்த விலை கொடுத்தாலும் அது வேதாகமத்திற்கு ஈடாகாது. வேதாகமம் எப்போதுமே புத்தகங்களின் புத்தகமாக இருந்து வருகிறது, அது அப்படியே இருக்கும்!

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை** என்று உறுதிப்படுத்துகிறார் [மாற்கு 13:31]. அவருடைய வார்த்தைகள் வாக்குதத்தங்களாகவும், உபதேசங்களாகவும் நம்மிடத்தில் இருக்கின்றன. அவைகள் நம்மை தேவனிடத்திலும், பரிபூரண ஜீவனிடத்திலும் அழைத்துச்செல்லும் வழிகளாக இருக்கின்றன, அவைகள் ஒழிந்துபோகவில்லை, ஒரு போதும் ஒழிந்து போவதும் இல்லை!

இங்கே ஒரு புத்தகம் இருக்கிறது. அது வேதாகமமாயிருக்கிறது. அது இதுவரை அச்சிடப்பட்ட புத்தகங்களிலேயே விலை மதிப்புள்ளது. இருந்த போதிலும் அதை வாசிப்பதற்கு நேரம் கண்டுபிடிக்கா மலிருப்பது என் துரதிஷ்டம் என்று Patrick Henry என்பவர் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

---

## கிறிஸ்தவனின் அவசியமான பண்புகள்

- **எல்லா மனுசருக்கும் முன்பாக யோக்கியமானவைகளைச் செய்வது [ரோமர் 12:17]**
- **எல்லா மனுசரோடும் சமாதானமாயிருப்பது [ரோமர் 12:18]**
- **பழிவாங்குவதில் ஒருபோதும் ஈடுபடாமலிருப்பது [ரோமர் 12:19]**
- **தீமைக்குப்பதிலாக நன்மையையே செய்வது [ரோமர் 12:21]**

**தேவனுடைய வார்த்தை**

# இரண்டுக்கும் இடையில் என்ன?

# What`s In Between?

Edward Anderson

**ஒ**ரு உயர்நிலைப்பள்ளி ஆசிரியரிடம் உரையாடிக்கொண்டிருந்த போது, சமையல் கலையைப்பற்றி சில சுவாரஸ்யமான காரியங்களை பரிமாறிக் கொண்டோம். அதிலும் குறிப்பாக பள்ளிக்கூடம் முடிந்து உட்கொள்ளும் நொறுக்குத்தீனிகளை குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் போது அந்த ஆசிரியர் என்னிடம் பழக்கூழை இரண்டு ரொட்டிகளுக்கிடையில் வைத்து சாப்பிட்டதுண்டா என்று கேட்டார். அதற்கு நான் என் அம்மா தயாரித்து தந்த சூடான பிஸ்கட்டுகளுக்கு இடையில் வைத்து சாப்பிட்ட ருசியுள்ள பழக்கூழை உட்கொண்டதை அவரிடம் பகிர்ந்து கொண்டேன் இன்னும் சொல்லப்போனால் அந்த பிஸ்கட்களோடு சேர்த்து சாப்பிட்ட ஜேம் பட்டர் போன்றவைகளையும் அவரோடு பகிர்ந்து கொண்டேன். ஆனால், வேறொன்றை மனதில் வைத்து ஆசிரியர் என்னிடம் கேள்வியைக் கேட்டார், அவர் கஷ்டமான காலகட்டங்களில் இரண்டு ரொட்டிகளை எடுத்து அவைகளுக்கிடையே ஒன்றுமே இல்லாமல் சாப்பிட்ட அந்த நாட்களைக் குறித்த நினைவலைகளை என்னோடு பகிர்ந்து கொண்டார்.



தேவனுடைய வார்த்தை ஆத்துமாவுக்கான ஆகாரமாயிருக்கிறது. **மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே** [மத்தேயு 4:4]. வேத வாக்கியங்கள் எந்த நற்கிரியையுஞ்செய்ய தகுதியுள்ளவர்களாக இருக்கும் படியாக நமக்கு எல்லாவற்றிலும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது [ II தீமோத்தேயு 3:16,17]. தேவனுடைய வார்த்தை உண்மையும் நன்மையுமான இருதயத்தை உடைய ஒருவரை ஒரு போதும் ஏமாற்றாது [ லூக்கா 8:15]; இது சத்தியத்தைத் தேடிக் கொண்டிருக்கும் பசியுள்ள ஆத்துமாவை திருப்தியாக்கும் [யோவான் 8:32;17:17]. தேவனுடைய வார்த்தை பன்முகத்தன்மை கொண்டதும், எல்லா வயதினருக்கும் பொருந்தும் வண்ணத்தில் அமைந்துள்ளது. உதாரணமாக திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வஞ்சையாயிருக்கும் புதியாய்ப் பிறந்த குழந்தைகளுக்கும் பொருந்தும் [I பேதுரு 2:2]; பலமான ஆகாரத்தை உண்ணும் பூரண வயதினருக்கும் பொருந்தும் [எபிரெயர் 5:12-14].

தேவனுடைய வார்த்தை எனும் பண்டக சாலை எப்போதும் பூரணமாகவே இருக்கிறது. அது பஞ்ச காலத்தில் தாக்குபிடித்த மாவுப்பானையைப் போலவும், எண்ணெய் கலசத்தைப் போலவும் உள்ளது [I ராஜாக்கள் 17:14]. மேலும், தேவனுடைய வார்த்தை இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்தில் நாற்பது வருடங்களாக நடந்தும் பழையதாகாத பாதரட்சகனைப் போன்றதாகும் [ உபாகமம் 29:5].

தேவனுடைய வார்த்தை வாழ்க்கையின் எல்லா சூழ்நிலை களுக்கும் போதுமான ஆகாரமாயிருக்கிறது. பரமப்பிதா ஆரோக்கிய மான, ஆவிக்குரிய, ஆகாரமாக நமக்கு அதிகமாக சேர்த்து வைத்திருக்கிறார். தேவனுடைய வார்த்தையை சரியான முறையில், தவறாமல் நாம் எடுத்துக்கொண்டால் அது நம்மை அகங்காரமடைச் செய்யாமல் தாழ்மையாயிருக்கச் செய்யும். அது நம்மை அதிக அன்புடையவர்களாக, தயவுள்ளவர்களாக, அக்கறையுள்ளவர்களாக வழிநடத்தும் [I கொரிந்தியர் 13]

நீங்கள் பிசாசின் ஆரோக்கியமற்ற உணவை உண்டு, வயிறு வீங்கி பாவத்தால் பாரப்பட்டிருக்கிறீர்களா? உங்கள் உணவை மாற்றுவதற்கான நேரம் **இதோ. கர்த்தருடைய வேதம்**

**குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது [சங்கீதம் 19:7].** கிறிஸ்துவினிடத்தில் மாத்திரமே நித்திய ஜீவனைத் தரும் வசனங்கள் உண்டு [யோவான் 6:68]. கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு தேவனிடத்திலும் அவருடைய குமாரனிடத்திலும் விசுவாசம் வைக்கப் போதிக்கிறது [எபிரெயர் 11:6; யோவான் 8:24]. பாவங்களிலிருந்து மனந்திரும்ப வலியுறுத்துகிறது [அப்போஸ்தலர் 3:19]. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட ஊக்குவிக்கிறது [அப்போஸ்தலர் 8:37] I ரோமர் 10:9,10. பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற கட்டளையிடுகிறது [அப்போஸ்தலர் 2:38; மாற்கு 16:16]. கர்த்தருடைய கிரியையிலே எப்போதும் உண்மையாயிருக்க நம்மை உற்சாகப்படுத்துகிறது. ✞

---

## *தேவபக்தி எதினால் சாத்தியம்*

**கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளர்வதில் [II பேதுரு 3:18]**

**கிறிஸ்தவப் பண்புகளை கூட்டிக் கொள்வதில் [II பேதுரு 1:-11]**

**பரிசுத்தவான்களோடு சபை கூடி வருவதில் [எபிரெயர் 10:25]**

**தியாகப்பூர்வமாக கர்த்தருக்கு கொடுப்பதில் [II கொரிந்தியர் 9:78]**

**சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதில் [ரோமர் 12:12]**

**பந்தயம் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்வதில் [பிலிப்பியர் 3:14]**

## இரட்சிப்பு

# வெள்ளாடுகளோடு போக வேண்டாம்

# Don't Go With The Goats !

Perry N. Hall

**ந**ம் ஆண்டவரும், இரட்சகரும், நியாயாதிபதியுமாகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 25 : 31 – 46 வசனங்களில் ஒட்டுமொத்த மனித இனத்துக்கான இறுதி நியாயத்தீர்ப்பைக் குறித்து மிக விவரமான தெளிவான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அந்த நியாயத்தீர்ப்பில் ஒவ்வொருவரும் நித்திய மகிழ்ச்சியை அல்லது நித்திய தண்டனை யை அனுபவிக்கும்படி தீர்ப்பளிக்கப்படுவார்கள் என்பதை கிறிஸ்து தெளிவாக வெளிப்படுத்துகிறார். மேலும், அந்த மகா நாளில் நியாயத்தீர்ப்பு செய்வதற்கும், பலன்களை அளிப்பதற்கும் ஒட்டுமொத்த உரிமையை தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு தேவன் கொடுத்திருக்கிறார் (அப்போஸ்தலர் 17:31). இயேசு கிறிஸ்து இப்பூமியை நியாயந்தீர்க்க தம்முடைய மகிமையிலே வரும் போது, தேவதூதர்களையும் அழைத்து வந்து மகிமையின் சிங்காசனத்தில் வீற்றருளுவார். தற்போது இயேசு கிறிஸ்து பிதாவின் சிங்காசனத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றி ருக்கிறார். இது கிருபாசன மாயிருக்கிறது. இங்கே நாம் தைரியமாக கிட்டிச்சேர முடியும். இது கர்த்தத்துவத்தின் சிங்காசனமாகவும் இருக்கிறது. அங்கேயிருந்து எல்லா அதிகாரத்தோடும் தம்முடைய ராஜ்யம் அல்லது சபையை ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். இந்த சிங்காசனத்தில் இயேசு கிறிஸ்து ஆசாரியராயிக்கிறார்.



நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கடைசி நாளில் வீற்றிருக்கும் அந்த மகிமையின் சிங்காசனம் அவருடைய நியாயத்தீர்ப்பின் சிங்காசனமாகும். அவர் மனித இனத்தில் கீழ்படியாதவர்களிடத்திலிருந்து, கீழ்ப்படிகிறவர்களைப் பிரிப்பார். இப்போது எல்லோருமே ஒரே தேசத்தில், ஒரே மாநிலத்தில், கிராமங்களில், சபைகளில், குடும்பங்களில் சேர்ந்தே வாழ்கிறார்கள். இங்கே இயேசு கிறிஸ்து மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல தமக்குக் கீழ்ப்படிகிறவர்களையும் பிரிக்கப் போவதாகச் சொல்கிறார். நியாயத்தீர்ப்பு நாளில் இயேசு கிறிஸ்து நீதிமான்களை வலது பக்கத்தில் நிறுத்துவார், அநீதிமான்களை இடது பக்கத்தில் நிறுத்துவார். பின்பு அவர் இடது பக்கத்தில் நிற்பவர்களைப்பார்த்து சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்று தீர்ப்பளிப்பார்.

அன்பானவர்களே! நாம் நித்தியத்தில் வெள்ளாடுகளோடு கலவாமல் இருக்க வேண்டுமென்றால், இப்போதே அவர்களோடு இவ்வுலகிலேயே கலவாமல் இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தாம் நல்ல மேய்ப்பனென்றும், ஆடுகளுக்காக தாம் ஜீவனைக் கொடுப்பதாகவும் சொன்னார். மேலும், அவருடைய ஆடுகள் தம்முடைய சத்தத்தைக் கேட்டு கீழ்ப்படிவதாகவும் சொன்னார். அவைகளுக்கு அவர் நித்திய ஜீவனை அளிக்கிறார்.

பொதுவாக, செம்மறியாடுகள் மென்மையானவைகள், கீழ்ப்படியக் கூடியவைகள், பொறுமையானவைகள், கபடற்றவைகள். இந்த செம்மறியாடுகள் மேய்ப்பனுக்கு அப்படியே பின் செல்கின்றன. ஆனால், வெள்ளாடுகள் கரடுமுரடானவைகள், அடங்காதவைகள், மேய்ப்பனுக்கு விரோதமாகவும் வரும் வழியில் எல்லாவற்றுக்கும் எதிராகவும் செயல்படும் தன்மை கொண்டவைகள்!

இவ்வுலகத்தின் கீழ்ப்படியாத, விருப்பமில்லாத வெள்ளாடுகள் தேவனைப் பற்றியும், அவருடைய சித்தத்தைப் பற்றியும் ஆத்துமாக்களைப் பற்றியும் அக்கறையில்லாதவர்கள். இவர்களுக்குச் சக மனிதர்களுடைய நலன் பற்றி எந்த அக்கறையுமே இல்லை. வெள்ளாடுகளோடு போக வேண்டாம்.

## இரட்சிப்பு

### வயல் நிலங்களில் உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்

# Look on the Fields

Dayton Keesee

மனிதர்களுக்குள்ளே கிறிஸ்துவின் ஊழியம் இழந்து போனதைத்தேடவும் இரட்சிப்பதாகவுமே பிரதானமாக இருந்தது (லூக்கா 19:10). இந்தத் தேடுதல் என்பது ஓர் அர்ப்பணிப்பபான செயல்முறையாகும். தேடல் என்பதற்கான கிரேக்க வார்த்தை Zeteo என்பதாகும். இதன் ஆழமான பொருள் தியானித்து, விசாரித்து, ஆசைப்பட்டு எப்படியாவது ஒரு பொருளை கண்டுபிடித்து விட வேண்டும் என்னும் நோக்கத்தில் தீவிரமாய் தேடுவதாகும் (Thayer 272).

நீங்கள் சமீபத்தில் இழந்து போன ஆத்துமாவை சிந்தித்து, தியானித்து, விசாரித்து, ஆசைபட்டு எப்படியாவது அதை கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் தேடினீர்களா? நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடிகளை பின்பற்றுகிறதாக இருந்தால் இழந்து போன ஆத்துமாக்களின் மீது பாரமாயிருந்து அதைக் குறித்து சிந்தித்து தியானித்து அந்த ஆத்துமாவை ஆதாயப்படுத்தப் பாடுபட வேண்டும் (I பேதுரு 2:21). கிறிஸ்து உண்மையாகவே தன் ஊழியத்தை நிறைவேற்ற தம்மிலிருந்த ஆத்துமபாரத்தை நிரூபித்தாரா?

இதற்கான மிகச்சிறந்த உதாரணம் ஆம், கிறிஸ்து தம்முடைய ஆத்தும பாரத்தை நிறைவேற்றினார். இதை நாம் யோவான் 4 அம் அதிகாரத்தில் வாசிக்க முடியும். அவர் தம்முடைய ஆத்துமபாரத்தை நிறைவேற்றியது ஓர் அந்நிய சூழ்நிலையில் என்பது சுவாரஸ் யமானது. அதிலும் குறிப்பாக, சமாரியர்கள் மத்தியில் என்பது இன்னும் சுவாரஸ்யமானது. அப்போஸ்தலர்கள் பிரதானமாக தங்கள் நேரத்தை புசிப்பதைக் குறித்தும், குடிப்பதைக் குறித்தும் சிந்தித்துக் கொண்டும், பேசிக்கொண்டும் செயல்பட்டுக் கொண்டிருந்த வேளைகளில் ( யோவான் 4:31-33), இயேசு கிறிஸ்து அந்த சமாரியரின் ஆத்துமாவைக் குறித்து சிந்தித்தது அவர்களை ஆச்சரியப்படுத்தியது (4:27) அப்போஸ்தலர்கள் ஆத்தும ஆதாயத்தில் ஈடுபடுவதற்கு அது சரியான நேரமில்லை என்று கருதினார்கள். அவர்களைப் பொறுத்த வரை அது சரியான இடம், தவறான நபர், தவறான நேரம்.

இயேசு கிறிஸ்து இதோ வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று அப்போஸ்தலர்களை லேசாகக் கடிந்து கொண்டார். (யோவான் 4:35). இந்த யோவான் நான்காரத்தில் அதிகாரம் இயேசு எதைக்குறித்து பேசினாரோ அதை அறிந்திருந்தார் என்பதை நமக்கு நிரூபிக்கிறது. அப்போஸ்தலர்களுக்கு முன்பாக சமாரியர்கள் இருந்தார்கள், ஆனால் அந்த ஆத்துமாக்களைக் குறித்து அவர்களுக்கு அக்கறையில்லை. அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம் பேர் அவரை விசுவாசித்தார்கள் (4:41); I யோவான் 4:14. கிறிஸ்துவைப் பொறுத்த வரை தம்முடைய ஊழியத்தைப் குறித்து கவனமும், விசுவாசமும் இருந்தது. ஆனால், அப்போஸ்தலர்களை பொறுத்த வரை அவர்கள் விசுவாசத்தை விட உணவைப் பற்றிதான் அதிகமாக அக்கறைப்பட்டார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களையும் என்னையும் பார்த்து இதோ வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று சொன்னால் எப்படியிருக்கும்? (வசனம் 35). இங்கே பாருங்கள் கவனமாக பார்த்தால், ஆழ்ந்து சிந்தித்தல், பார்த்து கற்றுக் கொள்ளுதல் போன்ற ஆழமான அர்த்தங்களைக் கொடுக்கும்.

சகோதரர் Norman Gipson என்பவர் 1978–ல் Sunset பிரசங்கப்பள்ளிக்கு வந்து அங்கே ஆசிரியர்கள் மத்தியில் மிகவும் சோர்வாகவும், கவலையாகவும் காணப்பட்டார். மேலும், அவர் அங்கேயிருந்தவர்களிடம் பெரும்பாலும் தன்னால் இராத்திரியில் நன்றாக தூங்கமுடியவில்லை என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். ஒருவரிடம் தேவனுடைய வார்த்தையைப் படித்துவிட்டு வீடு திரும்பிய போது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பாடலாக எழுதினார்.

**நீண்டகாலம் எங்கே போயிருந்தீர்கள்?**

ஒரு மனிதனிடம் நான் இயேசுவைப் பற்றி பேசினேன்
அவர் மிகுந்த ஆச்சரியத்துடன் அதை கவனித்தார்
அம்மனிதன் தன் கண்ணில் கண்ணீருடன் கேட்டபோது
என் இருதயத்தில் வலிக்கத்தொடங்கியது.

**பல்லவி**

நீண்டகாலம் நீங்கள் போயிருந்தீர்கள்?
எங்கள் வீட்டுக்கு நீங்கள் ஏன் வரவில்லை?
நீண்டகாலமாக நான் பாவத்தில் வாழ்ந்து வருகிறேன்
முன்பே நீங்கள் ஏன் என்னிடம் எதுவுமே சொல்லவில்லை?

நான் அம்மனிதனிடம் மனித இனத்துக்கு இட்சிப்பைக் கொண்டுவர
கர்த்தர் தாமே தம் மகிமையைவிட்டு கீழே இறங்கினார்.
அருமையான வார்த்தையை அவர் சந்தோஷமாகக் கேட்டார்
அதைக்குறித்து அவர் மறுபடியும் என்னிடம் கேட்ட போது அழுதார்

கிறிஸ்துவே ஜீவன் சத்தியம் வழி என்று
ஒட்டுமொத்த உலகத்திற்கும் நற்செய்தியை அறிவியுங்கள்;
அப்போது காலம் கனிந்து நியாயத்தீர்ப்பு நாளில்
அப்பெருங்கூட்டத்தில் யாரும் குறைகூறாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்
நீங்கள் யாருடைய வீட்டிற்காவது போக வேண்டுமென்று யாராவது
காத்துக் கொண்டிருக்கிறார்களா?

---

## தேவனுடைய அற்புதமான பண்புகள்

| | | |
|---|---|---|
| 1. | சர்வ வல்லமையுள்ளவர் | சங்கீதம் 89 : 8; ஆதியாகமம் 18:14 |
| 2. | சர்வஞானி | ரோமர் 8 : 27; எபிரெயர் 4:13 |
| 3. | சர்வவியாபி | சங்கீதம் 139 : 7-10; அப். 17:27 |
| 4. | மாறாதவர் | பிரசங்கி 3 : 14 |
| 5. | தேவன் ஆவியாயிருப்பவர் | யோவான் 4 : 23,24 |

**இரட்சிப்பு**

**நான் எழுதுவதற்கு ஒரே ஒரு கட்டுரை மட்டும் இருந்தால்**

# If I Had Only One More Article

**Bob Prichard**

கடந்த பல வருடங்களில் நான் நூற்றுக்கணக்கான கட்டுரைகளை கிறிஸ்தவ பத்திரிக்கைகளுக்காக எழுதியிருக்கிறேன். திட்டமிட்டபடி காரியங்கள் கைகூடினால் நான் இன்னும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளை எழுதுவேன். ஆனால், நான் என் கடைசி கட்டுரையை எழுதும் நாளும் வரும். ஒருவேளை இந்தக் கட்டுரை அப்படி என கடைசி கட்டுரையாக இருந்தால் நான் உங்களிடம் என்ன சொல்ல விரும்புவேன்?



எனக்குப் பிடித்தமான பாடல் ஒன்று இவ்விதமாகச் சொல்கிறது, உங்களால் தேவ தூதர்கள் போல் பாட முடியவில்லை என்றால், உங்களால் பவுலைப் போல் பிரசங்கிக்க முடியவில்லையென்றால், இயேசுவின் அன்பை எடுத்துச்சொல்லி, அவர் நம்மெல் லோருக்காகவும் மரித்தார் என்று தான் நான் ஆரம்பிப்பேன். மகிமையின் பிரபுவாகிய இயேசு கிறிஸ்து அறையப்பட்ட அந்த

சிலுவையை நான் ஆராய்ந்து பார்த்தால் அவருடைய அன்பைப் பார்த்து ஆச்சரியப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. எனக்கிருக்கும் அதே மன்னிக்கும் தன்மையை நீங்களும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புவேன். நமக்கு தகுதியில்லாதிருந்தும் கூட இயேசு கிறிஸ்து நமக்காக மரிக்கும் அளவுக்கு நம்மிடத்தில் அன்புகூர்ந்தார். அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:6-8).

கர்த்தர் உங்களுக்காக செய்த காரிங்களை நீங்கள் உணர்ந்து கொண்டால் அவர் உங்களிடத்தில் எதிர்பார்க்கும் காரியங்களை செய்வது உங்களுக்கு கடினமாக இருக்காது. ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால் அவன் தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாக தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்; மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மத்தேயு (16:24-26).

---

*மனிதனை இரட்சிப்பதற்காக ...*

- தேவன் தம்முடைய பங்கை ஆற்றிவிட்டார் (யோவான் 3:16)
- கிறிஸ்து தம்முடைய பங்கை ஆற்றிவிட்டார் (கொலோசெயர் 1:13,14)
- சுவிசேஷம் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது (ரோமர் 1:16)
- தேவ திட்டத்திற்கு மனிதன் அழைக்கப்படுகிறான் (மத்தேயு 11:28-30).

**சாட்சியங்கள்**

## அவருடைய வார்த்தையில் விஞ்ஞானப்பூர்வமான உண்மைகள்

# Scientific Truths In His Word

David Everson

**உ**ண்மையாகவே நம்மில் யாரும் தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைக்களை உள்ளடக்கிய வேதப்புத்தகம் நமக்கு விஞ்ஞான விதிகளை உள்ளடக்கிய பாடப்புத்தகமாக தரப்பட்டிருக்கிறது என்று சொல்ல மாட்டோம். நம்மைப் பொறுத்த வரை வேதாகமம் என்பது தேவன் எப்படி மனிதனோடு இடைப்பட்டார் என்பவைகள் பதிவு செய்யப்பட்ட புத்தகமாகவும், நித்திய ஜீவனுக்கான வழிகாட்டியாகவும் இருக்கிறது. இருந்தபோதிலும் இப்பிரபஞ்சத்தை உண்டாக்கினவர் தேவனாயிருக்கிறபடியால் இப்பௌதீக உலகத்தைப் பற்றி அவர் சொல்லும் காரியங்கள் அறிவியல் பூர்வமான அளவு கோல்களால் நீருபிக்கப்படும். இப்படிப்பட்ட உண்மைகள் அபிப்பிராயங்கள் பொய்யென நிரூபித்தன. ஆனால், வேதவாக்கியங்களில் தேவன் பொதிந்து வைத்த அறிவியல் உண்மைகளை பெரும்பாலானோர்கள் பிரசித்தி பெற்ற [அறிவியல் உண்மை தவறிழைக்கும் மனிதனால் பல நூற்றாண்டுகளால் கண்டுபிடிக்க முடியவில்லை. தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அறிவியல் உண்மை களில் சிலவற்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த உண்மைகள் நம் விசுவாசத்தை பெலப்படுத்தி, உண்மையாகவே தேவன் இருக்கிறார் என்பதை மற்றவர்களை சம்மதிக்கச் செய்ய நமக்கு உதவ வேண்டும்.

நாம் ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத்தில் ஆரம்பிக்கிறோம். அங்கே, நம் தேவன் எல்லா தாவரங்களும் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் என்று கட்டளையிட்டிருந்தார். இந்த ஆச்சரியமான அறிவியல் உண்மையை 18,50–ல் பிரசித்தி பெற்ற மரபியல் நிபுணரான Gregor Mendel தன்னுடைய பச்சை பட்டாணித் தோட்டத்தில் தாவரங்களின் இனப்பெருக்கத்தை ஆய்வு செய்யும் வரை மனித இனம் ஏற்றுக் கொள்ளவில்லை. எல்லா தாவரங்ககளும் தங்களில் தங்கள் விதையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் என்பது நிரூபிக்கப்பட்டிருந்தாலும் கூட இந்த மரபியல் நிபுணரின் நாட்களில் வாழ்ந்த பிரபலமான விஞ்ஞானிகள், இந்த மாபெரும் உண்மையின் முக்கியத்துவத்தை நிராகரித்தார்கள். இந்த Gregor Mendel தான் பின்னொருநாளில் **தற்கால மரபியலின் தந்தை** என்று அழைக்கப்படப் போவதை அறியாமலேயே மரித்தார். இந்த

Gregor Mendel அதற்கான வழிமுறைகளை கண்டுபிடித் திருக்கலாம். ஆனால், தேவன் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே அதை வடிவமைத்து வெளிப்படுத்தியிருக்கிறார்.

லேவியராகமம் புத்தகத்திற்கு நாம் திரும்பும் போது, ஓரிரு ஆச்சரியமான உண்மைகளை நாம் பார்க்கிறோம். குறிப்பாக, 17:11ல் **மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்று எழுதப் பட்டிருக்கிறது.** நாம் உயிர் வாழ இரத்தம் மிகவும் அவசிய மாயிருக்கிறது. இன்றைய நாட்களில் மருத்துவர்களும், விஞ்ஞானி களும் மனித இனத்தை ஆரோக்கியமாக்கவும், இந்த அற்புதமான திரவத்தை குறித்து விவரமாக ஆராயவும் அது எப்படி வேலை செய்கிறது என்பதையும் கற்றுக்கொள்ள தொடர்ந்து ஆராயச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்த போதிலும் இந்த முக்கியமான உண்மையைப் பொறுத்தவரை மனித ஞானம் தேவ ஞானத்தோடு ஒத்துப் போகிறதே இல்லை. அந்நாட்களில் நோய் வாய்ப்படும்போதெல்லாம் இரத்தம் ஒரு பிரச்சனையாக பார்க்கப்பட்டது. பல வேளைகளில் இரத்தம் அதிகமாக இருந்தாலும், அது கெட்டதாக மக்களால் பார்க்கப்பட்டதாலும் இரத்தம் வேண்டு மென்றே வெளியேற்றப்பட்டது. எதற்கெடுத்தாலும் இரத்தத்தை வெளியேற்றும் சிகிச்சை முறை 1900 களின் ஆரம்பம் வரை தொடர்ந்து, நீண்ட காலத்திற்கு முன்பே தேவனால் வெளிப்படுத்தப் பட்ட இந்த அறிவியல் உண்மை இன்று மனித ஞானமாகிவிட்டது.

அதன் பிறகு, நீண்டகாலமாக கண்டுகொள்ளாமல் விடப்பட்ட அறிவியல் உண்மையைத் பற்றிய அறிவுரைகள் எச்சரிப்புகள் லேவியராகமம் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது: ஆம் கிருமித் தொற்று மற்றும் சுகாதாரத்தைப் பற்றித்தான் பல பாதுகாப்பு வழிமுறைகள் லேவியராகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. சுத்தமான, அசுத்தமான மிருகங்களிடமிருந்து நோய்வராமலிருக்க எப்படி தனிமைப்படுத்திக் கொண்டு உடலை சுத்தமாகக் கழுவி ஆரோக்கிய மாக இருக்க வேண்டும் போன்ற சட்டத்திட்டங்கள் மிகத் தூல்லியமாக தேவனால் கொடுக்கப்பட்டுள்ளன. இஸ்ரவேலர்கள் ஆரோக்கியமாக இருந்து தேவ சித்தத்தைச் செய்ய வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாயிருந்தது. தேவனால் கொடுக்கப்பட்ட இந்த ஆரோக்கிய ஆலோசனைகள் நாகரீகமான எல்லா ஜனங்களாலும் ஏற்றுக் கொள்ளப்சபட்டு, நீடித்த ஆயுசு நாட்களுக்கும், பொதுவான நலனுக்கும் முக்கியமான காரணிகளாக அமைகின்றன. நீண்ட காலத்திற்கு முன்பாகவே தேவனால் மனித இனத்துக்கு சொல்லப் பட்ட விஞ்ஞானப்பூர்வமான ஞானத்தை இந்த 21 ஆம் நூற்றாண்டின் நவீன மருத்துவமனைகள் ஆச்சரியமாகப் பார்த்துப் பின்பற்றுகின்றன. தேவனுடைய இந்த அறிவியல் பூர்வமான ஞானத்தை பல நூற்றாண்டுகளாக விஞ்ஞானிகள் எள்ளி நகையாடினார்கள்.

மறுபடியும், மறுபடியும் சிருஷ்டிகராகிய தேவனால் வெளிபடுத்தப் பட்டிருக்கிற விஞ்ஞான உண்மைகளை நாம் பார்க்கிறோம். அவைகளைப் பற்றிய முழுமையான விவரத்தை பதிவு செய்ய பக்கங்கள் போதாது.

அண்டசராசரங்களை உண்டாக்கின தேவனிடத்திலுள்ள நம் விசுவாசம் பெலப்படும்படி சில விஞ்ஞானப்பூர்மான உண்மைகள் இதோ:

- பூமி உருண்டை வடிவம் கொண்டது (ஏசாயா 40:22). முன்பு எல்லோராலும் தட்டையாக நம்பப்பட்டது.
- நட்சத்திரங்களை எண்ண முடியாது (ஆதியாகமம் 15:5 எரேமியா 33:32). முன்பு வெறும் 1024 நட்சத்திரங்கள் இருப்பதாகத் தான் கருதப்பட்டது.
- கடலில் வழிகள் (சங்கீதம் 8:8). இப்படியெல்லாம் இருக்கும் என்று மனிதன் ஒருபோதும் கற்பனை செய்து பார்த்ததில்லை.
- மின்னலுக்கும், மழைக்குமான தொடர்பு (யோபு 38:25,26) முன்பு தொடர்பேயில்லை என்று எண்ணப்பட்டது.
- ஆகாயத்தின் வடக்குப் பகுதி வெறுமையாயிருக்கிறது (யோபு 26:7). முன்பு வடக்குப் பகுதி நட்சத்திரங்களால் நிரப்பப்பட்டதாக கருதப்பட்டது.
- புவிஈர்ப்பு சக்தி பூமியைத் தாங்குகிறது (யோபு 26:7). அட்லஸ் என்பவன் பூமியைத் தாங்கினதாக நம்பப்பபட்டது.



- பூமியின் நான்கு திசைகள் (ஏசாயா 11:12). காந்த ஈர்ப்பு எல்லாம் இல்லை என்று கருதப்பட்டது.
- அறுவை சிகிச்சை சாத்தியமே (ஆதியாகமம் 2:21). சரீரத்தை வெட்டிக் கிழிப்பது தீமையான ஒன்றாக கருதப்பட்டது.
- பூமியின் அஸ்திபாரங்கள் (ஏசாயா 51:13). பூமி ஒரு சாதாரண அமைப்பைக் கொண்டிருக்கிறது என்று தான் கருதப்பட்டது.

# சபை உண்மையாகவே அந்த அளவு முக்கியமானதா?

# Is the Church Really That Important?

Patrick Morrison

ஒரு தனிப்பட்ட நபர் ஒரு குறிப்பிட்ட செயலில் விருப்பத்தையும், ஈடுபாட்டையும் காட்டுவதற்கு, அச்செயலின், முக்கியத்துவம் பெரும் பங்கு வகிக்கிறது. பள்ளிப்பணியில், திருமணத்தில் ஒருவருக்கு இருக்கும் ஈடுபாடு மற்றும் விருப்பம் அவைகளில் அவர் வைத்திருக்கும் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. இது சபை சம்பந்தப்பட்ட காரியங்களிலும் உண்மையாயிருக்கிறது. சிலர் கிறிஸ்துவோடு நெருக்கமான உறவு வைத்துக் கொள்ளுவதற்கும், சபைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லி உண்மையான சபையை விட்டுத் தங்கள் விருப்பப்படி நடக்க அனுமதிக்கிற சபைகளை நோக்கிப் படையெடுக்கிறார்கள். ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் சபையின் முக்கியத்துவத்தை எப்படித் தீர்மானிக்கிறார். வேத வாக்கியங்களில் சபையின் முக்கியத்துவம் எந்த அளவுக்கு விவரிக்கப்பட்டிருக்கிறது என்பதை கவனியுங்கள்.

## I சபை தேவனுக்கு முக்கியமாக இருந்தது:

சபையைக் குறித்த நோக்கம் தேவனுக்கு நித்திய நித்திய காலமாக இருந்திருக்கிறது. உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் அவருடைய அந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக என்றுள்ளது (எபேசியர் 3:10). அந்த நோக்கமானது படிப்படியாக தீர்க்கதரிசிகள் மூலமாகவும் இயேசுவின் ஊழியத்திலும் மகத்தான அளவில் வெளிப்படுத்தப்பட்டது. தேவனுடைய திட்டத்திலும், நோக்கத்திலும் சபை இருந்தபடியால் சபை தேவனுக்குச் சொந்தமானது. சபை தேவனுக்கு முக்கியமாக இருந்ததென்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

## II சபை இயேசுவுக்கு முக்கியமாக இருந்தது:

சபை ஸ்தாக்கப்படும்படியாக இயேசு கிறிஸ்து தம் ஜீவனையே விட்டார். சபை இயேசுவின் இரத்தத்தினாலே வாங்கப்பட்டது ( அப்போஸ்தலர் 20:287; எபேசியர் 5:25,26) அவர் சபைக்கு

தலையாயிருக்கிறார் [ கொலோ 1:18, எபேசியர் 1:22] கிறிஸ்து தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே ஒப்புரவாகுதலை சாத்தியப்படுத்துகிற மத்தியஸ்தராயிருக்கிறார் [ I தீமோத்தேயு 2:5; எபேசியர் 2:6], இவ்வுலகில் எல்லாவற்றிற்கும் முடிவு உண்டாகும் வரை அவர் சபையில் ஆளுகை செய்வார் [Iகொரி 15:24-28] சபை கிறிஸ்துவுக்கு மிகவும் முக்கியமாகும்.

III **சபை தேவனுடைய ஜனங்களுக்கு முக்கியமாக இருந்தது.**

அவர்கள் தேவனிடத்தில் ஒப்புரவாகிறார்கள் [எபேசியர் 2:16]. அவர்கள் ஜீவனுள்ள மெய்யான தேவனை ஆராதித்து தேவ குமாரர் பரலோகத்திலிருந்து வருவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் [ I தெசலோனிக்கேயர் 1:9 ,10]. கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் நம்பிக்கை கிறிஸ்துவில் காணப்படுகிறது [I பேதுரு 1:3], சபையில் தேவபக்தி அடைவதற்கும் தேவ சாயலை வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பும், ஆதாரமும் இருக்கிறது. [ II கொரிந்தியர் 3:18]. தேவன் மற்றும் கிறிஸ்துவின் திட்டத்தில் சபை கொண்டிருக்கும் முக்கியத் துவத்தின் காரணமாகவும், நம் தனிப்பட்ட வாழ்க்கையில் சபைக்கு இருக்கும் முக்கியத்துவத்தின் காரணமாகவும், நாம் சபையில் தொடர்ந்து ஆர்வம் காட்டுவதற்கும், ஈடுபாடு கொள்வதற்கும் அது தகுதியானதாக உள்ளது.

✞

**சோர்வை மேற்கொள்ளுதல்**

தேவனுடைய சமூகத்தில் தனித்திருங்கள்
(I சாமுவேல் 30:89)

தேவனுடைய ஜனங்களை நாடுங்கள்
(I சாமுவேல் 20:7)

தேவனுடைய வாக்குத்தத்தங்களில் சாய்ந்திருங்கள்
(II கொரிந்தியர் 1:20)

தேவனுடைய பராமரிப்பை நினைவில் கொள்ளுங்கள்
(ரோமர் 8:28)

# உபத்திரவப்பட்ட சபை



## The Persecuted Church

Gary C. Hampton

சிமிர்னா சபைக்கான கர்த்தருடைய கடிதம் உபத்திரவக் காலத்தில் தங்கள் விசுவாசத்திற்காக நின்ற அந்த சபையார் பரிகாசம் செய்யப்பட்ட போது அவர்களுக்கு மறு நிச்சயத்தைக் கொடுக்கும் வார்த்தைகளால் நிறைந்திருக்கிறது. இந்த சிமிர்னா எபேசு பட்டணத்திலிருந்து வடக்கே 40 மைல்கள் தூரத்தில் அமைந்திருந்தது. இந்நகரம் மகா அலெக்ஸ் சாண்டரால் நிர்மாணிக்கப்பட்டது. இங்கே ஒரு மிகப்பெரிய நூலகம் இருந்தது. பின்பு அது, அலெக்சாண்ட்ரியா பட்டணத்துக்கு மாற்றப் பட்டது. இந்த சிமிர்னாதான் ஒலிம்பிக் போட்டிகளின் பிறப்பிடமாகும். கி.மு.23 லேயே இப்பட்டணம் டொமீஷியன் சக்கர வர்த்தியின் கீழ் Tibetius அரசனுக்கு கோவில் கட்டி ஆசியாவில் அரச வழிபாட்டுக்கு வழிவகுத்தது. இப்பட்டணத்தில் இருந்த சபை பல் வேறுப்பட்ட அச்சுறுத்தலுக்கும், உபத்திரவத்துக்கும் உட்பட்ட படியால் இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயித்தபடியால் அவர் நித்திய மானவர் என்று அவராலேயே கடிதத்தினாலே மறுநிச்சயம் செய்யப்பட்டது.

பாடுகளிலும், உபத்திரவங்களிலும் பரிதபிக்கிறவர்களுக்கு தனிமையின் கொடுமை தெரியும். இயேசு கிறிஸ்து ஒவ்வொரு வருடைய கடந்த கால நிகழ்கால மற்றும் எதிர் கால பாடுகளைக் குறித்து நன்றாக அறிந்திருக்கிறார். அப்பாடுகளை நாம் தாங்கிக் கொள்ளத்தக்கதாக நமக்கு உதவி செய்யும்படி வாக்குரைத் திருக்கிறார். [எபிரெயர் 4:15,16: I கொரிந்தியர் 10:13]. இந்த சமிர்னா சபையாரின் தரித்திரத்தை அவர் அறிந்திருந்தாள். இன்னும் சொல்லப் போனால், அவர் இதே விதமான சூழ்நிலை கடந்து வந்திருக்கிறார். [மத்தேயு 8:20]. கிறிஸ்தவர்கள் பூமிக்குரிய பொக்கிஷங்களை சேர்த்து வைப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று போதிக்கப்பட்டிருக் கிறார்கள் [மத்தேயு 6:19,20]. சிமிர்னாவிலிருந்த சபை சரீரப்பிரகாரமாக தரித்திரத்தியிருந்தாலும் ஆவிக்குரிய பிரகாரமாக ஐசுவரியமாக இருந்தது. மேலும், நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து யூதரென்று சொல்லியும் யூதராயிராமல், சாத்தனுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறார். சிமிர்னாவில் ஒரு ஜெப ஆலயமிருந்திருக்கிறது. ஆனால், அது தம்முடையதல்ல, சாத்தானுடையது என்று கர்த்தர் சொல்கிறார். இந்தக் கிறிஸ்தவ யுகத்தில் தேவனுடைய உண்மையான இஸ்ர வேலர்கள் இருதயத்தில் விருத்த சேதனம் பண்ணப்பட்டவர்களாவே இருக்கிறார்கள் [வெளி 2:9; ரோமர் 2:28-29; பிலிப்பியர் 3:3] கொடிய உபத்திரவம் அவர்களுக்கு வரவிருந்தாலும் கூட, அவைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நீத்தாலும் கூட அவைகளெல்லாம் ஒரு நாளில் முடிவுக்கு வருமென்று அவர்களுக்கு சொல்லப்பட்டது [I தீமோத்தேயு 3:12; பிலிப்பியர் 1:20] சபையின் உண்மையான எதிரி பிசாசாகிய சாத்தான் தான் அவன் குற்றஞ்சாட்டுகிறவனும், அவதூறு செய்கிறவனு மாயிருக்கிறான் [யோவான் 8:44; I பேதுரு 5:8 அவன் கிறிஸ்தவர்களை சோதித்து, எப்படியாவது பாவம் செய்யதூண்டுவான். சாத்தான் சிறைவாசம் நாடு கடத்தப்படுதல் மரணம் போன்றவைகளை கிறிஸ்தவர்களிடத்தில் கொண்டுவந்தாலும் கூட கிறிஸ்தவர்கள் இவைகளுக்கு பயப்படாமல் விசுவாசத்தில் உண்மையாயிருந்தால், அதற்காக தங்கள் ஜீவனை விலையாகக் கொடுத்தாலும்கூட அதன் பலனாக ஜீவக்கிரீடம் கொடுக்கப்படும் [யாக்கோபு 1:12; வெளி.2:10].

இந்த சிமிர்னா ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடமாகயிருக்கிற படியால் நித்திய ஜீவன் வெற்றிகிரீடமாக கொடுக்கப்படுவது

அவர்களுக்கு அதிக அர்த்தத்தைக் கொடுத்தது. இந்தக் கடிதத்திலுள்ள வார்த்தைகளுக்கு செவிகொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டார்கள். அப்படி செவிகொடுத்தால் இரண்டாம் மரணத்தால் சேதப்படுத்தப்படுவதில்லை [வெளிப்படுத்தி விசேஷம் 2:10,11;20:14]. சிமிர்னாவில் இருந்த கர்த்தருடைய சபை நம்மில் பெரும்பாலானோர் கேள்விப்பட்டிராத, கற்பனை செய்து பார்க்க முடியாத கடுமையான உபத்திரங்களை அனுபவித்தார்கள். கொடிய பாடுகளின் மத்தியிலும் அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்த படியால் அவர்களுக்கு ஜீவகீடம் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. இன்றைய கிறிஸ்தவர்கள் அன்றைய கிறிஸ்தவர்களின் மாதிரியால் ஊக்கப்படுத்தப்பட்டு கர்த்தருக்கு உண்மையாக இருந்தால் அவர் நமக்கு நித்திய ஜீவனை வெற்றி கிரீடமாக தருவார். ✝

---

**ஜெயங்கொள்ளுகிறவனுக்குத் தேவனால் கிடைக்கும் பலன்**

- **இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை (வெளி. 2:1)**

- **மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து வேறொருவனும் அறியக்கூடாத புதிய நாமத்தைக் கொடுப்பார் (வெளி2:17)**

- **வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டு, ஜீவபுஸ்தகத்திலிருந்து அவன் நாமத்தை கிறுக்கிப் போடாமல், தூதர் முன்பாக அவன் நாமத்தை அறிக்கையிடுவார் (வெளி 3:5)**

- **தேவனுடைய ஆலயத்திலே தூணாக்கி, புதிய நாமத்தை அவன் மேல் எழுதுவார் (வெளி 3:12).**

- **கிறிஸ்துவின் சிங்காசனத்தில் அவரோடு கூட உட்காரும் அருள் செய்வார் (வெளி 3:21).**

## வாழ்வதற்கான உபதேசம்

# புதிது

## New

**Royce Frederick**

**நா**ம் பெரும்பாலும் புதியவைகளை பெற்றுக் கொள்ள விரும்புவோம். தேவன் நமக்காக சில முக்கியமான காரியங்களை வைத்திருக்கிறார்.

### ❀ புதிய பிறப்பு

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான் இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். [யோவான் 3:3-5]. ஒரு குழந்தையானது அதன் தாயிடமிருந்து வெளியே வரும் போது பிறக்கிறது. ஒரு பாவி தண்ணீர் ஞானஸ்நானத்திலிருந்து வெளியே வரும் போது அந்த நபர் தேவனுடைய பிள்ளையாகிறார். ஒரு பாவி கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும் போது, அவர் தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப் படுகிறார். பின்பு அந்த நபர் புதிதான ஜீவனுள்ளவராய் நடந்து கொள்ளும்படிக்கு தண்ணீரிலிருந்து வெளியே வருகிறார் [ரோமர் 6:3,4; அப்போஸ்தலர் 8:36-39]. இது தான் புதிய பிறப்பாகும். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின [II கொரி. 5:17].

### ❀ புதிய உடன்படிக்கை

தேவன் எரேமியா தீர்க்கதரிசி மூலமாக இவ்விதமாக முன்னுரைத்தார். **இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக்கைபிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார் [எரேமியா 31:3,32]**. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, பழைய உடன்படிக்கையை நிறைவேற்றி அதை அகற்றி, அதற்கு மாற்றாக புதிய உடன்படிக்கையை வைத்தார் மத்தேயு 5:17,18, கொலோசெயர் 2:14; ரோமர் 7:4-7; எபிரெயர் 8:6-13;9:15-17.



❀ **புதிய வானமும், புதிய பூமியும்:**

கிறிஸ்து மறுபடியும் எப்போது வருவார் என்று யாருக்குமே தெரியாது. கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்: அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிற தாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள். அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம் [II பேதுரு 3 :10–13]. அப்போஸ்தலனாகிய யோவானுக்கு உண்மையுள்ள கிறிஸ்வர்களின் நித்திய வீட்டைப் பற்றிய தரிசனம் கொடுக்கப்பட்டது. பின்பு நான் புதிய வானத்தையும், புதிய பூமியையையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்ததை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்த மாக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய கண்ணீர் யாவையம் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறு தலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது [வெளிப்படுத்தல் 21:12,4]. இந்தப் பூமி முழுவதுமாக அழிக்கப்படும். ஆனால், மகிமையான நித்திய வீடு! அப்புதிய பூமியில் நமக்காக காத்துக் கொண்டிருக்கிறது!

**செயலில் கிறிஸ்தவம்**

## இருபுறத்திலும் இருத்தல்

## Straddling The Fence

Olden Cook

**ச**ர்ச்சைக்குரிய ஒரு விஷயத்தைப்பற்றி ஓர் அரசியல்வாதியிடம் அவருடைய நிலைப்பாட்டைக் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு அந்த அரசியல்வாதி இவ்விஷயத்தின் ஆதரவாளர்களும் என் நண்பர் களாயிருக்கிறார்கள். எதிர்ப்பாளர்களும் என் நண்பர்களா யிருக்கிறார்கள் நான் எப்போதுமே என் நண்பர்களுடன் தான் இருப்பேன் என்று சொல்லி எந்த முடிவையும் அறிவிக்காமல் தன்னுடைய இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

கிறிஸ்தவம் என்று வரும் போது பெரும்பாலான ஜனங்கள் இப்படியாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் எதையும் எதிர்த்து நிற்பதில்லை. பிரபலமான எல்லாவற்றுக்கும் தங்கள் ஆதரவைத் தெரிவிக்கிறார்கள். இப்படி ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் வைப்பதன் மூலமாக தங்கள் இரட்டை நிலைப்பாட்டைக் காட்டுகிறார்கள். இவர்கள் உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று உணரவில்லை. கிறிஸ்தவர்கள் தாங்கள் எந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள் என்பதை உலகுக்கு தெரியப்படுத்த வேண்டும். தெளிவுபடுத்த வேண்டும். மேலும், உறுதியான தீர்மானத் தோடு பாவத்தையும், உலகத்தன்மையையும், தவறையும் எதிர் கொள்ளவேண்டும்.

ஆவிக்குரிய பிரகாரமாக நடுநிலை என்பது ஒரு போதும் இல்லை. கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? என்று மோசே கேட்டார் (யாத்திராகமம் 32:26). தேவதாசனாகிய யோசுவா ஜனங்களிடம் **கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவீப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள் என்று சவால்விட்டார் ( யோசுவா 24:15).**

நாம் இருபுறத்திலும் இருக்க முடியாது. அதாவது, ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் வைக்க முடியாது. லவோதிக்கேயா சபை அப்படியிருக்க முயற்சி செய்தபோது இப்படி நீ குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிற படியினால் உன்னை உன் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன் என்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எச்சரித்தார் (வெளி. 3:16).

## செயலில் கிறிஸ்தவம்

### எல்லா கிறிஸ்தவர்களுமே கர்த்தருடைய ஊழியக்காரராயிருக்கிறார்கள்

### All Christians are Servants Of The Lord

**Dale Grissom**

சில கிறிஸ்தவர்களுக்கு தங்களை கர்த்தருடைய ஊழியக்காரர்கள் என்றெண்ணுவதில் கஷ்டம் இருப்பது போல் தெரிகிறது. எல்லா கிறிஸ்தவர்களுமே தேவனுக்கு சேவை செய்கிறபடியால் அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள். நாம் சபையிலிருந்து உதவி பெற்றுக் கொண்டு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஊழியர்களுக்கும், உதவி பெறாமல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் சகோதரர்களுக்கும் இடையே நாமாகவே ஒரு பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். பலர் ஆத்தும ஆதாயம் செய்யும் பணியைத் தட்டிக் கழிப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்று நான் நம்புகிறேன்.

எருசலேமிலிருந்த சபைக்கு துன்பம் உண்டான போது ஆதிதிருச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு பணிதான் தனிநபர் ஊழியம். இதை குறித்து நாம் அப்போஸ்தலர் 8:3-4 வசனங்களில் வாசிக்க முடியும். **சவுல் வீடுகள்தோறும் நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய், காவலில் போடுவித்து சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான். சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்** ஆதிதிருச்சபை மிகவேகமாக வளர்ந்ததற்கு இதுவே காரணம்.

கடந்த முப்பது வருடங்களாக கிறிஸ்துவுக்காக ஆத்தும ஆதாயம் செய்கிற காரியத்தில் ஆதிதிருச்சபையைப் போல் ஆகிவிட்டோம். இதற்கு முந்தைய காலக்கட்டத்தில் பல வருடங்களாக சுவிசேஷக் கூட்டங்களில் மட்டும் சிலர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். ஆனால், இப்போது நாம் கீழ்ப்படிவதின் அவசரத்தை உணர்ந்து, ஆண்டு முழுவதும் ஊழியக் காரியங்களில் ஈடுபடுகிறோம். தேவனுக்கு ஸ்தோத்திரம்.

அப்போஸ்தலனாகிய பவுல் எருசலேம் புறப்படுவதற்கு முன்பாக எபேசு பட்டணத்து மூப்பர்களிடத்தில் பேசும் போது, பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல் வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி என்கிறார். [அப்போஸ்தலர் 20:20]. பவுல் நாம் பின்பற்றும்படி ஒரு சிறந்த மாதிரியை வைத்திருக்கிறார். நம்முடைய சமுதாயத்தில் சுவிசேஷத்தால் பலரை சந்திக்கவேண்டுமென்று நாம் விரும்பினால் வீடுகள்தோறும் போய் நாம் வெளிப்படையாக தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும். இழந்து போன ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு மிகச்சிறந்த வழி தனிநபர் ஊழியந்தான்!

## செயலில் கிறிஸ்தவம்
## மௌனம் சாத்தியமில்லாதது
# Impossible Silence

John Gildsom

ஒருவர் தன்னுடைய மதம் அல்லது மார்க்கத்தை தனக்கு ள்ளேயே வைத்திருக்க வேண்டுமா? மார்க்கத்தைக் குறித்து பேசுவது மோசமாயிருக்கும் என்று நினைக்கிறீர்களா?

அணுகுமுறையில் சில நுணுக்கங்களை பயன்படுத்தும் சிலரோடு நம்மில் பெரும்பாலானோர் ஒரு முறையோ அல்லது பலமுறையோ இடைப்பட்டிருப்போம். எளிதாகச் சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் நம்மை இன்முகத்தோடு வரவேற்காத காரணத்தால் இனிமேல் அவர்களிடம் கிறிஸ்தவத்தைக் குறித்துப் பேசாமல் அமைதியாயிருப்போம் என்று நாம் முடிவெடுத்திருக்கலாம்.

இது நம்முடைய தெரிந்து கொள்ளுதலாக இருந்தால் நாம் மிகப் பெரிய தவறு செய்திருக்கிறோம். ஏனென்றால், இது ஒரு கிறிஸ்த வருக்கு பொருந்தாத ஒரு காரியமாகும். நமக்கு இயேசுவிடமிருந்து சகல ஜாதிகளையும் சீஷராக்க வேண்டுமென்றும், கிறிஸ்து கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர் களுக்கு உபதேசம் பண்ணவேண்டுமென்றும் கட்டளை உண்டு. இந்தக் காரியங்களையெல்லாம் ஆதிக் கிறிஸ்தவர்கள் மிக உற்சாகமாக செய்தார்கள். மௌனமாக இருப்பது எப்போதும் ஒரு சிறந்த தீர்வாக இருக்க முடியாது. (மத்தேயு 28:18-20).

அப்போஸ்தலர்கள் பரபரப்பாக ஊழியம் செய்த நாட்களில் அதிகாரிகள் அவர்களை அழைத்து இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும், போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். தேவனுக்குக் கீழ்ப்படிவதா? மனிதனுக்குக் கீழ்ப்படிவதா? அதுதான் அங்கே மிகப்பெரிய கேள்வியாயிருந்தது. தேவன் பேசும்படி சொன்னார். மௌமனமாயிருக்கும்படி மனிதன் சொன்னான். அதற்கு அப்போஸ்தலருடைய பதில் உங்களுக்கு நினைவிருக்கிறதா? பேதுருவும், யோவானும் அவர்களுக்கு

பிரதியுத்தரமாக: **தேவனுக்கு செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்க முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்** ( **அப்போஸ்தலர் 4:19,20).**

அப்போஸ்தலருடைய இந்த தீர்மானத்திற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். H.G.Wells எனும் வேதவித்தகர் ஒரு முறை இவ்விதமாகச் சொன்னார். இன்று அநேகரிடம் காணப்படும் பிரச்சனை என்னவென்றால் இவர்களுடைய அயலகத்தாரின் குரல் இவர்களின் காதுகளுக்கு தேவனுடைய குரலை விட சத்தமாகஹ; கேட்கிறது என்று.

ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்களுடைய விசுவாசத்திற்காக துன்பப்படுத்தப்பட்ட போது அவர்கள் நடந்து கொண்ட விதத்தை நினைத்துப் பாருங்கள். அவர் வேறு நாடுகளுக்கு சிதறப்பட்டுப் போனார்கள். ஆனால், அவர்கள் மௌனமாயிருக்கவில்லை. அவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் ( அப்போஸ்தலர் 8:4). ஏதோ ஒரு தெய்வீக நோக்கத்திற்காக தேவனோடு சம்மந்தப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை நாமும் புரிந்து கொள்ளவேண்டும். **நாம் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே!**

✞

---

**பரத்திலிருந்து வரும் ஞானம் எப்படிப்பட்டதாயிருக்கிறது?**

**சுத்தமுள்ளதாயிருக்கிறது**

**மாயமற்றதாயுமிருக்கிறது**

**சாந்தமுள்ளதாயிருக்கிறது**

**இணக்கமுள்ளதாயிருக்கிறது**

**சமாதானமுள்ளதாயிருக்கிறது**

**பட்சபாதமில்லாததாயிருக்கிறது**

**நற்கனிகளால் நிறைந்தாயிருக்கிறது**

செயலில் கிறிஸ்தவம்

# உலகமெங்கும்

Paul Holland




Adoniram Judson பல தலைமுறைகளுக்கு முன்பு வாழ்ந்த பாப்டிஸ்ட் ஊழியர். வெளிநாட்டு ஊழியங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். அவர் தன்னுடைய பிரசங்கங்களில் மந்த புத்தியுள்ள இரண்டாந்தர மனிதன் தேவனை அறியாத மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கப் போதுமானவன் என்று எண்ணுவது மிகப்பெரிய தவறாகும் என்று சொன்னார். நம்மில் மிகச்சிறந்தவர்களே மோசமானவர்களுக்கு தேவைப்படுகிறார்கள். இழந்து போன உலகை மீட்க தேவன் தம்முடைய சிறந்ததை தம்முடைய ஒரே பேறான குமாரனையே கொடுத்தார். மிகவும் மோசமான, இருளால் சூழப்பட்ட ஆத்துமாக்களுக்கு சிறந்த சிந்தனையாளர்கள் தேவை.

உலகம் இழந்து போன நிலையில் உள்ளது. இவ்வுலகம் முழுவதும் ஆண்களும், பெண்களும், சிறுபிள்ளைகளும் வாலிபர்களும் பாவத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மதங்களில் குருடாக்கப் பட்டு, நித்திய அழிவுக்காக வைக்கப்பட்டிருக்கிறார்கள். நாம்

அவர்களிடத்தில் வெறுமனே அக்கறைப்படுவதன் மூலமாக மட்டும் அவர்களுக்கு உதவி செய்ய முடியாது. ஆனால், இயேசு கிறிஸ்து வின் சுவிசேஷத்தினால் முடியும்.

நமது பகுதியில் ஆத்தும ஆதாயத்திற்காக நாம் திட்டமிட்டு ஜெபித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், வெளிநாட்டு ஊழியங்களை நாம் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. செயல்படுகிற கிறிஸ்தவமே சுவிசேஷமாயிருக்கிறது. Vance Havher எனும் வேத வித்தகர் நம் உடலுக்கு எப்படி நரம்புகள் இருக்கிறதோ அதே போல் ஊழியம் கிறிஸ்தவர்களுக்கு இருக்கிறது. கிறிஸ்த வத்தை நீங்கள் எங்கே வெட்டினாலும் அங்கே ஊழியம் இரத்தம் போல ஒழுகுவதை காணமுடியும். ஊழியம் என்பது நம் இரத்த நாளங்கள் போன்றது. அது நம் வேலையாயிருக்கிறது.

உலகில் கிறிஸ்துவின் சபை ஊழியர்களில் 95% ஊழியர்கள் அமெரிக்காவில் தான் இருக்கிறார்கள். ஆனால், உலகிலுள்ள 190 நாடுகளுக்கு சுவிசேஷ போதகர்கள் தேவைப்படுகிறார்கள். தவறை பரப்பிக் கொண்டிருக்கும் மற்ற மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தார் சீஷராக்குவதை தங்கள் குறிக்கோள்களாக கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட மக்களிடத்தில் கர்த்தருடைய சபை சத்தியத்தைக் கொண்டு செல்ல வேண்டும். இவ்வுலகத்திற்கு தெளிவு தேவையாயிருக்கிறது. உலக கிறிஸ்தவ தகவல் மையம் உலகில் ஏறத்தாழ 9000 மார்க்கப் பிரிவினை சபைகள் இருப்பதாக கணக்கிடப் பட்டிருக்கிறது. மற்ற மக்கள் நம்மைப் பார்த்து கிறிஸ்தவர்களாகிய உங்களால் இணைந்த மெய்யான கிறிஸ்தவம் என்றால் என்ன என்பதைக் குறித்து முடிவெடுக்க முடியாத போது, நாங்கள் கிறிஸ்தவர்களாக வேண்டுமென்று எப்படி நீங்கள் எதிர்பார்க்க முடியும்? என்று கேட்கிறார்கள். நம் பாதங்கள் தேவனுடைய வார்த்தையில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும், மேலும், நாம் அறிந்திருக்கிற காரியங்களில் தெளிவுள்ளவர்களாயிருக்கக் வேண்டும். அதன் பிறகு நாம் சுவிசேஷத்தை அனுப்ப வேண்டும். அவருடைய சேவை அது சிறிதாயிருந்தாலும், பெரியதாயிருந்தாலும் அதைச் செய்ய நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? அவருடைய சித்தத்தைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறோமா?

ஓர் அந்நிய மொழியை கற்றுக் கொள்வது சாத்தியமா? எங்கள் குழுவில் யாருமே இயற்கையாகவே பலமொழிகளைப் பேசும் திறன் பெற்றவர்கள் அல்ல. பல நாட்கள் கடினமான முயற்சி எடுத்து மொழியை கற்றுக் கொண்டோம். கிறிஸ்துவின் அன்பும் அறியாத ஜனங்களின் மீதான அன்பும் எங்களை புதிய மொழியை கற்க தூண்டியது. அதேபோல், புதிய கலாச்சாரத்தை கற்றுக் கொள்வதும் சாத்தியமே. ஆம், சில நாடுகளில் காரியங்களை வித்தியாசமாக செய்வார்கள், முதலில் அது நமக்குப் புரியாது. பின்பு அதை நாம் கற்றுக்கொள்ளலாம்.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் தொலைவில் இருந்து கொண்டே நம் குடும்பத்தோடும், நண்பர்களோடும் தொடர்பில் இருப்பது சில வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட எளிதானதே. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு கூட இணைய வழியில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியும். அமெரிக்காவில் என்ன நவீன வசதிகள் இருக்கிதோ அவைகள் ஏதோ ஒரு வகையில் மற்ற நாடுகளிலும் இருக்கின்றன. அமெரிக்காவுக்கு வெளியே நன்றாக வாழ முடியும்.

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்தின் மகிமையை விட்டு இப்பூமிக்கு வந்து ஊழியம் செய்தது சம்மந்தமான வசனப்பகுதியை ஆழ்ந்து சிந்தியுங்கள். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாக்க காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியாந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:6–8).

✝

---

**நீங்கள் பிசாசின் ஆரோக்கியமற்ற உணவை உண்டு, வயிறு வீங்கி பாவத்தால் பாரப்பட்டிருக்கிறீர்களே, உங்கள் உணவை மாற்றுவதற்கான நேரம் இதோ!**

## நீங்கள் ஒருபோதும் இவைகளை அனுபவிக்காமலிருந்தால்

நீங்கள் ஒரு போதும் ஒரு சகோதரனுடைய இழப்பை பகிர்ந்து கொள்ளும் மகிழ்ச்சியை உணராதிருந்திருந்தால்

நீங்கள் ஒரு போதும் மற்றவர்களுடைய சிலுவையை சுமந்து உங்கள் கரங்கள் பெலப்படாமல் இருந்திருந்தால்

நீங்கள் ஒருபோதும் கண்ணீர் வடிந்த சோகமான முகத்திற்கு புன்னகையை கொண்டுவராமல் இருந்திருந்தால்

நீங்கள் ஒருபோதும் வெளிச்சம் குன்றிய மங்கலான பாதையில் உங்கள் கைகளால் வெளிச்சத்தை வீசச் செய்யாமல் இருந்திருந்தால்

நீங்கள் ஒருபோதும் ஒருவருக்கும் சிறந்த வாழ்க்கையைப் பற்றி உங்கள் வாயாலே ஒரு வார்த்தையும் சொல்லாதிருந்திருந்தால்

கலிலேய மகான் பயணித்த பாதையை அறியாமல்தான் இதுவரை பயணித்திருக்கிறீர்கள்!

# தவறானதிலிருந்து சரியானதைக் கற்றுக்கொள்ளுதல்
## Learning Right From Wrong

Rod Kyle




**நீ**ங்கள் வாழ்க்கையை மிகச்சிறந்த ஒழுக்க நெறியின் அடிப்படையில் வாழ்கிறீர்களா? உலக முழுவதும் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் எந்த ஒழுக்க நெறியின் கீழ் வாழ்வது என்கிற குழப்பம் நீடிக்கிறதா? ஒவ்வொரு வாழ்க்கை சூழ்நிலையிலும் எது சரியனது, எது தவறானது என்பதை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்?

இன்று ஒழுக்க ரீதியான பிரச்சனை ஒரு மிகப்பெரிய பிரச்சனையாக உலக முழுவதும் வலம் வருகிறது. தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒழுக்க நெறிகளே இதற்குத் தீர்வாக இருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இதைத் தான் வேதாகமம் மிகத் துல்லியமாகத் தெரிவிக்கிறது. எபிரெயர் 1:1,2 வசனங்கள் தேவன் திருவுளம் பற்றினார் என்று போதிக்கிறது. தேவனால் மோசேயைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒழுக்க நெறிகள் பழைய ஏற்பாட்டில் நிறைவுபெற்றது. புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து தம்முடைய வார்த்தை தான் இறுதியானதென்றும் எல்லாக் காலத்துக்குமான முழுமையான ஒழுக்கநெறி என்றும் போதித்திருக்கிறார் [யோவான் 12:48; மத்தேயு 24:35].

இருந்தபோதிலும், ஒருவர் புதிய ஏற்பாட்டை வாசிக்கும் போது இதைச் செய் , அதைச் செய்யாதே என்பதை வரையறுக்கும் ஒழுக்க ரீதியான புத்தகம் மாத்திரமல்ல, ஒட்டுமொத்த உலகமும் மகிழ்ச்சியாக

வாழத் தேவையான எல்லா ஆலோசனைகளையும் உள்ளடக்கிய புத்தகம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அதே நேரத்தில், வேதாகமம் சில இடங்களில் சில பாவங்களை குறிப்பாகச் சுட்டிக்காட்டி அவைகளை செய்யக்கூடாதென்று எச்சரிக்கிறது.

**உதாரணமாக :**

1. கொலோசெயர் 3:9 ல் ஒரு குறிப்பிட்ட பாவம் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. நாம் பொய்சொல்லக்கூடாதென்று சொல்லுகிறது.

2. கொலோசெயர் 3:22 ல் எல்லாச் சூழ்நிலையும் நாம் சுத்த இருதயத்தோடே வேலைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறது.

3. அப்போஸ்தலருடைய நடபடிகள் 25:11ல் மரணதண்டனை பற்றிய உதாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையான உதாரணமாயிருக்கிறது. ஏனென்றால், இந்த வார்த்தைகளைச் சொன்னவர் தேவ ஆவியினால் ஏவப்பட்டுத்தான் இப்படிச் சொல்லியிருக்கிறார்.

வெளிப்படுத்தப்பட்ட, உறுதி செய்யப்பட்ட தேவனுடைய வார்த்தையின் தெளிவான போதனை இது தான். இப்பூமிக்குரிய வாழ்க்கையே ஓர் ஒழுக்க ரீதியான பரீட்சை தான். நம்முடைய முடிவு அறிவிக்கப்படும் நாள் நியாயத்தீர்ப்பின் நாளாயிருக்கிறது (II கொரிந்தியர் 5:10). அந்த மகாப்பெரிய நாளின் ஆச்சரியமான விசயம் என்னவென்றால், யாரும் சுய நீதியின்படி தேர்ச்சி பெற முடியாது என்பது தான் (ரோமர் 3:10, 23). ✞

---

**சில எபிரெயப் பதங்களுக்கான பொருள்**

ஏல் = தேவன்

பெத்தேல் = தேவனுடைய வீடு

தானியேல் = தேவனுடைய நியாயாதிபதி

காபிரியேல் = தேவனுடைய மனுசன்

இம்மானுவேல் = தேவன் நம்மோடிருக்கிறார்

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒருங்கிப்போகிறதில்லை; கலக்க மடைந்தும் மன முறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப் பட்டும் கைவிடப்படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். எப்படியெனில் சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும் படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசு வினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம். இப்படி மரணமானது எங்களிடத்திலும் ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது. விசுவாசித்தேன் ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையயவர்களாயிருந்து விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம். கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி உங்களுடனே தமக்கு முன்பாக நிறுத்துவா ரென்று அறிந்திருக்கிறோம். தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு இவைகளெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது. ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப் படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதி சீக்கிரத்தில் நீங்கும். நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் காணப் படாதவைகளோ நித்தியமானவைகள் (II கொரிந்தியர 4:7–18).



# ஏற்றுக்கொள்ளபடத்தக்க ஆராதனை
# Acceptable Worship

John Thiesen

எவ்வகையான ஆராதனை தேவனால் ஏற்று கொள்ளபடத்தக்க தாயிருக்கிறது? அல்லது தேவனை நாம் எப்படி ஆராதிக்கிறோம் என்பது உண்மையாகவே தேவனுக்கு ஏதாவது வித்தியாசத்தை ஏற்படுத்துகிறதா? நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயுடனான உரையாடலில் தேவனுக்குப் பிரியமான ஆராதனை எது? ஆராதிப்பவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்று அருமையான விளக்கத்தைக் கொடுத்தார். **தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் [யோவான் 4:24].**

## ஆவியோடும், உண்மையோடும்

மேற்சொல்லப்பட்ட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளிலிருந்து, அநேக காரியங்களை நாம் கற்றுக் கொண்டாலும் கூட நாம் ஏறெடுக்கும் ஆராதனை தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றால் அது இருதயத்திலிருந்து ஏறெடுக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல, அது சத்தியத்தின்படி தேவனுடைய அதாவது தேவனுடைய வார்த்தையின் படி ஏறெடுக்கப் பட வேண்டும். இப்படிப்பட்ட ஆராதனையை ஏறெடுப்பவர்கள் தான் உண்மையாகவே விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள் [கிறிஸ்து இயேசுவினிடத்தில் வைத்திருக்கும் விசுவாசத்தினால் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருக்கிறார்கள்]. இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது, ஏனெனில் மாம்சத்தின் மேல் நம்பிக்கையா யிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதன முள்ளவர்கள் என்று சொல்கிறார் [ பிலிப்பியர் 3:3].

## பயத்தோடும், பக்தியோடும்

தேவன் நம் ஆராதனையை ஏற்று கொள்ள வேண்டுமென்றால் நாம் அவரை பயத்தோடும் பக்தியோடும் அணுக வேண்டும். ஆதலால்,

அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே (எபிரெயர் 12:28,29). இதன் பொருள் நாம் சர்வவல்லவருடைய, பயங்கரமான தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கிறோம் என்கிற உணர்வோடு தேவனை ஆராதிக்க வேண்டும் என்பதாயிருக்கிறது. நாம் தேவனை ஆராதிக்கும் போது நம் முழுக்கவனமும் அவர்மீது இருக்க வேண்டும். ஆராதனை யின் போது நம் அன்றாட வாழ்வின் காரியங்கள் வியாபாரம் பொழுது போக்கு அம்சங்களை நம் இருதயத்திலிருந்து அகற்றிவிட வேண்டும். ஏனென்றால், சர்வ வல்ல தேவன் நம்மை கண்காணித்துக் கொண்டிருக்கிறார். எப்படி மோசே எரிகிற முட்செடிக்கு முன்பாக நின்ற போது தான் நின்று கொண்டிருந்த இடம் பரிசுத்த பூமி என்பதை உணர்ந்து பாதரட்சைகளை கழற்றினாரோ, அதேபோல் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை ஏறெடுக்கும் போது உலகக் காரியங்களை நம் இருதயத்திலிருந்து முற்றிலுமாக அகற்றிட வேண்டும். நம் அன்றாட வாழ்வின் காரியங்கள் நம் கவனத்தை சிதறடிக்காதபடி நித்திய பிதாவின் சமூகத்தில் நம் இருதயத்தையும், மனதையும் மண்டியிடச் செய்ய வேண்டும்.

## நல்லொழுக்கமாயும் கிரமமாயும்

தேவனை நோக்கி ஏறெடுக்கப்படும் ஆராதனையில் சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்பட்டால் தான் அந்த ஆராதனை தேவனால் ஏறெடுக்கப்படும். சகலமும் நல்லொழுக்க மாயும் கிமமாயும் செய்யப்படக்கடவது (I கொரிந்தியர் 14:40). சபை கூடிவரும் போது பலர் கூட்டமாக சேர்ந்து அவரவர் விருப்பப்படி காரியங்களைச் செய்வதனால் எவ்வித குழப்பமோ தடங்கலோ ஏற்படக்கூடாது. ஏனென்றால், சபை கூடிவருவதன் நோக்கமே பக்திவிருத்தி உண்டாக வேண்டும் என்பது தான்

## தாழ்மை

மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமை யுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மை யுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (II பேதுரு 5:5). இதை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜெபிக்கும்படி தேவாலயத்துக்குப்

போன பரிசேயன் மற்றும் ஆயக்காரனுடைய உவமையில் மிகத்தெளிவாக விளக்கியுள்ளார். அப்போது அந்த பரிசேயன் மற்ற மனுஷர்களைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரத் உபவாசிக்கிறேன், என் சம்பாத்தியத்திலெல்லாம் தசம பாகம் செலுத்தி வருகிறேன் என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டான் [லூக்கா 18:11,12]. அதே நேரத்தில் ஆயக்காரனோ தூரத்தில் நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என் மேல்க கிருபை யாயிரும் என்றான். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த ஆயக்காரனைப் பற்றிச்சொல்லும் போது அவனல்ல இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில், தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார் [வசனம் 14].

### பொருத்திப்பார்த்தல்

நாம் தேவனை பயத்தோடும், பக்தியோடும், ஒழுங்கும் கிரமமுமாக, உண்மையாக முழுமனதோடு ஆராதிக்க முயற்சிப்போம். இவைகளை நாம் செய்தால், தேவன் நம் ஜெபங்களுக்கு செவி சாய்த்து, நம் ஆராதனையை உறுதியாக ஏற்றுக்கொள்வார் என்று உறுதியாக நம்ப முடியும். ✝

---

*கிறிஸ்தவனின் அவசியமான பண்புகள்*

- எல்லா மனுஷருக்கும் முன்பாக யோக்கியமானவைகளைச் செய்வது [ரோமர் 12:17]
- எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பது [ரோமர் 12:18]
- பழிவாங்குவதில் ஒருபோதும் ஈடுபடாமலிருப்பது [ரோமர் 12:19]
- தீமைக்குப்பதிலாக நன்மையையே செய்வது [ரோமர் 12:21]

# கொடுத்தல் சம்மந்தமான நான்கு மனப்பான்மைகள்

*Four Attitudes Toward Giving*

Wade Webster

**நா**ன் அமெரிக்க ஐக்கிய தேசத்திலுள்ள **Memphis** பிரசங்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது என் ஆசிரியர்களில் ஒருவராகிய **james Dearman** என்பவர் கொடுத்தலைப்பற்றி வகுப்பில் சில குறிப்புகளை அல்லது சுருக்கமான வர்ணனையை கொடுத்தார். இந்தக் குறிப்பானது அர்வனா கர்த்தருக்கு ஒரு பலி பீடத்தைக்கட்டும் படி ஒரு களத்தைக் கொடுத்தபோது தாவீது ராஜா அர்வனாவைப் பார்த்து சொன்ன வார்த்தைகளிலிருந்து எடுக்கப்பட்டது. **ராஜா அர்வனாவைப் பார்த்து : அப்படியல்ல நான் இலவசமாய் வாங்கி என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தாமல் அதை உண்மையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன் என்று சொல்லி தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான்** (II **சாமுவேல்** 24:24).

இவ்வசனப்பகுதியிலிருந்து சகோதரர் Dearman கொடுத்தல் சம்பந்தமாக ஒவ்வொருவரும் வெளிப்படுத்தும் நான்கு மனப்பான்மை களைச் சுட்டிக்காட்டுகிறார்.

**முதல் மனப்பான்மை – “நான் கொடுக்கமாட்டேன்”** எனும் மனப்பான்மை. சிலருக்கு கொடுப்பதற்கே மனம் விரும்புவதில்லை. இவர்கள் ஆவிக்குரிய உலோபிகள்.

**இரண்டாவது மனப்பான்மை – ‘நான் கர்த்தருக்குக் கொடுக்கமாட்டேன்**’ எனும் மனப்பான்மை.

சிலர் கொடுக்க விரும்புவார்கள், ஆனால் கர்த்தருக்கென்று கொடுக்கவிரும்புவதில்லை. அவர்கள் ஏதாவது சங்கத்திற்கும் அதைச் சார்ந்த செலவுகளுக்கும் கொடுக்க முன்வருவார்கள். ஆனால், கர்த்தர் நிமித்தம் அவர்கள் கொடுக்க முன்வருவதில்லை.

**மூன்றாவது மனப்பான்மை – “எனக்கு நஷ்டம் ஏற்படுகிற தென்றால் கர்த்தருக்குக் கொடுக்க மாட்டேன்” .**

சிலர் கர்த்தருக்கு கொடுக்க விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால், தங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிற சூழ்நிலை வந்தால் கர்த்தருக்கு கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கு மீதமானவைகளை கொடுக்கவே விரும்புகிறார்கள், முதல்தரமானவைகளையல்ல.

**நான்காவது மனப்பான்மை – "எனக்கு செலவே இல்லாத ஒன்றை கர்த்தருக்கு கொடுக்கமாட்டேன்".**

சிலர் தியாகப்பூர்வமாக கர்த்தருக்கு கொடுக்கிறார்கள். அவர்கள் ஆடம்பர செலவு செய்வதை குறைத்துக்கொண்டு கர்த்தருக்கென்று அதிகமாகக் கொடுக்கிறார்கள்.

மேற்சொல்லப்பட்ட மனப்பான்மைகளில் உங்கள் மனப்பான்மை எதுவாக இருக்கிறது? நீங்கள் யாருக்கும் கொடுப்பதே இல்லையா அல்லது கர்த்தருக்கு கொடுப்பதற்கு மாத்திரம் மறுக்கிறீர்களா? நீங்கள் மீதமானவைகளை கர்த்தருக்கு கொடுக்கிறீர்களா? அல்லது சிறந்ததை கர்த்தருக்குக் கொடுக்கீறீர்களா? தாவீதைப் போல் விலைக் கிரயமாய் வாங்கி கர்த்தருக்கு காணிக்கையாகக் கொடுக்க வேண்டு மென்று நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.


✞

---

## கிருபை

- **தேவ கிருபை எல்லோருக்கும் இரட்சிப்பை அளிக்கிறது (தீத்து 2:11)**
- **கிருபை தேவனால் நமக்குக் கொடுக்கப்படுகிறது (ரோமர் 15:16)**
- **இயேசு கிறிஸ்து மூலமாக நமக்கு கிருபை அளிக்கப்படுகிறது (எபேசியர் 4:7)**
- **தேவன் நம்மிடத்தில் கிருபையை பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் (II கொரிந்தியர் 9:8)**
- **கிருபையிலிருந்து விழுந்து போகாதபடி நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டும் (கலாத்தியர் 5:4)**

# பரிசுத்த கைகளை உயர்த்தி




அன்றியும் புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தகைகளை உயர்த்தி எல்லா இடங்களிலேயும், ஜெபம் பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன். [I தீமோத்தேயு 2:8]. இவ்வசனத்தில் கைகளை உயர்த்தி எனும் சொற்றொடரை எடுத்துக் கொண்டு ஒருவர் ஜெபிக்கும் போது எப்படிப்பட்ட நிலையில் அல்லது தோரணையில் இருக்க வேண்டும் என்பதைப் பற்றித்தான் பவுல் பேசுகிறார் என்று எண்ணுகிறார்கள். இருந்தபோதிலும், இந்த வசனத்தில் பவுல் புருஷர்கள் ஜெபிக்கும் போது எப்படிப்பட்ட நிலையில் அல்லது தோரணையில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி பேசவில்லை, அக்கறைப்படவுமில்லை. மாறாக, ஜெபிக்கிறவர்களின் இருதயங்கள் மற்றும் ஜீவியங்களின் நிலையைப் பற்றித்தான் பேசுகிறார்.

வேதாகமம் முழுவதுமாக நாம் பார்க்கும் போது, பல்வேறுப்பட்ட சரீர நிலைகள் விவரிக்கப்பட்டிருகிறது. நிற்பது I ராஜாக்கள் 8:22, முழங்கால் படியிடுதல் [ தானியேல் 6:10], உட்காருதல் [ லூக்கா 22: 14,17], தரையில் கிடப்பது [II சாமுவேல் 12:16] கைகளை உயர்த்துவது [ நெகேமியா 8:6], கைளை உயர்த்தாமல் மத்தேயு26:39] சுவற்றை நோக்கி [II ராஜாக்கள் 20:2] தலை குனிந்து [யாத்திராகமம் 4:31] கண்களை ஏறெடுத்து [யோவான் 17:1]. ஜெபிக்கும் போது ஒரு குறிப்பட்ட தோரணையில் தான் இருக்கவேண்டுமென்பதற்கு வசன ஆதாரம் எதுவுமில்லை. ஜெபிக்கும் போது ஒருவருடைய அங்க நிலை தேவனுக்கு ஒரு பொருட்டே அல்ல. மாறாக, ஜெபிக்கிறவரின் இருதய நிலையே தேவனுக்கு அவசியமாகிறது. பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானமத்தைத் தேடி, அதைப்பின் தொடரக்கடவன். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்க மாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்கு கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது [I பேதுரு 3:11,12].

ஒருவருடைய பெரும்பாலான செயல்பாடுகளுக்கு ( வேலை செய்தல் I தெசலோனிக்கேயர் 4:11 ; சண்டையிடுவது சங்கீதம்144:1) போன்றவைகளுக்கு கைகளே பயன்படுவதால் கைகள் என்பது ஒருவருடைய செயல்களை அடையாளப்படுத்துகிறது (ஆதியாகமம் 16:2 மத்தேயு 6:3 ; மாற்கு 9:43).

ஒரு மனிதனுடைய செயல்கள் ( அது நல்லதாக இருந்தாலும் சரி, கெட்டதாக இருந்தாலும் சரி) அந்த மனிதனுடைய இருதய நிலையோடு நேரடியாக சம்மந்தப்படுகிறது ( மத்தேயு 12:34,35) ( மாற்கு 7:20-23). பாவம் செய்கிறவர்கள் அசுத்த கைகளை உடையவர்களாக சொல்லப்படுகிறார்கள் (ஏசாயா 1:15 ; எசேக்கியேல் 3:18, 20 ; யாக்கோபு 4:8). எனவே, ஒருவருடைய இருதயத்திலிருந்து ஜீவியத்திலிருந்து பாவத்தை நீக்கிப் போடுவது ஒருவருடைய கைகளை கழுவுவதற்கு அடையாளமாக பார்க்கப்படுகிறது ( உபாகமம் 21:6-9; சங்கீதம் 26:2 யாக்கோபு 48). பிலாத்து நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குத் தீர்ப்பு செய்கிற காரியத்தில் தான் குற்ற மற்றவன் என்பதைக் காட்டுவதற்காக தன் கைகளை கழுவினான் (மத்தேயு 27:24). சங்கீதக்காரன் இவ்விதமாக எழுதினார். கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதிலளித்தார். என் கைகளின் சுத்தத் திற்குத்தக்கதாக எனக்குச்சரிகட்டினார் (சங்கீதம் 18:20).

வேதாகமத்தில் கைகளை உயர்த்தியும், கைகளை உயர்த்தாமலும் ஜெபித்திருக்கிறார்கள். ஜெபிக்கும் போது ஒருவருடைய கைகள் அழுக்காக இருந்தாலும் சரி, சுத்தமாக இருந்தாலும் சரி அதற்கும் ஜெபம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் சம்மந்தமே இல்லை. ஒருவருடைய இருதயம் மற்றும் ஜீவியத்தின் நிலைதான் தேவனால் பார்க்கப்படுகிறது. ஆத்துமாவின் அழுக்காகிய ஒருவருடைய ஜெபத்தை தேவன் ஏற்றுக்கொள்வதற்கு தடையாக அமைகிறது ( ஏசாயா 59:1,2: சங்கீதம் 66:18). தேவன் ஏசாயாவிடம் இவ்விதமாக எழுதச் சொன்னார். நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன். நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன், உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. உங்களைக் கழுவி சுத்திகரியுங்கள். உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மாறாவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டு ஓயுங்கள் ( ஏசாயா 1:15,16). ஆகவே ஜெபத்தில் கைகளை உயர்த்துவதால் தேவன் உங்கள் ஜெபங்களுக்கு செவி கொடுக்கமாட்டார் (சங்கீதம் 66:18). இருந்த போதிலும், ஒருவருடைய ஆவிக்குரிய கரங்கள் பாவங்களிலிருந்து கழுவப்பட்டதாக இருந்தால் (சங்கீதம் 18:20,24;24:4) அவருடைய ஜெபங்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படும். (I பேதுரு 3:12)

I தீமோத்தேயு 2:8 ல் வலியுறுத்தப்படுவது கரங்களல்ல. பரிசுத்த கரங்கள். ஒருவர் ஜெபிக்கும் போது அவருடைய சரீரத்தோரணை ஒரு பொருட்டே இல்லை. அந்த நபருடைய இருதயமும், வாழ்க்கையையும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். (ரோமர் 12:11) எபேசியர் 1:4). ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய கரங்கள் சுத்தமாக இருந்தால் கைகளே இல்லாத மனிதனால் கூட ஜெபிக்க முடியும். அந்த ஜெபத்தை தேவன் ஏற்றுக் கொள்வார். ✝

# அடிச்சுவடுகள்

ஒவ்வொரு குழந்தையும் யாரோ ஒருவரைப் பின்பற்றும்;
அக்குழந்தையின் மாதிரி யார் என்பது நமக்குத் தெரியாது
அக்குழந்தை யாருடைய அடிச்சுவடுகளில்
செல்லும் என்றும் நமக்குத் தெரியாது

ஒரு சிறுபையன் தன் தகப்பனைப் போல
செய்யவும் நடக்கவும் முயற்சிக்கலாம்
தகப்பன் சொல்லும் காரியங்களைக் கவனித்து
அதே மொழி நடையை அவன் பிரதிபலிக்கலாம்;


ஒரு சிறு பெண் தன் தாயைப் போல
ஒழுக்க நெறிகளைக் கையாள விரும்புகிறாள்
தன் தாய் செய்யும் எல்லாவற்றையும் பார்த்து
அதை அப்படியே பிரதிபலிக்க விரும்புகிறாள்

உறவினராக இருந்தாலும் அயலகத்தாராக இருந்தாலும்
நீங்கள் மாதிரியாக இருக்க முடியும்
ஒவ்வொரு குழந்தையும் யாரோ ஒருவரைப் பின்பற்றும்
அதற்கு நீங்களோ நானோ மாதிரியாக இருக்கமுடியும்.

### அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

## கன்மலை அஸ்திபாரத்தின் மீது கட்டுதல்

Wayne Barrier




ஒரு கட்டிடம் அதன் அஸ்திபாரத்தை விட உறுதியாக இருக்க முடியாது. பூகம்பம் ஏற்படும்போது பூமி குலுங்கி கட்டிடங்கள் இடிந்து விழும் போது இந்த உண்மை நம் நினைவுக்கு வருகிறது. இதே விதி நம் பக்தி வாழ்க்கைக்கும் பொருந்துகிறதாக இருக்கிறது. நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 7:24–27 வசனங்களில் இவ்விதமாகப் போதித்தார்

**நான் சொல்லிய இந்த வார்த்தையைக் கேட்டு இவைகளின் படி செய்கிறவன் எவனோ அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.** நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து பெருவெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதின போது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 5–7 அதிகாரங்களில் பதிவு செய்திருக்கும் மலைப் பிரசங்கத்தைப் பார்க்க முடியும். இந்த அதிகாரங்கள் கிறிஸ்துவ மைய உபதேசத்தை சுருக்கமாக பதிவு செய்கின்றன. இயேசு கிறிஸ்து நம் ஆவிக்குரிய நலனுக்கும், தேவபக்தியுள்ள வாழ்க்கைக்கும் அவசியமான கட்டளைகளைக் கொடுத்தது மாத்திரமல்ல, தேவையான வழிகாட்டு நெறிமுறை களையும் வழங்கி இருக்கிறார். பவுல் கிறிஸ்துவின் உபதேசத்தை வாழ்க்கைக்கான அஸ்திபாரமாகக் குறிப்பிடுகிறார். **போடப்பட்டி ருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது** என்று சொல்கிறார். இந்த மாபெரும் பிரசங்கத்தின் சில முக்கிய அம்சங்கள் கன்மலையின் அஸ்திபாரத்திற்கு காரணங்களாக அமைகின்றன.

**மத்தேயு 5:1–12**

நீதியினிமித்தம் துன்பப்படுகிற ஆவியில் எளிமையானவர்கள், இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், தாழ்மையுள்ளவர்கள், சமாதானம் பண்ணு கிறவர்கள் பாக்கியவான்கள்.

**மத்தேயு 5:21– 30**

பாவம் நம் இருதயத்திலிருந்து புறப்படுகிறது, நம் நடத்தை நம் இருதயத்தை பிரதிபலிக்கிறது.

**மத்தேயு 6:5–13**

தேவன் தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்திற்கு பதிலளிப்பார்.

**மத்தேயு 6 :19–21**

வாழ்வில் ஒருவருடைய பொக்கிஷம் இப்பூமியில் வைக்கப் படுவதில்லை. மாறாக, பரலோகத்தில் சேர்த்து வைக்கப்படுகிறது.

**மத்தேயு 6 :33–34**

முதலாவது, தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேட வேண்டும். அப்படி நாம் செய்யும் போது தேவன் நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பார்.

**மத்தேயு 7:13–14**

பரலோகம் போகும் பாதை குறுகலானதும், இடுக்கமானது மாயிருக்கிறது. நித்திய அழிவுக்குச் செல்லும் வழி விரிவும், விசாலமுமாயிருக்கிறது.

**மத்தேயு 7:15–20**

கள்ளப் போதகர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

**மத்தேயு 7:21–23**

பிதாவின் சித்தத்தை அறிந்தவர்களும், அதை நிறைவேற்று பவர்களுமே இரட்சிக்கப்படுகிறார்கள்.

இன்னும் நிறைய போதனைகள் இந்தப் பிரசங்கத்தில் உண்டு. உங்கள் வாழ்க்கை உறுதியான அஸ்திபாரத்தில் கட்டப்பட மத்தேயு 5–7 அதிகாரங்களில் உள்ள ஒவ்வொரு வசனத்தையும் வாசியுங்கள். இவ்வுலகமானது கோடிக்கணக்கான மக்களால் நிரப்பப்பட்டிருந்தாலும் கூட பலருடைய வாழ்க்கை தோல்வியில்தான் முடிந்திருக்கிறது. கிறிஸ்துவின் சரீரத்திற்கு வெளியே இருப்பவர்களின் இறுதி தோல்வி மரணமே. உங்கள் வாழ்க்கை எவ்வகையான அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது?

✞

---

**தலைமைத்துவத்துக்கான தலை சிறந்த பண்புகள்**

- **வருங்காலத்தில் என்ன செய்யப்பட வேண்டும் என்பதை குறித்த தரிசனம் வேண்டும்**
- **நம்பத்தகுந்தவர்களை சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.**
- **சிறந்த பேச்சாற்றல் உடையவராக இருக்க வேண்டும்**
- **கடினமான காரியங்களைச் செய்ய உறுதிப்பாட்டுடன் இருக்க வேண்டும்.**
- **மற்றவர்களைப் பாராட்டி நம் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு தாழ்மையைப் பெற்றிருக்க வேண்டும்.**

### அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

## நமது சவால்

## Our Challenge

Greg Tidwell

**தி**யத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில், அக்கினி ஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவ குமாரன் சொல்லு கிறதாவது: **உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியை களிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.** (வெளி. 2:18,19).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தியத்தீரா சபைக்கு புத்தி மதிகளை வழங்குவதற்கு முன்பாக இப்பகுதியைத் தியத்தீரா சபையாரின் விசுவாசத்திற்காக அவர்களை மெச்சியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவர்களுடைய கடின உழைப்புக் காகவும், விடா முயற்சிக்காகவும் அவர்களை வெகுவாகப் பாராட்டு கிறார். அது மட்டுமல்லாமல் நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறது என்று சொல்லி மகுடம் சூட்டுகிறார். எவ்வளவு துடிப்புள்ள சபையாக இந்த தியத்தீரா சபை இருந்திருக்க வேண்டும். பழைய சாதனைகளை நினைத்து மெத்தனப் போக்கை கடைப்பிடிக்காமல் தொடர்ந்து கிறிஸ்துவினிமித்தம் முன்னேறத் துடித்திருக்கிறார்கள். பொதுவாக, கடந்த காலமானது நிகழ்காலத்தின் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துதகிறது. நம் அனுபவம் தேவனுடைய மகிமைக்காக மேலும் பல காரியங்களைச் செய்து முடிக்க நம்மைத் தூண்டுகிறது. பல நேரங்களில் கடந்த காலம் நாம் முன்னேறிச் செல்ல தடையாயிருக்க நாமே அனுமதி கொடுத்து விடுகிறோம். இது மிகவும் துரதிஷ்டவசமானது. நம் வாழ்வின் பெரும்பாலான நேரங்களில் கடந்த கால நினைவுகள் நம் முன்னேற்றத்திற்கு பெரும் தடைக்கற்களாக அமைந்து விடுகின்றன. நம் நிகழ்கால திட்டங்களுக்குத தடையாக கடந்த கால வெற்றிகளை அல்லது தோல்விகளை நாம் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது. மாறாக, வருங்காலத்தை வளப்படுத்த தேவையான அன்பு, விசுவாசம், சேவைமனப்பான்மை போன்றவற்றை தியத்தீரா சபையின் உதாரணத்திலிருந்து கற்றுக் கொண்டு தொடர்ந்து முன்னேறுவோம்.

தேவனுடைய பிள்ளையாகிய நாம் மிகப்பெரிய சுதந்தரத்தின் வாரிசுகளாயிருக்கிறோம். நமக்கு முன்பாக வாழ்ந்த தேவ தாசர்களின் கிரியைகள் பசுமையான நினைவுகளாக நம் மனதில் பதிக்கப்பட்டு, மதிக்கப்பட்டு கர்த்தருக்காக துடிப்பான காரியங்களைச் செய்யத் தூண்டுகோலாக அமைய வேண்டும். அவைகள் நாம் முன்னேறிச் செல்ல உந்தும் சக்திகளாக இருக்க வேண்டும். நாம் முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்யும் கிரியைகள் அதிகமாக, சிறந்ததாக இருக்க வேண்டும்.

✝

---

## பவுலின் பிரசங்கத்தைப் பற்றிய பார்வை

அபாயகரமான சூழ்நிலைகளை உள்ளடக்கிய இவ்வுலகில் ஒவ்வொரு சுவிசேஷப் பிரசங்கியாரும் பவுலின் பிரசங்கத்தை ஆராய்ந்து பார்க்கும்போது ஆவிக்குரிய உற்சாகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எபேசு பட்டணத்து மூப்பர்களோடு நடத்திய உணர்வுப்பூர்வமான கூட்டத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய ஊழியத்தைப் பற்றிய செய்தி, முறைமை பற்றிய காரியங்களை விரிவாக எடுத்துரைக்கிறார் [அப் 20:17-38].

**முதலாவது அவருடைய தனிப்பட்ட நடத்தையை கவனியுங்கள்.**

பவுலின் நடத்தை எல்லோரும் அறிந்த ஒன்றாக இருந்தது. அங்கே ஒளிவு மறைவு இல்லை! அவர் குற்றமற்றவராகவும், நிந்தைக்கு அப்பாற்பட்டவராகவும் இருந்தார். அவருடைய நடத்தை எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியாக இருந்தது. இந்த மாபெரும் பிரசங்கியார் காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளவில்லை. அதாவது, எல்லாக் காலங்களிலும் இவருடைய நடத்தை ஒரே மாதிரியாகத்தான் இருந்தது. இது அவருடைய வாழ்க்கையின் ஸ்திரத்தன்மையை நமக்குச் சொல்கிறது.

# சாத்தான் - நீங்கள் அவனை அடையாளங் காண்கிறீர்களா?
## Satan - Do You Recognize Him?

Betty Burton Choate

**தெ**ளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான். (I பேதுரு 5:7–9)



தேவன், நம்மை அழிப்பதற்கு இடைவிடாமல் துடித்துக் கொண்டிருக்கும் ஓர் அபாயகரமான எதிராளி நமக்கு இருப்பதாக எச்சரிக்கிறார். வேத வாக்கியங்களில் அவன் **சாத்தான், பிசாசு, ஒரு பழைய பாம்பு** என்றெல்லாம் அடையாளப்படுத்தப் படுகிறான். இப்படி இப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இந்த பெயர்களிலிருந்தே அவன் மோசமானவனாக உருவகபடுத்தப் பட்டிருக்கிறான். ஓவியர்கள் அவனுடைய உருவத்தைப் பற்றி ஓவியம் தீட்டும் போது அவனை கொம்புகளும், கூர்மையான பற்களும், திரிசூலம் போன்ற ஆயுதத்தைத் தாங்கி நிற்கும் ஒரு கொடூர அரக்கனாக காட்டுவார்கள். சாத்தனுடைய துன்மார்க்கமான உள்நோக்கத்தையும், குணங்களையும் நாம் புரிந்து கொள்வதற்கு, ஓவியர்கள் தங்கள் கற்பனைத்திறனை பயன்படுத்தியிருப்பதை நாம் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்.

முன்கூட்டியே எச்சரிப்பு விடப்படுவது முன்கூட்டியே நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதற்குத்தான். ஆனால், இங்கே பிரச்சனை என்னவென்றால், யாரும் அக்கொடிய அரக்கனை நேரில் பார்த்திராதபடியால் அவன் மாறுவேடத்தில் நம் ஜீவியங்களில் கள்ளத்தனமாக புகுந்து மிகப்பெரிய சேதங்களை ஏற்படுத்தி விடுகிறான்.

மறுபடியும் நம் பரமபிதா நம்மை இவ்விதமாக எச்சரிக்கிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள்

ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (மத்தேயு 7:15). இவ்வசனங்கள் பிசாசு பொய்யுக்குப் பிதா மட்டுமல்ல ( யோவான் 8:44), வஞ்சிப்பதில் வல்லவன் எனும் உண்மையை நமக்கு உணர்த்து கிறது. நாம் ஒரு கொடூர அரக்கனையோ, அல்லது ஓநாயையோ பார்த்தால் ஓடி விடுவோம் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால், கள்ளங்கபடமற்ற ஆடுகளிடமிருந்து யார் ஓடுவார்? எனவே, பொதுவாக சாத்தானின் சில மாறுவேடங்கள் என்ன?

பெரும்பாலும் சாத்தான் ஜனங்களுடைய பசி, மற்றும் சிற்றின் பத்தின் மூலமாகத்தான் அவர்களை அணுகுகிறான்; மதுபானம் மற்றும் போதை வஸ்துக்கள் பலருக்கு மகிழ்ச்சியை கொடுக்கின்றன. ஆனால், பலர் இவைகளுக்குள் மூழ்கி தங்கள் ஆரோக்கியத்தை கெடுத்த பிறகு அந்த கேளிக்கையான காரியங்களுக்குப்பின் பிசாசு ஒளிந்திருக்கிறான் என்று உணர்ந்து கொள்கிறார்கள். இதில் சோககரமான விஷயம் என்னவென்றால் பெருந்தீனி கூட அவனுடைய ஆயுதங்களுள் ஒன்றாயிருக்கிறது என்பது தான். பலருக்கு சில உணவு பதார்த்தங்களை தவிர்க்கவே முடியாது, அதன் விளைவாக அவர்கள் தங்கள் சரீரத்திற்கும் தீங்கிழைத்து, தங்கள் வாழ்நாளையும் குறைத்துக் கொள்கிறார்கள்.

சாத்தான் பொய், பித்தலாட்டம் மற்றும் ஒழுக்கமற்ற முறைகள் அல்லது வழிகள் மூலமாக ஏதோ ஒரு சாதனையை சாதிக்கும் விதத்தில் வருவான். சில கலாச்சாரங்களில் யாரையுமே நம்பமுடியாத அளவுக்கு பொதுஜனங்கள் மீது சாத்தான் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி யிருப்பதை நாம் உணர்ந்து கொள்வதற்கு முழுமையான ஆதாரங்கள் உள்ளன.

சாத்தான் சில பெண்கள் மற்றும் ஆண்களின் அழகின் மூலமாக பலரை காமவலையில் சிக்கவைத்து விடுகிறான். இந்த அழகான ஆண்களும், பெண்களும் பெலவீனமானவர்களை ஒழுக்கக்கேடான சூழ்நிலைகளில் தள்ள வேண்டுமென்ற ஒற்றை நோக்கத்திற் காகவே தங்கள் உடல்களைக் காட்டி மயக்குகிறார்கள்.

சாத்தான் போலியான சபைகளையும், போலியான சுவிசேஷத் தையும் கொண்டு ஜனங்கள் சத்தியத்தைக் காணாதபடி அவர்கள் கண்களை குருடாக்கிறான். அவன் கருவிகளாக பயன்படுத்தும் போதகர்கள் கடவுள் இல்லை என்று போதிப்பவர்களல்ல, தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கிக்கும் பிரசங்கிமார்கள் தான். தேவனுக்கான தேவை ஒவ்வொரு ஆத்துமாவிலும் ஆழமாக பதிந்திருக்கிறபடியால், சாத்தான் அந்த வெற்றிடத்தை பொய்களைக் கொண்டு நிரப்புகிறான்.

சாத்தான் மிகவும் நுணுக்கமும், சாதுரியமுமான திருடனா யிருக்கிறான். அவன் கிறிஸ்தவர்களை தங்கள் வருமானத்தில் சொந்த செலவுகள் போக மீதமானவைகளை கர்த்தருக்குக் கொடுக்கத் தூண்டுகிறான். அதுமட்டுமல்ல சாத்தான், சபைகள் தேவனுடைய பணத்தை ஊழியத்திற்கும், நற்கிரியைகளுக்கும் செலவு செய்ய விடாமல் தடுத்து சபை கட்டிடத்தை அழகுபடுத்துவது மற்றும் ஆடம்பர செலவுகளில் ஈடுபடவைக்கிறான்.

சாத்தான் சகோதரர்கள் மத்தியில் விரோதத்தையும், பகைமை யையும் உண்டாக்கி ஆத்துமாக்களை அழித்துவிடுகிறான். சில வேளைகளில், அவன் ஆள்த்துவ வித்தியாசங்களை தன் கருவியாக பயன்படுத்துகிறான். சில வேளைகளில் அவன் முதன்மையா யிருப்பதற்கான ஆசையைத் தூண்டி தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்திலிருந்து விலகிப் போகச் செய்துவிடுகிறான். மேற்சொல்லப் பட்டவைகளில் ஏதாவது ஒன்றால் கூட சபையைப் பிரிக்க முடியும். இதன் விளையாக ஆத்துமாக்கள் நித்திய நிதியமாக இழந்துபோவது தவிர்க்க முடியாததாயிருக்கிறது.

நேரத்தை விரயமாக்கும் பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுவது ஆவிக்குரிய பிரகாரமாக அபாயகரமானது. பொழுது போக்கே பாவமான காரியமல்ல. பல நேரங்களில் பொழுதுபோக்கு தேவனி டத்திலிருந்து நம் கவனத்தைச் சிதறச் செய்வது மாத்திரமல்ல நம் நேரத்தை விரயமாக்குகிறது. ஆகவே, இது பாவமாகிறது. அனுதினமும் தொலைக்காட்சி, வீடியோ கேம்ஸ் அல்லது இது போன்ற கேளிக்கை அம்சங்களில் நேரத்தை செலவழிப்பது தேவனிடம் செலவிடும் நேரத்தை கொள்ளை அடிப்பதால் இந்த செயல்பாடுகள் பாவச்செயல்பாடுகளாக மாறிவிடுகின்றன. கிறிஸ்தவர்கள் ஒரு பதிவேட்டை எடுத்து அதை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஜெபம், வேத வாசிப்பு, ஆராதனை, சுவிசேஷத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றிற்கு எவ்வளவு நேரத்தை செலவழிக்கிறோம் என்பதை ஒப்பிட்டுப் பார்த்து நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதை அறிந்து ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

சாத்தானின் மிகவும் சக்தி வாய்ந்த கருவிகளுள் ஒன்று நம்மை பரபரப்பாக வைத்திருப்பது தான். கிறிஸ்தவர்கள் இப்பூமியில் இழந்து போனவர்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்வதற்காகத்தான் விடப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களுக்கு தங்கள் நோக்கம் தெரிந்திருக்கிறது தேவனுடைய கரங்களில் கருவிகளாக தாங்கள் இருக்க வேண்டியவர்கள் என்பதை அறிந்திருந்தாலும் கூட உலகப் பிரகாரமான காரியங்களில் தங்களை மூழ்கடித்துக் கொள்வதால் தேவகாரியங்களைச் செய்வதற்கு அவர்களுக்கு நேரம் கிடைப்ப தில்லை. கிறிஸ்தவர்கள் இவ்விதமான சோதனை வலையில் விழுவது

பாவமான காரியமாக இல்லாவிட்டாலும் கூட சாத்தான் கிறிஸ்தவர் களை வேடிக்கைகள் விளையாட்டுகள், என்று பொழுது போக்கு அம்சங்களில் மூழ்கடித்து தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்கும், மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வதற்கும் நேரத்தை செலவழிக்கா மலிருக்கச் செய்து பாவம் செய்ய வைத்து விடுகிறான். மனசாட்சி ஒருவரை உறுத்தும் போது நாளை செய்யலாம் என்னும் இதமான வார்த்தைகளால் சாந்தப்படுத்தி விடுகிறான்.

கடைசியாக, இருதயத்தில் தேவனுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை வேறெதாவது எடுத்துக் கொண்டால் அல்லது தனிப்பட்ட கவனச் சிதறல்கள் அதற்கு காரணமாக இருந்தால் அது பிசாசின் கருவியாயிருக்கிறது. எல்லோரும் தன்னைப் போல துன்மார்க்கமாக இருக்கவேண்டுமென்பது அவன் ஆசையாயிருந் தாலும் கூட, சிலர் சரியானதைச் செய்ய விரும்புவார்கள் என்பதும் பிசாசுக்கு தெரியும். ஆகவே, ஜனங்கள் தேவனிடத்தில் அதிக பக்தியாயில்லாமல், அனலுமில்லாமல், குளிருமில்லாமல் வெது வெதுப்பான நிலையில் இருந்தால் அதுவே அவனுக்கு மிகப்பெரிய வெற்றிதான். இப்போதும் கூட, சாத்தானே ஜெயிக்கிறான்.

ஆம், சாத்தான் பல வேடங்களில் வருகிறான். கிறிஸ்தவர்கள் விழிப்புள்ளவர்களாக இருப்பதனால் அவனுடைய தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். அதிலும் குறிப்பாக, கிறிஸ்தவர்கள் தேவனுடைய சர்வாயுதத்தை தரித்துக் கொள்வதனால் சாத்தானிட மிருந்து தங்களை காத்துக்கொள்ளலாம்.

ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய், நிற்கவும் திராணியுள்ளவர் களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர் களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துபோடத் தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடக த்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணிய மென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும், ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் (எபேசியர் 6:14-18).

# வீட்டுப் பயிற்சியின் முக்கியத்துவம்

## The Importance Of Home Trainting

Ferman Carpenter



இவ்வுலக வாழ்க்கை மற்றும் நித்திய ஜீவனுக்கான அஸ்திபாரத்தை நிலை நிறுத்த பிள்ளைகள் வீட்டில் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

நம் பிள்ளைகள் இவ்வுலகில் பிறக்க வேண்டுமென்று நம்மைக் கேட்கவில்லை; ஆயினும், அவர்கள் இவ்வுலகில் இருப்பதற்கு பெற்றோர்கள் பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள். எனவே, பிள்ளைகள் இப்போது மகிழ்ச்சியாக இருப்பதற்கும், நித்தியத்தை எங்கே கழிப்பார்கள் என்பதை தெரிந்தெடுப்பதிலும் வீடு மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. உண்மையாகவே, பெற்றோர்களாக இருப்பது ஓர் அருமையான பொறுப்பாக இருக்கிறது.

தேவன் விரும்பும் வேலையைச் செய்து முடிக்கப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் ஆரம்ப வாழ்க்கையிலிருந்தே கவனம் செலுத்த வேண்டும். பெரும்பாலான பெற்றோர்கள் காலதாமதமாகும் வரை காத்திருந்து காரியங்கள் கைமீறிப்போகும் போது எங்கே தவறவிட்டோம்

என்று தங்களுக்குள்ளேயே கேள்வி கேட்டுக் கொள்கிறார்கள். மனோவா தானும் தன் மனைவியும் ஒரு குமாரனால் ஆசீர்வதிக்கப்பட போகிறார்கள் என்று அறிந்தபோது, அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும். அதை எப்படி நடத்த வேண்டும் என்று கர்த்தரிடம் கேட்ட காரியங்களிலிருந்து அநேக காரியங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும் [நியாயாதிபதிகள் 13:12]. மனோவா தன் குமாரன் பிறப்பதற்கு முன்பாகவே அவனைக் குறித்து அக்கறை உடையவனாக இருந்தான்.

தேவன் பெற்றோரைப் பார்த்து **பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து [ நீதிமொழிகள் 22:6] கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக என்று கட்டளையிட்டிருக்கிறார் [ எபேசியர் 6:4].** பெற்றோர்கள்தான் பிள்ளைகளை வளர்ப்பதற்கும், அவர்கள் நடக்க வேண்டிய வழியிலே நடத்துவதற்கும் பொறுப்பாளிகளாயிருக் கிறார்கள் என்பதை வேதாகமம் தொடர்ந்து வலியுறுத்துகிறது. பெற்றோர்கள் அப்பொறுப்பை மற்றவர்களிடம் ஒப்படைக்கவோ அல்லது பிள்ளைகள் வளர்ந்த பிறகு அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவோ கூடாது. பிள்ளைகளின் சிறுவயது முதல் அவர்கள் பெற்றோரின் கண்காணிப்பில் இருக்கும் வரை பிள்ளைகளுக்கு பெற்றோரே எல்லாவிதத்திலும் பொறுப்பாளிகளாயிருக்கிறார்கள். குழந்தைகளை சோதனைகளிலிருந்து தனிமைப்படுத்த முடியாது, ஆனால் பாவத்திலிருந்து அவர்களை பாதுகாக்க முடியும். எனவே தான், பிள்ளைகளின் சிறுவயதிலிந்தே பெற்றோரின் பொறுப்பு ஆரம்பமாகிறது.

பிள்ளைகளின் சரீரத் தேவைகளை சந்திப்பது பெற்றோர் களுடைய கடமையாக இருந்தாலும் கூட, அது பிள்ளைகளின் ஆத்துமாக்களை நஷ்டப்படுத்தி செய்கிற செயலாக இருக்கக்கூடாது. பெற்றோர் ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக் கிறார்களா? என்பதை பிள்ளைகள் உற்று கவனித்துக் கொண்டிருக் கிறார்கள். பெற்றோர் பிள்ளைகளுக்கு தங்கள் வார்த்தையின் மூலமாகவும், வாழ்க்கையின் மூலமாகவும் எதைப் போதிக்கிறார்களோ அதைத்தான் வருங்காலத்தில் பிள்ளைகள் அவர்களுடைய பிள்ளைகளுக்கு போதிப்பார்கள். பெற்றோர் சரீரப்பிரகாரமான காரியங் களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் பிள்ளைகள் வாழ்க்கையில் சோதனைகளை எதிர் கொள்ளும் போது விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவார்கள் என்று எதிர்

பார்க்க முடியாது. எனவேதான், கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். **இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றொருவனை சிநேகிப்பான் அல்லது ஒருவனை பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது (மத்தேயு 6:24).**

அருமையான பெற்றோர்களே! இவ்வுலகில் உங்கள் குழந்தையின் ஆத்துமாவை விட முக்கியமானது எதுவுமில்லை, அதுதான் நித்தியமானது. உங்கள் பிள்ளைகள் பட்டினியால் மரித்து, பரலோகத்தில் நித்தியத்தை கழித்தால் நீங்கள் வெற்றி பெற்றவர்களாகவே இருப்பீர்கள். ஆனால், மறுமுனையில் உங்கள் பிள்ளைகள் இவ்வுலகம் கொடுக்கும் எல்லாவற்றையும் பெற்றி ருந்தாலும் கூட நியாயத்தீர்ப்பு நாளில் இழந்து போனால் அவர்கள் வாழ்க்கை தோல்வியானதாகத்தான் இருக்கும். ஆகவேதான் பெற்றோர் வீட்டுப்பயிற்சியின் முக்கியத்துவத்தை ஒரு போதும், மறந்துவிடக்கூடாது.

✞

---

## *உறவுகள் மேம்பட*

- புன்னகைப் புரியுங்கள் புன்னகை ஒரு சர்வதேச மொழி. அதை நாம் பயன்படுத்துவோம்.

- ஒருவரைப் பெயர் சொல்லி அழைக்க வேண்டும். ஒருவரின் காதுக்கு இனிமையான ஓசை, அவருடைய பெயரைத் கேட்பதுதான்.

- நட்பாக இருந்து எல்லோருக்கும் உதவ வேண்டும். அதிக நண்பர்களை பெற்றுக் கொள்ள ஒரே வழி எல்லோரிடமும் நட்பாயிருப்பது தான்


கிறிஸ்தவ இல்லம்

# என்ன ஒரு சுதந்தரம்!

## What a Heritage!

Dwight Fuqna

யோவான் ஸ்நாகைனின் பெற்றோராகிய சகரியாவும், எலிசபெத்துவும் இவ்விதமாக விவரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் (லூக்கா 1:6). யோவான் ஸ்நானன் இப்படிப்பட்ட தேவ பக்தியுள்ள பெற்றோர்களை பெற்றுக் கொள்ளும் பேறு பெற்றிருந்தார்!



தேவ பக்தியுள்ள பெற்றோர்கள் உண்மையாகவே நமக்கு பெரிய ஆசீர்வாதமாய் இருக்கிறார்கள்! தங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்த்த, வளர்த்திக்கொண்டிருக்கிற பெற்றோர் பல நன்றிகளுக்குப் பாத்திரராயிருக்கிறார்கள் (எபேசியர் 6:4) என்ன ஒரு சுதந்தரம்!

தேவ பக்தியுள்ள பெற்றோருக்கு என்ன விளக்கம் கொடுப்பீர்கள்? அவர்களை எப்படி விவரிப்பீர்கள்? தேவனுடைய வார்த்தை அதற்கான விளக்கத்தைக் கொடுக்கிறது.

- தேவ பக்தியுள்ள பெற்றோர்கள் கர்த்தருடைய வழியிலே நடந்து, தங்கள் பிள்ளைகளையும் கர்த்தருடைய வழியிலே நடக்க கட்டளையிடுவார்கள் ( ஆதியாகமம் 18:19).
- தேவ பக்தியுள்ள பெற்றோர் தேவனுடைய சத்தியத்தை தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிப்பார்கள் ( ஏசாயா 38 :19).
- தேவ பக்தியுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளை எச்சரிக்கிறார்கள். (I தெசலோனிக்கேயர் 2:11).

✿ தேவ பக்தியுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகள் சரியான வழியில் நடக்கத்தக்க அவர்களை சிட்சிக்கிறார்கள் (எபிரெயர் 12:7)

✿ தேவபக்தியுள்ள பெற்றோர் பிள்ளைக்ள நடக்கவேண்டிய வழியில் அவர்கள் நடத்துகிறார்கள் (நீதிமொழிகள் 22:6).

வேதாகமத்தில் பெற்றோருக்கான மிகச் சிறந்த போதனை உபாகமம் 6:4–9 வசனங்களின் மோசேயின் ஆலோசனையில் காணப்படுகிறது.

இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உள் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும் வழியில் நடக்கிறபோதும் படுத்துக் கொள்ளுகிறயபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளை குறித்துப் பேசி அவைகளை உன்கையின்மேல் அடையாளமாகக் கட்டிக் கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும் உன் வாசல்களிலும் எழுதுவாயாக (உபாகமம் 6:4–9)

சுருக்கமாகப் பார்ப்போம்:

✿ தேவ பக்தியுள்ள பெற்றோர் உண்மையாகவே தேவனிடத்தில் அன்பு கூருகிறார்கள் (வ.4–6).

✿ தேவ பக்தியுள்ள பெற்றோர் பிள்ளைகளுக்காக நேரத்தை செலவழித்து, கர்த்தருடைய வழிகளை ஜாக்கிரதையாக பிள்ளைகளுக்குப் போதிக்கிறார்கள் (வ 7)


✿ தேவ பக்தியுள்ள பெற்றோர் விசுவாசத்திற்காக நின்று விசுவாசத்தின்படி வாழ்கிறார்கள் (வ 8–9).

சாலொமோன் ஞானி: **நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்திரம் வைத்துப்போகிறான்; பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காக சேர்த்து வைக்கப்படும்** (நீதிமொழிகள் 13:22). இது வெறுமனே சரீரப்பிரகாரமான சுதந்தரம் மட்டுமல்ல, இது விசுவாசத்தின் சுதந்தரம். என்ன ஒரு சுதந்தரம்!

# எபேசியர் : கிறிஸ்துவும், அவருடைய சபையும்

## Ephesians : Christ And This Church

Jim Lows



எபேசு பட்டணம் அந்நாட்களில் மிக முக்கியமான பட்டணமாக இருந்தது. இப்பட்டணம் பழங்கால உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாயிருந்த தீனாள் கோயிலின் பாதுகாவலகம் என்று தனக்குத் தானே பெருமைபட்டுக்கொண்டது. இப்படடணம் விக்கிரக ஆராதனைக்கு தன்னை ஒப்புக்கொடுத்த ஒரு மய்யமாக இருந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய இரண்டாம் சுவிசேஷப் பயணத்தின போது இந்த எபேசு பட்டணத்துக்கு போய் அங்கே ஆக்கில்லாவையும், பிரிங்கில்லாளையும் விட்டுச்சென்றார் (அப்போஸ்தலர் 18:19-12). இரண்டு வருடங்களுக்குப் பிறகு பவுல் மீண்டும் எபேசுக்கு, போய் மூன்று ஆண்டுகள் ஊழியம் செய்து, ஆசியா முழுவதும் சுவிசேஷத்தினால் நிரப்பியிருக்கிறார்(அப்போஸ்தலர் 19). சில வருடங்களுக்குப் பிறகு, ரோமாபுரியில் சிறையிலிருந்து எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், மற்றும் பிலேமோன் ஆகியன சிறை நிருபங்களை எழுதினார்.

மிகச்சிறந்த புதிய ஏற்பாட்டு புத்தகமான இந்த எபேசியர் புத்தகத்தை நாம் சேர்ந்து படிப்போம். இப்புத்தகத்தில் 1-3 அதிகாரங்களில் உபதேச காரியங்களையும், 4-6 அதிகாரங்களில் கிறிஸ்தவக் கடமையையும் நாம் கவனிக்க முடியும் இந்த எபேசியர் நிருபமும். பவுல் எழுதிய

நிருபங்களில் மிகச் சிறந்தவைகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. இன்னும சிலர் ஒரு படி மேலேப்போய் அமெரிக்காவிலுள்ள AIRZONA மாகாணத்திலுள்ள The Grandcanyon பன்னத்தாக்குக்கு ஒப்பாக இதைச் சொல்லியிருக்கிறார்கள்.

### எபேசியர் 1

இந்த அதிகாரத்தில் பவுல் தேவனுடைய கிருபையால் இரட்சிப்பு என்னும் உபதேசத்தை மிக விரிவாக விளக்கியிருக்கிறார், இதை தேவன் திட்டமிட்டார் (1:46) குமாரன் வாங்கினார் (1:712) பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினார் (1:13–14). பவுலின் ஜெபம் பரிசுத்தவான்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் ஆசீர்வாதங்களை ப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் எனும் ஆசையை வெளிப் படுத்துகிறது. இரட்சிப்பு உண்மையாகவே தேவனிடமிருந்து தான் ஊற்றெடுத்து வருகிறது. தேவனுக்குக் கீழ்படியும் யாவருக்கும் இரட்சிப்பு தேவனால் கொடுக்கப்படுகிறது ( எபிரெயர் 5:8,9).

### எபேசியர் 2

இந்த அதிகாரத்தில் பவுல் எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களில் மரித்திருந்ததாகவும், ஆனால் அவர்களுடைய கீழ்ப்படிதலிலுள்ள விசுவாசத்தைக் கொண்டு கிறிஸ்துவுக்குள் உயிர்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவுக்குள்ளான இந்தப் புதிய ஜீவன் ஒருவரை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்குகிறது (2:1–3). தடைகள் யாவும் தகர்த்தெறியப் பட்டிருக்கிறபடியால் இப்போது யூதர்களும், புறஜாதிகளும் ஒன்றா யிருக்கிறார்கள். விசுவாசிகள் ஒரே சரீரத்தின் அவயவங்களாகவும் பரிசுத்த தேசத்தின் குடிமக்களாகவும், ஒரே ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களாகவும் இருக்கிறார்கள் (I பேதுரு 2:110). இந்த ஆசீர்வாதங் களெல்லாம் தேவனுடைய அன்பு மற்றும் இரக்கத்தினால் விளைந்தவைகளாகும்.

### எபேசியர் 3

இந்தக் காரணத்திற்காகத்தான் கிறிஸ்து தம்முடைய சபையைக் கட்டினார் ( மததேயு 16:18) அவருடைய சபையானது. அவருடைய சுவிசேஷ செய்திக்கு கீழ்ப்படிவதன் மூலமாக அவரிடத்தில் மனந் திரும்புபவர்களுக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய நித்திய திட்டம் நிறைவேற்றத்தக்கதாக, அதாவது சபையில் யூதர்களும், புறஜாதிகளும் அங்கம் வகிக்கத்தக்க அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் பவுலின் மாபெரும் பணியை அங்கீகரித்தார்.

## எபேசியர் 4

இயேசு கிறிஸ்துவுக்குள் எல்லா கிறிஸ்தவர்களும் ஒன்றாயிருக் கிறார்கள் ( கலாத்தியர் 3:28), ஆனால், நம் அன்றாட வாழ்வில் ஆவிக்குரிய ஒற்றுமையை மெய்யாக்கப் பாடுபட வேண்டும். ஒற்றுமை சபையை கட்டும். ஒற்றுமையின்மை என்பது சாத்தானின் வேலையாக இருந்து, சபையை அழிக்கிறது (4:1–13). நாம் கிறிஸ்துவைப் போலிருப்பதற்கு ஆவிக்குரிய பிறப்பு காரணமாய் இருப்பது போல் ஆவிக்குரிய வளர்ச்சியும் இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார் (I பேதுரு 1:22–2:3) நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளருகிறபடியால் சத்தியத்தை அன்புடன் கைக்கொள்வதன் அவசியத்தையும் (4:15) நேர்மையான வாழ்க்கை வாழ்வதற்கான அவசியத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் ( 4:17–32).

## எபேசியர் 5

இந்த அதிகாரத்தில் பவுல் இயேசு கிறிஸ்துவின் தியாகத்தை நமக்கு நினைப்பூட்டுகிறார். (5:1–7). மேலும், பவுல் ஒளியில் நடப்பது ஆவிகுரிய கனியை உண்டாக்குமென்று நம்மை ஊக்கப்படுத்து கிறார் (5:8–14; கலாத்தியர் 6:14–18). அதன் பின்பு (5:1517) வசனங்களில் ஞானமுள்ளவர்களாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துகிறார். கடைசியாக, பவுல் நம்மை திருமண உறவை மையப்பொருளாக காட்டி, கிறிஸ்துவுக்கும், கிறிஸ்தவர்களுக்கும். நமக்குமுள் உறவை விரிவாக விவரிக்கிறார் (5:22–23).

## எபேசியர் 6

புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் ஒரு தேவனுடைய பிள்ளை கிறிஸ்தவத்தன்மையை வீட்டிலும், வேலை ஸ்தலங்களிலும், பள்ளியிலும், கல்லூரியிலும் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் கிறிஸ்தவத் தன்மையை வெளிப்படுத்துவார். பிள்ளைகள் வீட்டில் கிழ்ப்படிய கற்றுக் கொள்ளாவிட்டால் வெளியே எந்த அதிகாரத்திற்கும் கீழ்ப்படிவதற்கு வாய்ப்பே இல்லை. கிறிஸ்தவ பெற்றோர்கள் வாழ்க்கையின் எல்லாப் போராட்டத்தில்திலும் எல்லோருக்கும் பொதுவான சத்துருவான சாத்தானை எதிர்கொள்ள தங்கள் பிள்ளைகளை தயார்படுத்த வேண்டும். நம்முடைய எதிராளியான பிசாசை எதிர்கொள்வதை குறித்து தீவிரமாக சிந்தித்து கொண்டிருக்கும் அதே வேளையில் நமக்கு முன்பாகயிருக்கும் ஆவிக்குரிய யுத்தத்திற்கு ஆயத்தப்பட ஆயத்தப்பட வேண்டும். எனவே, தேவனுடைய வார்த்தையை உங்கள் ஆயுதமாகக் கொண்டு உங்களைப் பாதுகாத்து உங்கள் சத்துருவை தோற்கடியுங்கள்?

வசனப்பகுதி பாடங்கள்

# மாற்கு நற்செய்தி நூல்

## The Gospel of Mark

David Shannon

மாற்கு நற்செய்திப் புத்தகத்தில் அதன் ஆசிரியர் **உடனே** எனும் வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துவதால் அவ்வார்த்தை இப்புத்தகத்தில் தனித்து நிற்கிறது. மூல மொழியான கிரேக்க மொழியில் இதற்கு Eutheosl எனும் பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது நாம் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

**மாற்கு 1:20–ல் 'உடனே' அவர்களையும் அழைத்தார்; அப்பொழுது அவர்கள் தங்கள் தகப்பனாகிய செபேயுவைக் கூலியாட்களோடு படவிலே விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்.**

நாம் உடனே இயேசு கிறிஸ்துவுக்குப் பின் செல்ல வேண்டுமென்பது அவருடைய விருப்பமாயிருக்கிறது.

**மாற்கு 1:21 பின்பு கப்பர்நகூமுக்குப் போனார்கள். உடனே அவர் ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திலேயே பிரவேசித்து, போதகம் பண்ணினார்.** தேவனுடைய வார்த்தையைப் பேசுவதற்கு இயேசு கிறிஸ்துவுக்கு வாய்ப்பு கிடைத்த போது, உடனே அவர் அதை பயன்படுத்திக்கொண்டார்.

**மாற்கு 2:8 அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து அவர்கள் நோக்கி: நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன?** இயேசு கிறிஸ்து நம் இருதயத்தின் சிந்தனைகளை உடனடியாக அறிந்து கொள்கிறார்.



எல்லோருக்கும் நம் வார்த்தைகளும், செயல்களும் மட்டுந்தான் தெரியும்! உங்கள் இருதயத்தைப் பற்றியும் என் இருதயத்தைப் பற்றியும் அவர் என்ன நினைக்கிறார்?

**மாற்கு 3:6 உடனே பரிசேயர் புறப்பட்டுப்போய், அவரைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடே கூட ஆலோசனை பண்ணினார்கள்.** பரிசேயர்கள் தங்கள் ஓய்வு நாள் பாரம்பரியங்களை மீறியபடியால் இயேசு கிறிஸ்துவை பகைத் தார்கள். மேலும், ஓய்வுநாளில் அவர் சுகப்படுத்தினபடியால் அவரை கொலை செய்ய உடனே தீர்மானித்தார்கள். கிறிஸ்துவின் போதனைகள் நம் செயல்களை சிந்தனைகளை, பாரம்பரியங்களை மீறினால் நம் உடனடி பதில் என்னவாயிருக்கும்?

**மாற்கு 4:15 வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப் போடுகிறான்.** சிலர் பிரசங்கங்களைக் கேட்டு வேத வாக்கியங்களை வாசிக்கிறார்கள். ஆனால், அவர்கள் அவைகளை இருதயத்திற்கு எடுத்துச்சென்று பயன்படுத்துவதற்கு பதிலாக உடனே மறந்து விடுகிறார்கள் (மாற்கு 4:24). இன்னும், தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போட பலனற்றுப் போகிறார்கள்.

**மாற்கு 9:24 'உடனே' பிள்ளையின் தகப்பன் : விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிச்செய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்.** இழுப்பு நோய் கொண்ட ஒரு பையனுடைய தகப்பன் இயேசு கிறிஸ்து விசுவாசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அங்கே அந்த சிறு பையனுடைய தகப்பன் விசுவாசம் வளர்வதற்கான தன்னுடைய ஆசையை வெளிப்படுத்தினார்; என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னார். இதுதான் நம்முடைய ஊக்கமான ஜெபமாக இருக்க வேண்டும்!

**உங்கள் உடனடியான செயல்கள், வார்த்தைகள். இருதயத்தின் உள்நோக்கங்கள் தேவனைச் சார்ந்திருக்கின்றனவா? நாம் அவருக்கு உடனடியாக சேவை செய்வோம்! காத்திருக்க வேண்டாம்!** ✞

## வேதாகமக் கேள்விகள்

# ஒய்வு நாளை கிறிஸ்தவர்கள் அனுசரிக்க வேண்டுமா?

## Is the Sabbath the Day Christians Should Obleive?

Maxie B.Boren

மத உலகில் கணிசமான மக்கள் ஒய்வு நாளானது கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற எல்லோராலும் அனுசரிக்கப்படவேண்டுமென்று நம்புகிறார்கள். இப்படி பிடிவாதமாக இருக்கிற கூட்டத்தாரில் ஒரு பிரிவினர் தங்களை என்று அழைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களுடைய நிலைப்பாடு சரியானதா? இது பற்றி வேதாகமம் என்னப் போதிக்கிறது?

முதன் முதலில் வேதாகமத்தில் ஏழாம்நாள் என்னும் வார்த்தை ஆதியாகமம் 2:2 ல் இடம் பெற்றிருக்கிறது. இது தான் பின்னாளில் ஒய்வு நாள் என்று பலரால் பெயர் சூட்டப்பட்டது. இங்கே வசனம் சொல்கிறபடி **தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி தாம் உண்டாக்கின தம்முடைய கிரியை களெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.** மூன்றாம் வசனத்தில் தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார் என்று நாம் பார்க்கிறோமே தவிர அந்த நாளை எல்லோருமே அனுசரிக்க வேண்டுமென்று எந்தக் கட்டளையையும் கொடுக்கவில்லை.

வாரத்தின் ஏழாவது நாள் முதன் முதலாக கர்த்தருக்குரிய ஒய்வு நாள் என்று யாத்திராகமம் 16:25ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் 16:23-30 வசனங்களில் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியேறிய பிறகு வனாந்திரத்தில் மன்னாவை சேகரிப்பது சம்பந்தமாக அவர்களுக்கு தேவன் கொடுத்த கட்டளைகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மறுபடியும் இந்த வசனப்பகுதியில் ஒய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசாரிக்க வேண்டுமென்று கட்டளை ஒன்றும் கொடுக்கப்படவில்லை. மாறாக, ஆறுநாட்கள் மன்னாவை சேகரித்து ஏழாம் நாள் ஓய்ந்திருப்பதை பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், யாத்திராகமம் 20:8-11 மோசே மூலமாக தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்த கட்டளையில் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து தேவன் அவர்களை விடுவித்ததை நினைவு கூரும் விதமாக ஒய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கும்படியாக கட்டளைக் கொடுக்கப்பட்டிருந்தது (உபாகமம் 5:2-6: 13-16). ஒய்வு

நாளை பரிசுத்தமாய் ஆசாரிக்க வேண்டுமென்று சொல்கிற இந்த ஏழாம் நாள்காரர்கள் பழைய ஏற்பாட்டின் மற்ற பிரமாணங்களையும் கடைபிடிக்க வேண்டுமல்லவாக? அப்படிச்செய்வதற்கு இவர்களுக்கு விருப்பமில்லை. இந்த ஓய்வு நாள் கொள்கையை மாத்திரம் இறுக்கமாய் பிடித்துக் கொள்கிறார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் ஓய்வு நாளில் கதிர்களைக் கொய்ததைப் பார்த்த பரிசேயர்கள் அதினிமித்தம் கிறிஸ்துவை சிக்க வைக்க அவரிடம் சில கேள்விகளைக் கேட்டார்கள். அதற்கு பதிலளித்த நம் இரட்சகர், மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை. ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது என்றார் (மாற்கு 2:27). ஓய்வு நாட்களுக்கு ஆண்டவராக இருக்கிற இயேசு கிறிஸ்து ஓய்வு நாளை உள்ளடக்கிய பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களை கடைப்பிடித்தாரா? இல்லை? ஆம், அப்படியே செய்தார் (லூக்கா 24:44,45). ஆயினும்,பழைய பிரமாணத்தை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையின் மேல் ஆணியடித்தார் என்பதை வேத வசனம் தெளிவுபடுத்துகிறது ( கொலோசெயர் 2:8-17). கலாத்தியர் 3:10-29; ரோமர் 3:20-27 , எபேசியர் 2:11-18, அப்போஸ்தலர் 15:1-11; Iகொரிந்தியர் 3:118 (வசனங்களை வாசிக்கவும்) சத்தியத்தைத் தேடும் நேர்மையுள்ள ஒரு நபரால் மேற்சொல்லப்பட்ட வசனங்களை வாசித்துவிட்டு மோசேயின் பிரமாணம் இன்னும் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்துகிறது என்று சொல்லவே முடியாது. ஓய்வு நாளை ஆசரிப்பது, பழைய பிரமாணத்தின் ஒரு பகுதி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் பழைய பிரமாணத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. எனவே, பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியாகிய ஓய்வுநாளை நாம் இப்போது பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டிய அவசியமில்லை. புறஜாதிகள் ஓய்வுநாளை ஆசாரிக்கும்படியாக கட்டளையிடப்படவில்லை. அது கிறிஸ்து வரும்வரை இஸ்ரவேலருக்கு மட்டும் கொடுக்கப்பட்ட பிரமாணம் (கலாத்தியர் 3;16:19, 23-25). கிறிஸ்து இப்பூமிக்கு வந்த போது, அவர் பழைய பிரமாணத்தை நிறைவேற்றி புதிய பிரமாணத்தை புதிய உடன்படிக்கையை ஸ்தாபித்தார். இன்று எல்லோரும், யூதர்களும், புறஜாதிகளும் அந்த உண்மையை ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கணக்கெடுப்புவிக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

(மத்தேயு 28:18; அப்போஸ்தலர் 2:36) கிறிஸ்துவின் பிரமாணத்தில் ஓய்வு நாளை ஆசரிக்கும்படிக்கு எந்த கட்டளையும் கிறிஸ்தவர் களுக்கு கொடுக்கப்படவில்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் தான் உயிர்த்தெழுந்தார் ( மத்தேயு 28:1–10; மாற்கு 16:1–10; லூக்கா 24:1–10; யோவான் 20:1–10). சபையானது பெந்தெகொஸ்தே நாளில்தான் ஸ்தாபிக்கப்பட்டது: அது எப்போதுமே வாரத்தின் முதல் நாளில் தான் வரும் அப்போஸ்தலர் 2; லேவியராகமம் 23:15–16. ஆதித்திருச்சபை வாரத்தின் முதல்நாளில் தான் சபையாகக் கூடியது (அப்போஸ்தலர் 20:7 I கொரிந்தியர் 16:2). பெரும்பாலான வேத வல்லுநர்கள் இந்த நாள் வெளிப்படுத்தின விசேஷம் 1:10 ல் குறிப்பிட்டிருக்கும் கர்த்தருடைய நாள் என்பதில் ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். சத்தியத்தை உண்மையாக நேசிக்கும் ஒருவருக்கு பரிசுத்த வேதாகமமே எல்லாவற்றிற்கும் போதுமானது என்றாலும் கூட உலக வரலாறு கூட சபை கூடுவது வாரத்தின் முதல்நாள்தான். வாரத்தின் கடைசி நாள் அல்ல என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறது.

மேலும், சிலர் வாரத்தின் முதல் நாளை கிறிஸ்தவ ஓய்வு நாள் என்றழைக்கிறார்கள், இதுவும் தவறானது. இச்சொற்றொடரை நாம் வேதாகமத்தில் எங்குமே காணமுடியாது. வாரத்திற்கு ஏழுநாட்கள் உண்டு என்பது வேத அடிப்படையிலானது தான். ஆனால், ஒவ்வொரு நாளும் கிரகங்களின் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. இதற்கு மிகச்சிறந்த உதாரணம் ஞாயிற்றுக்கிழமை. ஞாயிறு என்றால் சூரியன். முற்காலங்களில் சிலர் சூரியனை கடவுளாக வணங்கினார்கள். அதனால் தான், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கிரகங்களின் பெயர்களைத் தாங்கி வரும் கிழமைகளை உச்சரிப்பதைத் தவிர்த்தார்கள். இன்றைய நாட்களில் கூட கிரகங்களின் பெயர்களைத் தாங்கி வரும் கிழமைகளை உச்சரிப்பதை நாம் தவிர்க்க நினைத்தாலும் உலகத்தில் பெரும்பாலானோர் அப்பெயர்களையே பயன்படுத்துவதால் நாமும் அவர்களோடு ஒத்துப் போக வேண்டியிருக் கிறது. இருந்தபோதிலும், பல கடவுள்களை வழிபடுபவர்கள் ஞாயிறு அல்லது சூரியனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போல் நாமும் முக்கியத்துவம் கொடுக்காமல், அந்த நாளுக்கு அல்லது வாரத்தின் முதல் நாளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அதில் தவறொன்று மில்லை.

ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்பது போன்ற பிரமாணங்களை உள்ளடக்கிய மோசேயின் பிரமாணத்தின் கீழ் இன்று யாருமில்லை.

## சத்திய வழி

❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி**


❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜூனன்**

❖ தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி

❖ நம்பிக்கை TV : வெள்ளி 8:00 – 8:30 மணி

❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்


<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**

❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 காலை 7.00 மணி

அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி

❖ **Good News TV** : செவ்வாய் இரவு 7:30 – 8.00 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை


❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

**நம்பிக்கை** TV **வெள்ளி காலை 7:30 – 8.00 மணி**

**தமிழன்** TV **சனி காலை 7:00 – 8.00 மணி**

**மாத இதழ் : திருமறை ஆசான்**

---

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

<u>தொடர்புக்கு</u>

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.

---

**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள்** (Tracts) **வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**

**E.Z.S. ராஜநாயகம் : 98427 30382**

**P.R. சுவாமி : 098440 70763**

**P.C. பிலேமோன் ராஜா: 9244204420**

**B. அர்ஜுனன் : 994435 58041**

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ....................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ____________________

தெரு / ரோடு : ____________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ____________________